தெற்குச்சீமையில் தீன் குலத்திலகம்

மௌலானா B.A.கலீலுர்ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத்

செ.திவான் எம்.ஏ.,எம்.ஃபில்.,

தெற்குச்சீமையில் தீன் குலத்திலகம்

மௌலானா
B.A.கலீலுர்ரஹ்மான்
ரியாஜி ஹஜ்ரத்

செ.திவான்

வெளியீடு

நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ்

மதுரை - 625 020.

Ph: 0452-4396667 Cell: 90803 30200

நூல் குறிப்பு

நூலின் தலைப்பு	:	தெற்குச்சீமையில் தீன்குலத்திலகம் மௌலானா B.A.ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் (ரஹ்)
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2022, ஆகஸ்ட் 1
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	96
அச்சிட்டோர்	:	நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், மதுரை. போன் : 0452 - 4396667, 9080330200
விலை	:	ரூ. 75/-

ISBN No.: 978-93-92351-20-4

மதிப்புரை

தெற்குச்சீமையில் தீன்குலத்திலகம் மௌலானா அல்ஹாஜ் *B.A.*கலீலூர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை வாசிக்கும் பேறு பெற்றேன். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற இஸ்லாமிய சேவை செய்த உலமாக்களில் மிகவும் முன்னணி வகிப்போரில் ஒருவரான தென்னாட்டு முஜத்தித் அல்லாமா மௌலானா கலீலூர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களின் வாழ்க்கை. அவர்களின் பின் தொடர்ந்த இளைய உலமாக்கள் மாணவர்களுக்கு ஒரு முன் மாதிரி என்று சொன்னால் அது மிகையல்ல.

மௌலானா ரியாஜி ஹஜ்ரத் அவர்களை நேரில் பார்க்க பாக்கியம் பெறாதோர் மௌலானா அவர்களின் உணர்வுகளை அடியெற்றி தங்கள் சமுதாய சேவையை அமைத்து கொண்ட மவ்லானா *T.J.M.*ஸலாஹுத்தின் ரியாஜி ஹஜ்ரத் மவ்லானா. பத்ஹுல்லாஹ் ஹஜ்ரத் மவ்லானா *AEM* அப்துர் ரஹ்மான் ஹஜ்ரத் மவ்லானா ஸைபுத்தீன் ரஷாதி ஹஜ்ரத் போன்ற ஆலிம்களின் உணர்வுகளை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

சமுதாயப் பிரச்சனைகளில், இஸ்லாத்திற்கெதிரான நிலைகளில், குர்ஆனுக்கு மாற்றமான கருத்துகளில், ஹதீதுகளுக்கு முரண் சொல்லும் நேரங்களில், இமாம்கள் மத்ஹபுகள் தேவையில்லை, என பிதற்றிய தருணங்களில் வங்கக்கடல் ஆர்பரிப்பதைப் போல் சிங்கமென சிலர்த்தெழுந்து சமுதாயத்தை தட்டியெழுப்பி விழிப்புணர்வு கொள்ளச் செய்து மேற்படி சதிகாரர்கள் கதி கலங்கும் வகையில் தங்கள் எழுத்தாலும், பேச்சாலும் வலிமையுடன் போராடி எதிரியை வலிமை இழக்கச் செய்யும் வித்தகர் மௌலானா கலீலூர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத்.

வருடம் ஐம்பதுகளில் இருந்து எண்பதுகள் வரை சற்றேறத்தாழ நாற்பதாண்டுகளுக்கு மேலாக மௌலானா அவர்களின் சேவையை மறக்க முடியுமா?

ஜமாஅத்துல் உலமா சபையை தோற்றுவித்து அதன் பொதுச் செயலாளராக, தலைவராக பரிணமித்து சேவையாற்றியதை மறக்க முடியுமா?

ரஹ்மத் எனும் இஸ்லாமிய கலை ஞான திங்கள் ஏட்டினை தொடங்கி அதனை சமுதாய வீதிகளில் கேடயமாக்கி இஸ்லாமிய சமுதாயத்தினரை நச்சரங்கள் நெருங்காவண்ணம் பாதுகாத்து அனைத்து உலமா பெருமக்களுக்கும் முன் மாதிரியாக திகழ்ந்தவர்கள் தான் மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள்.

தங்க நிறமேனி, வெள்ளைவெளேர் என்ற முகம், இறைஜோதி ததும்பிய விழிகள், துருக்கி தொப்பி, அதன்மீது கருப்பு குஞ்சரம், வெண்ணிற ஆடை, குடைபிடித்து நடை பயின்று நடந்து வரும் காட்சி, வர்ணிக்கும் சொல்லில் அடங்காது. மேடையேறினால் எதிரிகள் தாடை உடையும் அளவுக்கு பேசும்திறன். கருப்பு ஷேர்வாணி, கருப்பு வாஷ்கோட் இவைகள் அணிந்து வரும் கம்பீரம் இவர்களின் உருவ அமைப்புக்கு சாட்சியாகும் காண்போரின் கண்ணுக்கு குளிர்தரும் காட்சியாகும்.

இத்தகைய பெருமகனாரின் வாழ்க்கை வரலாற்றை தோண்டியெடுத்து தொடுத்திட்ட பெருமை வரலாற்று ஆய்வாளர் செ.திவான் அவர்களுக்கே உரித்தானது. அற்புதமாக அழகாக தேவையான விஷயங்களை இரத்தினச் சுருக்கமாக தொகுத்துள்ளார் செ.திவான் அவர்கள்.

ஒவ்வொரு ஆலிம்களும் சமுதாய மேன்மக்களும் இவ்வரிய வரலாற்று பேழையை வாசித்து தங்கள் வாழ்வில் நடைமுறைபடுத்த இந்நன்னூல் வகை செய்கிறது. வல்ல அல்லாஹ் இந்நூலின் நோக்கத்தை நிறை செய்வானாக.

ஆமீன்.

மூத்த இதழியாளர்
மௌலானா M.J.அன்வரி
துணை ஆசிரியர்
குர்ஆனின் குரல் மாத இதழ், மதுரை

பெரியகுளம்

அன்றைய அளநாடு (அழநாடு)

அன்றைய மதுரை மாவட்டம்

இன்றைய தேனி மாவட்டம்; அதில்

பண்டைய பெருவழியில் அமைந்த

முக்கியமான வணிக நகரம்

பெரியகுளம்

பெரியகுளம் என்பது

பெரிய ஏரியைச் சார்ந்த குடியிருப்பு என்ற

பொருளில் உருவான ஊர்

ராஜேந்திரசோழன் காலத்தில் கட்டப்பட்ட ராஜேந்திர சோழீங்வரர் ஆலயம் உள்ளது. கோயிலில் ஆறு கல்வெட்டுக்கள்; 1907 இல் படியெடுக்கப்பட்டது 1979 இல் தென்னிந்திய கல்வெட்டுத் தொகுப்பில் வெளியிடப்பட்டது.

கி.பி 1216 மாறவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டு பழமையானது.

முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனது கி.பி.1312 ஆம் ஆண்டு கல்வெட்டும் உள்ளது. சுந்தரபாண்டியனின் கல்வெட்டில் பெரியகுளம், 'தேசியறிய எறி வீரபட்டினம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ.உமர் பாரூக், அழநாடு தேனி மாவட்ட தொல்லியல் சுவடுகள், சென்னை, 2020, பக்கம் 124)

"இவ்வூருக்கு நாயக்கர் காலத்திலேயே **பெரியகுளம்** *என்ற பெயர் ஏற்பட்டிருப்பதைக் கல்வெட்டு தெரிவிக்கிறது" (கு.சேதுராமன், மதுரை பெரியகுளம் மடைக் கல்வெட்டு, ஆவணம் இதழ் 10, 1999, பக்கம் 71)*

சின்னமனூர் கல்வெட்டுக்கள் பெரியகுளம், உத்தமபாளையம் வட்டங்களாக உள்ள பகுதிகளை அளநாடு என்று குறிக்கின்றன. நாயக்க மன்னர்கள் காலத்தில் வடகரை ஜமீனாக இருந்தது.

ஜமீன்தார் ராமபத்ரநாயக்கர் 1904 இல் நகராண்மைக் கழகத்தின் தலைவராக இருந்து அரும்பணிபுரிந்தார் புதிய வேளாண்மை முறைகளைக் கடைப்பிடித்து பலருக்கும் வழிகாட்டினார். 1902 இல் இங்கு பள்ளிக்கூடம் துவங்கப்பட்டது. பெரியகுளம் வளமான பகுதியாகும் (சோமனல மதுரை மாவட்டம், வேதாரண்யம், 1980, பக்கம் 390 – 391, வராக நதிக் கரையின் வடக்கே அமைந்தது வடகரை. தெற்கே உள்ள பகுதி தென்கரை **'குளந்தை மாநகர்'**, **'குளந்தையூர்'** **'நெடுங்குளநாடு'**, **'ஆலங்குளம்'** என்ற பெயர்களும் பெரியகுளத்திற்கு உண்டு.

தற்போது மூன்றாந்தாலில் இருந்து இரண்டு கி.மீ தொலைவில் சோத்துப்பாறை செல்லும் ரோட்டில் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலமரத்திற்கும், அதனையடுத்து அமைந்துள்ள குழாய்த் தொட்டிக்கும் நடுவே 'மஞ்சத்துறை' மேற்குப் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

தீ விபத்து, அம்மை, பிளேக் நோய் தாக்கியதால் அடர்ந்த காட்டுப் பகுதியான தற்போதுள்ள பெரியகுளம் பகுதிக்கு மக்கள் குடிபெயர்ந்தனர். பெரியகுளம் ஒன்று இருந்தது. இதன் பெயரே ஊர் பெயராக பெரியகுளம் என்றானது.

(கம்பம், சோ.பஞ்சுராஜா, தேனி மாவட்ட வரலாறு, கம்பம் 2017, பக்கம் 68)

ரியாஜி ஹஜ்ரத்தின் முன்னோர்கள் – லாலாமியான் (ரஹ்)

பீடிகை

மாநபி (ஸல்) அவர்களின் வழித் தோன்றலில் வந்துதித்த ஆறு தலைமுறையினரின் அரிய சேவைகள்!

வாரிசுகள்:–

அரபி பிராந்தியத்தில் தோன்றிய இஸ்லாமிய பிரகாசம் அண்டை நாடுகளுக்கும் ஊர்களுக்கும் பரவி அகிலமெங்கிலும் ஒளி வீசிக் கொண்டிருந்த காலமது இவ்வாறே கியாம நாள் வரை இந்த தீனின் பிரகாசம் உலகில் எல்லா மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்றெண்ணி நபி பெருமானார்

(ஸல்) அவர்கள் தனது இறுதி கால ஹஜ்ஜத்துல் விதாவில் ஒரு லட்சத்திற்கும், மேற்பட்டவர்கள் முன்னிலையில் **பல்லிஉஷ் ஷாஜிது அல்காயிப** *இங்கு வருகை தந்து எனக்கு முன் வீற்றிருப்போர் மறைவில் இருப்பவர்களுக்கு தீனை எடுத்துச் சொல்வீர்களாக என்று பிரகடனம் செய்தார்கள்.*

இந்தக் கூற்றை ஏற்று நாளா திசைகள் நோக்கி பல நாடுகளுக்கு ஸஹாபாப் பெருமக்கள் சென்றனர். இதனடிப்படையில் தாபி ஈன்கள் தபஃதாபியீன்கள், ஹிஜ்ரத் சென்றார்கள். இப்படியாக நபி பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்த இஸ்லாம் என்ற ஜோதியை உயர்த்தி பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார்கள் அவர்கள் தீனே இஸ்லாத்திற்காக தங்களின் உடல், பொருள், ஆவி, அனைத்தையும் அர்ப்பணித்து அல்லாஹ்வின் அன்பையும், திருப் பொருத்தத்தையும் பெற்றார்கள், அவர்களுள் **முஹ்யித்தீன் அப்துல்காதர் ஜெய்லானி (ரஹ்)** *அவர்கள்* **இமாம் அபூஹனிபா (ரஹ்) அவர்கள், ஹஜ்ரத் ஜூனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள்** *போன்றோர் பக்தாது தேசவாசிகளின் பிரபலமானவர்கள்.*

ஹஜ்ரத் தின்னூல் மிஸ்ரி ஹஜ்ரத் சுப்யானுத் ஃதவ்ரி, இப்ராஹீம் இப்னு அத்ஹம் (ரஹ்) *போன்றோரும் இறைச் நேசச் செல்வர்கள் ஆவார்கள்.*

ஹஜ்ரத் காஜா முஹ்யித்தீன் திஷ்தி ஹஜ்ரத் உஸ்மான் ஹாருனி ஹஜ்ரத் குதுபுத்தீன் பக்தியார் காக்கி *போன்றோரும் ஷஞ்ஞரில் இருந்து இந்தியாவிற்குள் பிரவேசித்து தீன் பிரச்சாரம் செய்து மக்களிடையே தீனை புகட்டினார்கள்.*

இந்தியாவின் தென் பகுதியில் அரபு, பாரஸீகம் போன்ற தேசங்களில் இருந்து ஆயிரமாயிரம் வலிமார்கள் இத்தீவுக்கு வருகை தந்து தீன் பிரச்சாரம் செய்து தீனை பரப்பினார்கள்.

அவர்களுள் **தப்ளே ஆஃளம் நத்தர்ஷா வலியுல்லாஹ், அஜ்மீர் காஜாமுஹ்யித்தீன் திஷ்தி நாகூர் ஷாஹூல் ஹமீது பாதுஷா (ரஹ்)** *போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.*

இதைப் பின்பற்றி **மஹான் சைய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான் ஜி (ரஹ்)** *அவர்களின் வாழ்க்கை சரித்திரமும்*

வருகிறது. அவர்களின் ஆறு தலைமுறையின் அரிய சேவையையும் சற்று ஆராயலாம்.

அல் ஆரிபுபில்லாஹ் சைய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான் (ரஹ்) 1666 - 1736

மஹான் மாமேதை சைய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான்ஜீ (ரஹ்) அவர்கள் பார்ஸியை தாய் மொழியாகக் கொண்டு பாரஸீக நாட்டை சேர்ந்தவர்கள் இவர்கள், அரபி, உர்து, பார்ஸியில் ஞானக் கலைகளை கற்றறிந்த அறிஞராக திகழ்ந்தார்கள். இவர்கள் காலம் கி.பி. சுமார் 1666ம் வருடம் கி.பி.பதினாராம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உலகில் பெரும்பாலான பகுதிகளில் முஸ்லிம்களின் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம்! அக்காலத்தில் கலை, இலக்கியம், நாகரீகம், பத்வா, தஸவ்வுப் மன்திக், மருத்துவம், கணிதம் போன்ற துறைகளில் அரிய கண்டுபிடிப்புகள், வெளிப்படுத்திக்காட்டி இஸ்லாத்தின் கண்ணியத்தை உயர்த்திக் காட்டிக் கொண்டிருந்த நேரம். உலமாக்களும், இமாம்களும் கிப்லாவாக வழிகாட்டியாக திகழ்ந்த காலம்! அக்காலக்கட்டத்தில்தான்.

மஹான் சைய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான்ஜீ (ரஹ்) அவர்கள் உலமாக்கள் கூட்டத்தை தயார் செய்து **ஹக்கீகத்து தீன்** பரப்ப வேண்டும் என்று கருதி ஹிந்துஸ்தானில் முகலாயர்களின் சிறப்பு மன்னராக ஒளரங்கஜேப் பாதுஷா அவர்கள் ஆட்சி சீரும் சிறப்புடனும் இருப்பதை கேள்விப்பட்டு தன் சகாக்களை குதிரை மூலமாகவும், கால்நடையாகவும் பலநாட்களாக தீன் சுடரை ஏந்தியவர்களாக, ஹிந்துஸ்தானை நோக்கி வந்து கொண்டிருந்த வழியில் நகர மக்களுக்கும் கிராம மக்களுக்கும் தீனைப் பற்றியும் தவ்ஹீது ஏகத்துவத்தைப் பற்றியும் எடுத்துரைத்து மக்களுக்கு ஹிதாயத்தை ஏற்படுத்தச் செய்தார்கள். அது சமயம் மஹான் சைய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான்ஜீ அவர்களையும், தனது சஹாக்களையும் மாமன்னர் ஒளரங்கஜேப் அழைத்து கௌரவப்படுத்தி உபசரித்து கண்ணியப்படுத்தினார்கள். மேலும் இவர்கள் மன்னரின் மானியச் சொத்துக்களுக்கு

ஆசைப்படாமல் தீனைப் பரப்பிக்கொண்டு இருந்தார்கள். தென்னகத்தில் பல இடங்களில் சன்மார்க்க சேவை செய்துவரும் காலகட்டத்தில் மக்களுக்கு ஏற்படும் நோய் நொடிகளையும் தீங்குகளும் அல்லாஹுத்த ஆலாவின் உதவிகொண்டு இவர்களின் பிரார்த்தனையால் சுகமாகிக் கொண்டிருந்தது.

இவர்கள் தமிழகத்தில் தீன்சேவை செய்த ஒரு சில இடங்கள் வேலூர், ஆரணி, திருக்கோவிலூர், செஞ்சி, புலிகாட், கர்னால், மதுரை, திருநெல்வேலி (பழையபேட்டை இது குறிப்பிடத்தக்கது.) இங்கு அன்றைய காலத்தில் தீன் சேவை செய்து குடிசை பள்ளிவாசல் இருந்தது. பிறகு அவர் நினைவில் லாலாமியான் பள்ளிவாசல் கட்டப்பட்டது. அது இன்றும் பழைய பேட்டையில் கம்பீரமாக விளங்கிக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் கூட்டத்தில் வந்தவர்களில் ஒரு சிலர்கள் மதுரையில் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

மகான் அவர்கள் நாளடைவில் தீன் சேவையை மதுரை வட்டாரத்திலும் வத்தலக்குண்டு பெரியகுளம் வட்டாரத்திலும் செய்து பெரியகுளம் தென்கரையிலேயே நாளடைவில் வபாத்தாகி அடக்கமானார்கள். (1997 சையது லாலாமியான் ரஹ் அவர்களின் 330வது ஆண்டு நினைவு மலர்)

அவர்களில் மகான் செய்யது அபுபக்கர் ஹஜ்ரத் (காட்டு நைனார் ஒலியுல்லாஹ்) ஆவார்கள். இவர்களில் கூட வந்தவர்களில் மகான் செய்யது அப்துல் வஹ்ஹாப் லாலாமியான்ஜி (ரஹ்) அவர்களும் ஒருவர். இவர்கள் வயது 110 எனக் கணக்கிட்டுள்ளார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் வந்தவர்கள் ஆங்காங்கே ஒலிமார்களாக வலிமார்களாக அவ்லியாக்களாக அடக்கமானார்கள்.

அரபி, உருது, பார்ஸி மொழி கற்றறிந்த அறிஞர் **மகான் ஆரிபுபில்லாஹ் சையது அப்துல் வஹாப் லாலா மியான்ஜி (ரஹ்)**

(இறை அருள் உண்டாகட்டுமாக) அவர்களது காலம் கி.பி. 1666 - 1736 இஸ்லாத்தைப் பரப்பிட மாமன்னர் ஆலம்கீர் ஔரங்கஜேப்பைச் சந்தித்தார்கள். சில காலம் வட இந்தியாவில் பணிபுரிந்தார்கள். தெற்கே தீன் குரல் ஒலிக்கச் செய்திட தோழர்களுடன் வந்தார்கள்.

வட ஆற்காடு, தென் ஆற்காடு, வேலூர், வாணியம்பாடி, ஆரணி, திருக்கோவிலூர், செஞ்சி, மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டம் திருநெல்வேலி வந்தார்கள். **திருநெல்வேலி பழைய பேட்டையில்** அவர்கள் தங்கியிருந்ததின் நினைவாக **லாலாமியான் ஜும் ஆ** பள்ளிவாசல் அமைந்துள்ளது.

தனது இறுதிக்காலத்தில் வத்தலக்குண்டில் சிறிதுகாலம் மார்க்க சேவைகள் செய்துவிட்டு பெரியகுளம் வந்தார்கள். பெரும்பணி ஆற்றினார்கள். பெரியகுளத்தில் தனது 110வது வயதில் கி.பி.1736 இல் மறைந்தார்கள்

ஹஸ்ரத் சையது ஹுசேன்மியான் (ரஹ்)

அல்லாமா ஹஜ்ரத் சையது ஹுசேன் மியான் அவர்கள் சையது லாலாமியான்ஜீ (ரஹ்) அவர்களின் மகன் ஆவார்கள். இவர்கள் மார்க்கப் பற்று உள்ளவர்கள் தன் தந்தை வழியைப் பின்பற்றி மக்களுக்கு தீன் சேவை செய்தவர்களாக இருந்திருக்கிறார்கள். காலப்போக்கில் இவர்கள் மதுரை, திருநெல்வேலி, கேரளா சென்றார்கள் என்பது முன்னோர்களின் அறிவிப்பாகும். (1997 சையது லாலாமியான் ரஹ் அவர்களின் 330வது ஆண்டு நினைவு மலர்)

லாலாமியான் ஜி (ரஹ்) அவர்களின் புதல்வர் ஹஸ்ரத் சையது ஹுசேன் மியான் (ரஹ்) (1736 - 1816) தீன் பணியாற்றினார்கள். தந்தையைப் போலவே தெற்கில் பயணித்தார்கள். நெல்லை, பழையபேட்டை, சேர்மாதேவி கேரளம் வரை சென்றார்கள். தீரன் திப்புசுல்தானின் தளபதிகள் திண்டுக்கல்லில் இருந்த காலத்தில் தளபதி ஒருவர் வழியில் வந்த பெண்ணை மணந்தார்கள் என்பது வரலாற்று வழிவந்த செய்தியாகும். இவர்கள்தான்

திருநெல்வேலி பழைய பேட்டையில் தன் தந்தையாரின் நினைவாக லாலாமியான் ஜூம் ஆ பள்ளிவாசலை நிறுவினார்கள்.

ஹஸ்ரத் சையது அஹமது பாதுஷா மியான் (ரஹ்)

சையது ஹூசைன் லாலா மியான் (ரஹ்) அவர்களின் ஒரே மகன் தான் **சையது அஹமது பாதுஷா மியான்** *ஆவார்கள். இளம் வயதிலேயே மார்க்க கல்வி அறிந்தவர்களாகவும் மார்க்கத்தில் பிடிப்புள்ளவர்களாகவும் திகழ்ந்தார்கள். இவர்கள் பெரியகுளம் தென்கரையில் தன் வீட்டுத் திண்ணையை பிள்ளைகளை அழைத்து மார்க்கத்தைப் பற்றியும் அரபி, மக்தபு பாடங்களையும் நடத்துவதுடன், அன்றைய காலக்கட்டத்தில் பள்ளியில் இமாமத் சேவையை செய்வதுடன் தன் சொந்த நிலத்தில் விவசாயம் செய்து கொண்டு தன் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களை அன்றைக்கு இருந்த தென்கரை மஹல்லா மக்கள் ஹஜ்ரத் என்றும் அவர்களை பாதுஷாமியான் என்றும் அன்பாக அழைப்பார்கள் இவர்களிடத்தில் நெருங்கி ஓதியவர்களில் ஒருவர்தான்* **பெரியகுளம் தென்கரை ரசூல் கனி ராவுத்தர்** *என்பது குறிப்பிடத்தக்கதாகும்.*

ஹஜ்ரத் சையது அகமது பாதுஷா மியான் (ரஹ்) அவர்களுக்கு இரு குமாரர்கள்:

1. மௌலானா சையது இஸ்மாயில் லாலா ஹஜ்ரத் (ரஹ்)

2. மௌலானா சையது அப்துல் ரஹீம் பாகவி (ரஹ்) *(1997 சையது லாலாமியான் ரஹ் அவர்களின் 330வது ஆண்டு நினைவு மலர்)*

சையது ஹூசைன் மியானின் ஒரே புதல்வர் ஹஸ்ரத் சையது அஹமது பாதுஷா மியான் (ரஹ்) (1816 - 1890) *அரபி, உருது, பார்ஸி மொழிகள் குடும்ப வழிச் சொத்தாக இருந்தது இவர்கள் மிகக் கற்றறிந்த மேதையாவார்கள்.*

நபிமார்கள் செய்த ஆடு மேய்த்தல் ஹஸ்ரத் அவர்களுக்கு

பெரும் விருப்பம். விவசாயமும் விருப்பம் வாழ்வதற்கு வழிகாட்டியாக அது அமைந்தது.

மக்களை வாழவைப்பதற்காக பெரியவர் முதல் சிறியவர் வரை அனைவரையும் அழைத்து அவர்களுக்கு இறைஞானமும் மார்க்கக் கல்வியையும் போதித்தார்கள். வெள்ளையரை எதிர்த்து வீர முழக்கமும் செய்தார்கள். தென்கரையில் இவர்கள் பிரசங்கம் செய்யச் செல்லும்போது மக்கள் இவர்கள் குதிரையில் வைத்து அழைத்துச் செல்வார்கள். இவர்கள் மார்க்கப் பிரசங்கம் புரியும்போது பயன்படுத்திய ஊன்றுகோலும், வாளும் இன்றும் உள்ளது. (அல்லாமா லாலா ஹஸ்ரத் (ரஹ்) நினைவு சிறப்பு மலர், மஹான் லாலாமியான் (ரஹ்) கல்வி அறக்கட்டளை, தென்கரை பெரியகுளம், பக்கம் III)

மௌலானா சையது இஸ்மாயில் லாலாஹஸ்ரத் (ரஹ்)

காஜி சையது இஸ்மாயில் லாலா ஹஜ்ரத் அவர்கள் சையது அகமது பாதுஷாமியான் அவர்களின் மூத்த மகனாவார்கள். இவர்கள் சிறுவயதிலேயே மார்க்கத்தைப் பற்றி தன் தந்தை யிடம் கற்றறிந்து அதில் அரபி, உருது, பார்ஸி கலைகளை கற்றதுடன் அதிகம் தன் தந்தையிடம் பார்ஸியில் மார்க்க கல்வியை கற்று புலமை படைத்தார்கள். இவர்கள் தென்கரை பள்ளியில் இமாமாகவும் மஹல்லா தாரியாகவும் பணியாற்றி வந்ததுடன் மஹல்லாவில் நன்மை தீமைகளில் கலந்து மஹல்லா மக்களுக்கு உறுதுணையாக இருந்ததுடன் மஹல்லாவில் நடக்கும் பிரச்சனைகளை மஹல்லா மக்களை கூட்டி காஜி சையது இஸ்மாயில் லாலா அஜ்ரத் (ரஹ்) அவர்கள் சுமுகமாக முடித்து மக்களை மகிழ்விக்க செய்து சந்தோஷப்படுத்தி பிரச்சனைகளை தீர்த்து வைப்பார்கள். மஹல்லாவை, இவர்கள் கட்டுக்கோப்பாக வைத்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் தீரத்தையும், நேர்மையையும் அன்றைய கால மக்கள் இன்று வரைக்கும் நினைவுபடுத்திக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (1997 சையது லாலாமியான் ரஹ் அவர்களின் 330வது ஆண்டு நினைவு மலர்)

காஜி செய்யது அஹமது பாதுஷாமியானின் மூத்த புதல்வர் மௌலானா சையது இஸ்மாயில் லாலா ஹஸ்ரத் (ரஹ்) (1890 - 1928) தந்தையைப் போல நபிமார்கள் செய்த தொழிலை ஜீவனத்திற்காகச் செய்தார்கள்

முஸ்தபா ராவுத்தர்

பக்தூர் ராவுத்தர்

முனவர்ஷா ராவுத்தர்

பிச்சவா ராவுத்தர்

நசூன் ராவுத்தர்

இவர்கள் தென்கரையின் சமுதாய முக்கியப் பிரமுகர்கள், அவர்களிடம் நல்ல நேசம் உண்டு. நகராட்சி ஆணையாளர் இஸ்லாமியரின் புதைகுழி (மையவாடி) குறித்து ஆட்சேபம் தெரிவித்தபோது ஹஸ்ரத் சையிது இஸ்மாயில் லாலா ஹஜ்ரத் அவர்கள் ஊரில் இல்லை. அவர்கள் வந்ததும் விவரமறிந்தார். ஆணையாளரும் வந்தார் ஹஸ்ரத் அவர்கள் ஆவேசமாகப் பேசினார். அன்று திரும்பிச் சென்ற ஆணையாளர் அதன் பிறகு அங்கு தலைகாட்டவே இல்லை. இத்தகவலை **செல்லாராவுத்தரும் ஜனாப் முனவர்ஷா ராவுத்தரும், சேகு ராவுத்தரும்** சொன்னார்கள். **பெருந்தகை அசன் ராவுத்தர் ஜனாப் மான் ராவுத்தர்** சையிது இஸ்மாயில் லாலா ஹஸ்ரத் மீது அளவு கடந்த பாசங் கொண்டிருந்தார்கள்.

மௌலானா அல்லாமா எஸ்.எஸ்.அுப்துல்காதிர் பாகவி

தமிழகத்தின் தலைசிறந்த மௌலானாக்களில் எஸ்.எஸ்.அப்துல்காதிர் பாகவி முக்கியமானவர்கள் உத்தமபாளையத்தைச் சேர்ந்தவர்கள். முஹம்மதிய நடுத்தெரு உத்தமபாளையத்தில் உத்தம நூலகம் மூலம் தான் எழுதிய திருகுர்ஆன் விரிவுரையை **தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்** என்று 1937இல் வெளியிடத் துவங்கி ஏழு பாகங்களாக வெளியிட்டவர்கள். 28 ஏடு தற்போது மறு அச்சகம் கண்டுள்ளது.

தஜ்ரீதுல் ஜாமி இஸ்ஸஹீஹில் புகாரீ என்னும் அண்ணலார் (ஸல்) பொன்மார்க்கம் 1954 இல் முதற்பாகம் 662

பக்கங்கள் 1956 இல் இரண்டாம்பாகம் 500 பக்கங்கள் அதனைத் தொடர்ந்து மூன்றாம் பாகம் வெளியிட்ட பெருமைக்குரியவர்கள் சிறிய மஞ்சள் பையுடன் எளிய தோற்றத்தில் உலவிய அந்த மாமேதையை அடியேன் கண்டுமகிழ்ந்தது உண்டு அவர்கள் சையிது இஸ்மாயில் லாலாஹஸ்ரத் அவர்களிடம் பேரன்பு செலுத்தியவர்கள் ஆவார்.

சையது அப்துல் ரஹீம் பாக்கவி

இவர்கள் காஜி சையது இஸ்மாயில் லாலா ஹஜ்ரத் அவர்களின் இளைய சகோதரர் ஆவார்கள், இவர்கள் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட வேலூர் பாகியாத்துஸ்ஸாலிஹாத் பாடங்களில் திறம்பட தேறி உலமா பாக்கவி பட்டம் பெற்றார்கள். இவர்கள் பட்டம் பெற்றவுடன் தஞ்சை மாவட்டத்திலுள்ள பணங்காட்டாங் குடியில் உள்ள அரபிக் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்ற அழைப்பு வந்த சமயம் வேலூர் பாக்கியா த்ஸாலிஹாத் அரபிக் கல்லூரிக்கும் அழைப்பு வந்தது அது சமயம் பாக்கவி அஜ்ரத் அவர்கள் சிறிய ஊரான பனங்காட்டாங்குடி, அரபிக் கல்லூரியில் பேராசிரியராக பொறுப்பேற்று நடந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் மதுரை மாவட்டம் வத்தலக்குண்டில் உள்ள பெருந்தகை, **அல்லா பிச்சை ராவுத்தர்** அவர்களிடமிருந்து அரபி மதரஸாவை நடத்த வேண்டும் என்று அழைப்பு வந்த சமயத்தில் மௌலானா அவர்கள் நம் பகுதி மக்களுக்கு தீன் சேவை செய்ய வேண்டும் என்று கருதி பணங்காட்டாங்குடி செல்வந்தர்களிடம் விடைபெறும் பட்சத்தில் அம்மக்கள் நிலங்கள் தருகிறோம் அதிக பணம் தருகிறோம் என்று சொன்ன போதிலும் நம் வட்டாரத்தில், தீன் சேவை செய்ய வேண்டும் எனக் கருதி பணங் காசுகளை பொருட்படுத்தாமல், சிறிது காலம் வத்தலக்குண்டு அரபி மதரஸாவை நடத்தினார்கள். அப்படி நடத்திக் கொண்டு இருக்கும் காலக்கட்டத்தில் இவர்கள் அண்ணன் மௌலானா சையது இஸ்மாயில் லாலா ஹஜ்ரத் (ரஹ்) அவர்கள் வபாதான உடன் நம் பெரியகுளம் தென்கரை

மஹல்லா வாசிகள் மௌலானா அவர்களை மூதாதையர்கள் செய்த இமாமத் பணியையும், மு அல்லிமாகவும் இருந்து சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்ட சமயம் மஹல்லா மக்களுக்கு இமாமாகவும் மு அல்லிமாகவும் மஹல்லா தாரியாகவும் செயல்பட்டு கொண்டு இருந்தார்கள். இவர்களிடத்தில் ஓதியவர்கள் அரபிக் கல்லூரி தலைமை ஆசிரியராகவும், பேராசிரியராகவும் மௌலானாக்களாகவும் இருந்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் பேராசிரியர்களாக, இருந்த ஊர்களில் எல்லாம் நம் பெரியகுளத்திற்கு தனிப் பெறுமையையும் தேடித் தந்தார்கள். இவர்கள் 1920–ம் ஆண்டிலேயே தஞ்சை மாவட்ட பணங்காட்டாங்குடியில் மேலும் பேராசிரியர்களாக இருந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பெரியகுளம் வட்டார மக்களிடத்தில் நல் மதிப்பை பெற்றவர்கள் மௌலானா அப்துல் ரஹீம் அவர்களை இன்று வரைக்கும் போற்றப்பட்டு கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. மௌலானா அப்துல்ரஹீம் அவர்களுடைய பெயரால்தான் இன்றும் பள்ளிவாசலின் மின் இணைப்புக்கான பெயராக உள்ளது. (1997 சையது லாலாமியான் ரஹ் அவர்களின் 330வது ஆண்டு நினைவு மலர்)

சையது அகமது பாதுஷாமியானின் இளைய மகன் சையது அப்துல்ரஹீம் பாக்கவி (ரஹ்) (1920 - 1941)

இளம் வயதில் மார்க்கக் கல்வியில் தேறிபட்டம் பெற்றார்கள் குடும்ப வழக்கப்படி அரபி உருது பார்ஸி மொழிகளில் அபாரத் திறமையும் இருந்தது. தஞ்சை பணங்கட்டான் குடியில் மார்க்கப் பணிபுரிந்தார். பிரியா மனதுடன், அல்லா பிச்சை ராவுத்தர் விருப்பப்படி அங்கிருந்து விடைபெற்று வத்தலக்குண்டு வந்தார்கள். தீன் கல்வியை ஊர் பிள்ளைகளுக்குத் தந்தார்கள்

வடகரை மௌலானா சையது முகமது ஆலிம்ஷா சித்தையன்கோட்டை மௌலானா உசேன், மௌலானா அல்ஹாஜ் வி.எம்.எஸ். அபுல் ஹஸனாத் ஜமாலி மௌலவி

பி.எஸ்.கே முகமது இப்ராகிம் ஆலிம் மௌலானா அப்துல் ரகீம் ஆலிம் *அவர்களின் பிரியத்திற்குரிய நண்பர்கள் தனது அண்ணன் சையது இஸ்மாயில் லாலா ஹஸ்ரத் மறைந்தார் (இன்னாலில்லாஹி) தென்கரை மக்கள் விருப்பப்படி அங்கு சென்று தீன் பணியாற்றினார்.* **தப்லீக் அமீர் ஹாஜி சேகு ராவுத்தர் மௌலானா அல்ஹாஜ் பி.ஏ.அகமது இப்ராகிம் பாகவி, மௌலானா அபுபக்கர் ஹஸ்ரத் மௌலானா பி.எம். ஷர்புதீன்பாகவி மௌலானா பீர் முகமது பாகவி அமீது ராவுத்தர், மைதீன் ராவுத்தர்** *ஆகியோரின் பேரன்பிற்கு உரிய மாணவர்கள் ஊரே இவர்களைப் போற்றியது.*

எல்.சையது இபுராஹிம் லாலாஹஸ்ரத்

சையது இஸ்மாயில் லாலா ஹஸ்ரத் (ரஹ்) காதர் பீவி மகனாக 20.5.1919 புதன்கிழமை பிறந்தவர்கள் சையது இபுராஹிம் லாலாஹஸ்ரத் கல்வியில் சிறந்து விளங்கினார்கள். பெங்களூரில் பயின்றார்கள். **கூத்தா** *நல்லூர் அல்ஜாமி அத்துல் அரபியா மன்ப உல் உலா அரபிக் கல்லூரியில் 1943 இல் பட்டம் பெற்றார்கள்.*

உத்தமபாளையம் மௌலானா அல்லாமா அபுபக்கர் அவர்களிடம் மார்க்கச் சட்டங்களைப் பயின்றார்கள். பொள்ளாச்சியில் பணிபுரிந்தார்கள் அங்கிருந்து பூர்வ ஊர் பிரமுகர்கள் **பகதூர் ராவுத்தர், முஸ்தபா ராவுத்தர், பிச்சவா ராவுத்தர், எஸ்.ஏ.ரஹிம் சகோதரர்கள்** *வேண்டுகோளை ஏற்று தென்கரைக்குத் திரும்பி வந்தார்கள் மக்கள் மனம் விரும்பியபடி மார்க்கப் பணியாற்றினார்கள்* **சேக்ஜாபர் மகள் ஹஸினா பீவியை** *14.5.1947 இல் திருமணம் புரிந்தார்கள்.*

பெங்களூர், பம்பாய் (மும்பை) மீரட், அகமதாபாத், அலகாபாத், டெல்லி, ஆக்ரா, கல்கத்தா, வங்காளதேசம் வரை சென்றார்கள்.

உருதுவில் பிரசங்கம்
உருக்கமாக புரிந்தார்கள்
உன்னதப் பெயரைப் பெற்றார்கள்

வடகரை பள்ளிவாசல் **இமாம், அல்ஹாஜ் பி.ஏ.அகமது இபுராகீம் பாகவியும்** *இப்பணியில் உடனிருந்தார்கள் வைத்தியம், சித்த மருத்துவ முறைகளைப் பயின்றார்கள்.*

லுக்மான் ஹக்கீம் சரித்திரத்தையும் சித்த வைத்தியத்தையும் பற்றி சிறந்த உரையாற்றிய இவர்களது சீரிய திறமை கண்டு சித்த மருத்துவர்களே சித்தம் வியந்து நின்றனர்

காஷ்மீரச்சிங்கம் ஷேக்அப்துல்லா

1959 மதுரை சித்த மருத்துவ மாநாட்டில் நற்சாட்சிப் பத்திரமும் பெற்றார்கள்

1960 இல் பெரியகுளம் பகுதியில் பஞ்ச நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். 1961 இல் சவுதி அரேபியா அரசாங்கப் பிரதிநிதி மௌலானா அப்துல் ரஹ்மான் ஸில்லி பெரியகுளம் வந்தபோது அவருடன் அரபியில் உரையாடி பாராட்டுப் பெற்றார்கள்.

1966 இல் எஸ்.ஏ.ரஹீம் உதவியுடன் 60 பேர்களை பஸ்ஸில் அழைத்துச் சென்று கர்நாடக மாநிலத்தில் இறைப்பணி ஆற்றினார்கள்.

காஷ்மீரச்சிங்கம் ஷேக்அப்துல்லா கொடைக்கானலில் சிறை வைக்கப்பட்டிருந்த வேளையில் ஜூம் ஆ தொழுகைக்காக கொடைக்கானல் சென்ற ஹஸ்ரத் அவர்கள் ஷேக்அப்துல்லாவுடன் உரையாடினார்கள். ஹஸ்ரத்தின் தலைப்பாகை, சேர்வானி வட இந்தியரைப் போல காட்சி அளித்தார்கள். இவர்களது ஆற்றலைக் கண்ட ஷேக் அப்துல்லா காஷ்மீருக்கு வருமாறு அழைப்பும் விடுத்தார்.

காயிதேமில்லத் இஸ்மாயில் சாஹிப்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்களிடம் நல்ல நட்பு இருந்தது.

சமுதாய நட்சத்திரம்

மதுரை சுங்கம் பள்ளிவாசலில் நடைபெற்ற உலமாக்கள் மாநாட்டில் **நஜ்முல் மில்லத் (சமுதாய நட்சத்திரம்)** என்ற பட்டத்தை லாலா ஹஸ்ரத் அவர்களுக்கும், பி.ஏ.அஹமது இப்ராஹிம் பாகவி அவர்களுக்கும் 1973 இல் வழங்கப்பட்டது.

இமாம்களுக்கு ஓய்வூதியம்

மௌலானா சையது இப்ராஹிம் ஆலிம் அவர்களும் மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களும் அன்றைய முதலமைச்சர் **எம்.ஜி.ஆர்** அவர்களிடம் ஓய்வூதிய கோரிக்கை வைத்து, அதனை அப்போதைய அமைச்சர் **கா.ராஜாமுஹம்மது** உதவியுடன் நிறைவேற்றி உலமாக்களுக்கு அரசாங்கத்திலிருந்து மாத ஓய்வூதியம் கிடைத்திட வழி வகுத்தார்கள்.

ஒற்றுமையின் கயிற்றைப் பற்றி பிடித்திட

1980 இல் கம்பத்தில் நடைபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநாட்டில் ஒற்றுமை என்னும் கயிற்றை சமுதாயம் இறுகப் பிடித்துக் கொண்டு பணியாற்ற வேண்டும் என்று ஆழ்ந்த வீர உரை தந்தார்கள்.

மதுரை மாவட்ட உலமாசபை தலைவர்

1985 - 1998 வரை மதுரை ஜில்லா ஜமா அத்துல் உலமா சபையில் தலைவராகப் பணிபுரிந்தார்கள்.

புனித ஹஜ்

ஹஸ்ரத் அவர்களின் நீண்ட கால விருப்பப்படி இறைவன் அருளால் புனித மக்கா யாத்திரையை மேற்கொண்டார்கள்.

பெரியகுளம் தாலுகா ஜமா அத்துல் உலமாசபை

1993, 1995, 1996, 1998 ஆண்டுகளில் பெரியகுளம் தாலுகா ஜமாத்துல் உலமா சபையின் பணிகளில் உடல்நலத்தைக் கருத்தில் கொள்ளாது பாடுபட்டார்கள்.

20.11.1997

50 ஆண்டுகள் மதரஸா பணி (1943 - 1990) 55 ஆண்டுகளில் பள்ளிவாசலில் இமாம் பணி செய்த ஹஸ்ரத் அவர்களைப் பாராட்டி 20.11.1997 இல் மலர் வந்தது.

வக்ப் வாரியத்தின் தலைவர் **அல்ஹாஜ் எம்.ஏ. அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ** அதனை வெளியிட **மௌலவி டி.ஜெ.எம் ஸலாஹுத்தீன் ரியாஜி** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

1.8.1998 இல், 80 வயதைக் கடந்ததில் உடல்நலக்குறைவு, மதுரை சிட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை.

9.8.1998

9.8.1998 இல் சீரிய பணியாற்றிய ஹஸ்ரத் அவர்கள் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார்கள்.

புனிதத் தலைமுறையின் புகழ் நாமங்கள்

ஆரிபு பில்லாஹி சையது அப்துல் வஹாப்
லாலாமியான் ஹஸ்ரத் (ரஹ்)
(1666 - 1736)
சையது ஹூஸைன் மியான் (ரஹ்)
(1736 - 1816)
சையது அஹமது பாதுஷா மியான் (ரஹ்)
(1816 - 1890)
மௌலானா சையது இஸ்மாயில் லாலாஹஸ்ரத் (ரஹ்)
(1890 - 1928)
மௌலானா சையது அப்துல்ரஹீம் பாகவி
(1920 - 1941)
மௌலானா சையது இபுராகிம் லாலாஹஸ்ரத்
(1919 - 1998)

ஆகிய மார்க்க மேதைகளின் வரலாற்றுச் சுருக்கத்தையும், பெரியகுளம் ஊரின் வரலாற்றையும் எதற்குச் சொல்கிறாய்? நீங்கள் கேட்பது புரிகிறது.

மௌலானா B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் (1933 - 1988)

மௌலானா B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் தந்தையார் பெயர் மௌலானா B.அப்துர்ரஹீம் பாகவி ஆகும். அன்னார் பாரம்பரிய மிக்க குடும்பத்தைச் சார்ந்தவர்கள் லாலாமியான் ஹஜ்ரத் என்ற பரம்பரையில் உதித்தவர்கள். பன்னூற்றுக்கணக்கான மக்களை நேர்வழியின் பக்கம்

கொண்டுவந்து ஹிதாயத் எனும் நூரை இஸ்லாம் எனும் பேரொளியை பெரியகுளம் பகுதியில் பரவச் செய்தனர்.

மௌலானா B.அப்துர்ரஹீம் பாகவி ஹஜ்ரத் அவர்களின் தந்தையார் பெயர் பாதுஷா மியான் ஆகும். அக்கால பெரியகுளம் மக்கள் அன்னாரை சமூக தலைவராக ஏற்று, யானையின் மீது உப்பரிகை கட்டி அதனுள் அமர்த்தி, நகர்வலம் வரச் செய்வர். கருத்த மேனியும் கம்பீரத் தோற்றமும் கொண்ட பாதுஷா மியான் அவர்கள்.

பெரியகுளம் பகுதி குறுநில மன்னராக போற்றப்பட்டார்கள். பாதுஷா மியான் அவர்களுக்கு நிக்காஹ் திருமணம் நடைபெற்ற சமயம் யானையின் மீது அமர்த்தி நகர்வலம் வரும்போது மக்களெல்லாம் தப் அடித்து முரசு முழங்கி பாடல்கள் பாடி வந்தனர். அதிலே குறிப்பானதொரு பாடல் எனது தந்தையார் கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் மற்றும் பெரிய தந்தையார். எல். செய்யது இப்ராஹிம் லாலா ஹஜ்ரத் அவர்கள் மூலம் கேட்ட பாடல்.

"மாசாவை கைகோர்த்தார்
மன்னர் கருத்த லெவை
மங்காத புகளொளியாய்
மதி நிலவாய் உயர்ந்து நின்றார்
தன்மார்க்கம் வழி சென்றே
சன்மார்க்கம் பரப்பி வந்தார்.
"மதி நுட்பம் கொண்டிங்கே
சதியனைத்தும் முறியடித்தார்"
"மாசாவை கை கோர்த்தார்
மன்னர் கருத்தலெவை"
என மக்கள் பாடி மகிழ்ந்தனர்.

மன்னர் பாதுஷாமியான் அவர்களுக்கு மனைவி மாசாவின் மூலம் சையது இஸ்மாயில், அப்துர்ரஹீம் என்று இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. இதிலுள்ள சையது இஸ்மாயில் அவர்களின் மகன்தான். பெரியகுளம் தென்கரை ஜாமிஆ மஸ்ஜிதில் ஐம்பத்தி ஐந்து வருடகாலம்

இமாமத் பணி செய்து மறைந்த அல்லாமா. லாலாஹஜ்ரத் **மௌலானா அல்ஹாஜ் எல்.சையது இப்ராஹிம் உலவிஆலீம்** அவர்கள் ஆவார்கள்.

மன்னர் பாதுஷா மியான் அவர்களின் இரண்டாவது மகனான **மௌலானா B.அப்துர்ரஹீம் பாகவி ஆலீம்** அவர்கள். திருமணம் செய்தது பெரியகுளம் நகராட்சியின் அக்கால சுகாதார ஆய்வாளராக பணியாற்றிய **ஜனாப் முஹம்மது பெய்க்** அவர்களின் மகளான பேரன்புமிக்க புத்திரி **ஜனாபா காத்தூன் பீவி** அம்மையார் அவர்களை மணமுடித்து இல்வாழ்வில் இணைந்தார்கள்.

ஜனாபா காத்தூன் பீவி அவர்களின் மூத்த சகோதரர்தான். ரயில்வே துறையின் பயணச்சீட்டு பரிசோதகர்களின் ஆய்வாளராக பணியாற்றி மறைந்த **ஜனாப் அல்ஹாஜ் R.M.முஹம்மது இஸ்மாயில் பெய்க்** அவர்கள் ஆவார்கள்.

இஸ்மாயில் பெய்க் அவர்கள் தந்தையார் முஹம்மது பெய்க் அவர்கள் அருப்புக்கோட்டையில் சுகாதார ஆய்வாளராக பணியாற்றிய சமயம் அவர்களை பற்றி நகைச்சுவையாக அவர் மனைவி பாடிய கவிகளை இஸ்மாயில் பெய்க் அவர்களின் இரண்டாம் மனைவி ஜமிலா பேகம் அவர்கள். மூலமாகவும் கேட்டு மகிழ்ந்தேன்.

"அருப்புக்கோட்டையிலே உங்கப்பன் செருப்பு தைக்கயிலே நானும் இல்லாட்டி உங்கப்பன் நாறி போவான்டி என்று பாடி முஹம்மது பெய்க் அவர்களை கோபமூட்டுவர்.

மௌலானா அப்துர்ரஹீம் பாகவி ஜனாபா காத்தூன் பீவி ஆகிய தம்பதிகளுக்கு ஐந்து ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தையும் பிறந்தது. அவர்களின் பெயர் விபரம் வரிசை கிரமமாக வருமாறு...

சையது அகமது

இவர் மூத்த மகன். பள்ளிக்கல்வி முடித்ததின் பின்னால் சில வருடங்கள் அரசு பணியில் பணியாற்றி பின் விலகி திருநெல்வேலி பேட்டை ரஹ்மத் பிரஸ் மற்றும் அச்சகத்தின் தலைமை மேலாளராக பன்னெடுங்காலமாக பணியாற்றி வந்தார். பின்னர் தனது சொந்த ஊரான பெரியகுளத்திற்கு

புலம் பெயர்ந்து அங்கு சிறுசிறு பணிகள் செய்து தனது 85ம் வயதில் வபாத்தானார். பின்னர்

பெண் குழந்தை (அதன் பின்னர்)

அப்துல் ஹாதி

அப்துல் ஜமீல்

மேற்கண்ட மூவரும் சிறுவயதிலேயே இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

அப்துல் வஹாப்

இவர் பள்ளபட்டி ஷா நகர் அரசு மேல்நிலைப்பள்ளியில் முப்பதாண்டுகளுக்கு மேலாக ஆசிரியராகவும் தமிழாசிரியராகவும் உதவி தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்று பின்னர் தன் சொந்த ஊரான பெரியகுளத்திற்கு குடிபெயர்ந்து வாழ்ந்து வந்த நிலையில் தன்னுடைய எழுபதாவது வயதில் இறையடி சேர்ந்தார்கள்.

மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத்

மௌலானா B.அப்துர் ரஹீம் பாகவி அவர்களின் ஆறாவது மகனாக பிறந்த ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் தான் இந்நூலின் நாயகர் அன்னாரின் சேவையால் தமிழகத்தில் தீன் பயிர் செழித்தது. தமிழகத்தின் உலமாக்கள் நலன் சார்ந்த சேவைகளின் முன்னோடியாக திகழ்ந்தார்கள்.

பஷீரா பேகம்

ரியாஜி ஹஜ்ரத்தின் பாசமிகு தங்கையாகவும் மதுரை இராஜாஜி மருத்துவமனையின் மருந்தாளுனராக பல்லாண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்று மறைந்த **முஹம்மது அன்வர் பெய்க் சாஹிபின்** மனைவியாகவும் கொலுவீற்றிருந்த பஷீராபேகம் அவர்கள். ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் மறைந்து ஒரு வருடத்திற்கு முன்னால் இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

மேற்கண்ட பிள்ளைகள் யாவரும் **அன்னை காத்தூன் பீவி** அரவணைப்பிலேயே வாழ்ந்து வளர்ந்து வந்தார்கள். ஏனெனில் மௌலானா B.அப்தூர் ரஹீம் பாகவி அவர்கள் தனது நாற்பத்தி ஐந்தாவது வயதிலேயே ராஜ

பிளவை எனும் நோய் கண்டு இளவயதிலேயே இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

கணவனை இழந்ததின் பின்னால் காத்தூன் பீவி அம்மா அவர்கள் தன் பிள்ளைகளோடு தன் சகோதரர் இஸ்மாயில் பெய்க் சாஹிப் அவர்களோடு மதுரைக்கு குடிபெயர்ந்து விட்டார்கள். தவித்த வாய்க்கு தண்ணீர் கிடைப்பது போல திக்குத் தெரியாமல் திசை மறந்தோர் இலக்கை அடைவது போல. தட்டுத் தடுமாறிய நிலையில் உள்ளோருக்கு தடி கிடைத்ததைப்போல. வல்ல அல்லாஹ்வின் கிருபையால் வாழ்க்கை பாதையை முன்னெடுத்து செல்ல இஸ்மாயில் பெய்க் எனும் தன் சகோதரனின் உதவி கிடைத்தது அல்லாஹ்விற்கே பேருபகாரம்.

மௌலானா அப்துர் ரஹீம் பாகவியின் அருமைப் புதல்வர் மௌலானா மௌலவி **அல்ஹாஜ் பி.ஏ கலீலுர் ரஹ்மான் ரியாஜி** அவர்கள் இவர்களது வாழ்க்கைச் சரிதை சுருக்கம் சொல்லவே இத்தனை பீடிகை...

1933

மௌலானா அப்துல் ரஹீம் – காத்தூன் பீவியின்

ஆறாவது அருமைப்பிள்ளை

ஹஸ்ரத் கலீலுர் ரஹ்மான் ரியாஜி

1933 இல் இப்புவியில் பிறந்தார்கள்

தொடக்கப் பள்ளியில் கல்வி பயின்ற காலத்திலேயே அவரின் தந்தையார் 45 வயதிலே காலமானார்கள். தாயாரின் அரவணைப்பிலே வளர்ந்தார்கள். ஐந்தாம் வகுப்பு வரை பெரிய குளத்திலே பள்ளி வாழ்வு தொடர்ந்தது.

வத்தலக்குண்டு

வரலாற்றுச் சிறப்புமிக்க வத்தலகுண்டு 18 ஆம் நூற்றாண்டில் 1760 இல் நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப் நடத்திய வீரப் போருக்கு புகழ்பெற்ற ஊர். பழைய வத்தலக்குண்டு நான்கு கொத்தளங்கள் மதில்களும் 20 ஆம் நூற்றாண்டின் துவக்கம் வரை இருந்தது.

வெற்றிலைக்குண்டு

வற்றாதகுளம், வளைந்தோடும் மஞ்சள் ஆறு வழங்கும் நீர்வளம் வேளாண்மை சிறந்து விளங்கும் ஊர் வத்தலக்குண்டு

வெற்றிலை பயிரிடப்பட்டதால் வெற்றிலைக் குண்டு என்னும் பெயர் பெற்று நாளடைவில் அச்சொல் வத்தலக்குண்டு ஆயிற்று.

ஆங்கிலேயர் வெற்றிலையை Betel என்பார்கள். Betel குண்டு என்பது பட்லக்குண்டு என்று ஆகி இறுதியில் வத்தலக்குண்டு ஆயிற்று.

இராஜம் அய்யர்

தமிழில் புதினங்கள் எழுதிப் பெரும் பெயர்பெற்ற பி.ஆர். ராஜம் அய்யர் வத்தலக்குண்டில் பிறந்தவர். 'Rambles in vedanta' எனும் அறிவார்ந்த வேதாந்த நூலில் 1908 இல் சென்னை தாம்ஸன் நிறுவனத்தாராலும், 1925 இல் எஸ்.கணேசன் கம்பெனியாராலும், 1935 இல் கொல்கத்தா (கல்கத்தாவிலும்) வெளிவந்தது. 575 பக்கங்கள் அதன் எழுத்து பிரசுரம் 1973 இல் வெளியிட்டது. 25.1.1872 இல் வத்தலக்குண்டில் பிறந்த ராஜமய்யர் சுவாமி விவேகானந்தரைச் சந்தித்தவர் 13.5.1898 இல் தனது 26வது வயதில் மறைந்தவர் விவேக சிந்தாமணி இதழில் தமிழ்நாவல் கமலாம்பாள் சரித்திரம் படைத்தவர் பிரபுத்த பாரத தத்துவம் இதழில் 1896 ஜூன் முதல் 1898 மே இறக்கும் வரை எழுதிய மேதையை தந்த ஊர் வத்தலக்குண்டு.

பி.எஸ்.ராமையா

24.3.1905 இல் வத்தலக்குண்டில் பிறந்தவர் புகழ்பெற்ற மணிக்கொடி இதழ் ஆசிரியர் பி.எஸ்.ராமையா 1983 வரை வாழ்ந்தவர் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தனின் நண்பர் சரஸ்வதியின் கணவர் சினிமாத்துறையில் தன அமராவதி விசித்திர வனிதா போன்ற திரைப்படத் துறையிலும் பணியாற்றியவர்.

(வத்தலக்குண்டுவுக்கு சந்தையூர் என்ற பெயரும் உண்டு)

வத்தலக்குண்டு கே.எஸ்.அப்துல்காதர் ராவுத்தர் எஸ்.ஏ. அப்துல்ரகுமான் சாகிப் நாட்டு விடுதலைப் போரில் தங்களை அர்ப்பணித்தவர்கள்.

சி.சு.செல்லப்பா

70 பக்கங்களில் ஜல்லிக்கட்டை மையமாக வைத்து 'வாடிவாசல்' என்ற வீர நாவலைத் தந்த சி.சு.செல்லப்பா 20.9.1912 இல் வத்தலக்குண்டில் பிறந்தவர். 1998 வரை வாழ்ந்தவர். அவ்வளவு பெரிய மனிதர் காந்தியுகக் கதைகளை 'சத்யாகிரகி' என்ற தலைப்பில் தனது எழுத்து பிரசுரம் மூலம் வெளியிட்டவர். 1941 இல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர் 2001 இல் சாகித்திய அகாடமி விருது பெற்ற சுதந்திரதாகம் எனும் நாவலை பாகம் - 1 பக்கங்கள் (568), பாகம் - 2 பக்கங்கள் 534 (552), பாகம் - 3 பக்கங்கள் 534 (530) எழுதியவர். இவரின் வாடிவாசல் குறுநாவல் உரிமை சமீபத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. எவ்வளவு பெரிய மாமனிதர். இவர்கள் பிறந்த ஊரில் நமது கலீலுர் ரஹ்மான் ரியாஜி தனது பள்ளிக்கல்வியையும் மார்க்கக் கல்வியையும் பயின்றார்கள்.

சுதந்திரச் சங்க நாதம் சுப்பிரமணிய சிவா

தேச பக்தச் செம்மல் வ.உ.சி சிறந்த தலைவர் மகாகவி பாரதி சிறந்த கவிஞர் சுதந்திரச் சங்க நாதம் சுப்பிரமணிய சிவா சிறந்த சொற்பொழிவாளர். 4.10.1884 இல் பி.ஆர். ராஜம் அய்யர் நாகம்மை தம்பதியருக்குப் பிறந்தவர் சிவா பெத்தலை கொண்டா என வழங்கும் வத்தலகுண்டில் பிறந்தவர். பின்னாளில் தேசிய விடுதலைக்காகப் போராடி பல முறை சிறை சென்றனர்.

வேதாந்த விற்பன்னர் இராஜம் அய்யர் மணிக்கொடி பி.எஸ்.ராமையா எழுத்து பி.சு.செல்லப்பா தேசிய விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவா போன்ற பெருமக்கள் பிறந்து வளர்ந்த பூமியாம் வத்தலக்குண்டில் இஸ்லாமிய மார்க்கக்

கல்வி கற்றவர் கலீலுர் ரஹ்மான் ரியாஜி. பெயரிலும், புகழிலும், தீரத்திலும், வீரத்திலும், ஞானத்திலும், ஆற்றலிலும், அறிவிலும் சிறந்து விளங்க இருக்கிற கலீலுர் ரஹ்மான் ரியாஜி தனது துவக்கக் கல்வியை வத்தலக்குண்டில் பயின்றார்கள் என்பது வரலாற்றுச் சிறப்புத்தானே!

திண்டுக்கல்

தென்னிந்தியாவின் அலிகார் என்று போற்றப்படும் நகரம் திண்டுக்கல்.

தென்னகத்தின் போர்வாள் ஹைதர் அலியும், தீரன் வேங்கை திப்புசுல்தானும், வேலு ராணி நாச்சியாரும் உலவிய பூமி

அரைவட்ட பஞ்சனை போன்ற திண்டு போல் அமைந்த மலையை உடைய ஊர் திண்டுக்கல்.

திண்டி என்ற அசுரனை சிவன் அழித்ததால் திண்டீசுவரம் எனும் பெயர் பெற்றது. சமயக்குரவரில் ஒருவரான திருநாவுக்கரசர் தேவாரத்தில் திண்டீசுவரம் என்றே குறிப்பிடுகிறார்.

பாண்டியர், விஜய நகர, நாயக்க, மைசூர், ஆற்காடு ஆங்கிலேயர்கள் என பலரும் ஆட்சி புரிந்த பூமி.

வரலாற்றில் மதுரைக்கு போர்களால் கேடு வராமல் வழி யிலே தடுத்து நிறுத்தியது திண்டுக்கல் கோட்டை.

கி.பி.1784-1799 வரை திண்டுக்கலில் தீரன் திப்புசுல்தானின் ஆட்சி நிலவியது. மார்க்கக் கல்வியிலும் மதரஸாக்கள் பல துவங்கப்பட்டு, இஸ்லாமிய சிறார்களுக்கு, இளைஞர்களுக்கு கல்வி போதிக்கப்பட்டது.

பேகம்பூரில் பெரிய பள்ளிவாசல் உள்ளது. ஐதர் அலியின் தங்கை ஹஸரத் பேகம் சாகிபா அவர்களுக்கு எடுப்பித்த அழியா நினைவுச் சின்னம் உள்ளது.

நவாபு மீறா சாலிக்கான் சாயபுவின் மனைவி பேகம் சாகிபா. பிள்ளைப் பேற்றின் போது கி.பி.1772 இல்

மறைந்தார் அங்கு அவரது உடல் அடக்கப்பட்டது. அடக்கம் செய்த இடத்தில் பள்ளிவாசல் எழுந்தது.

கீழ்த் திரிச சுவடி நூலகம்

டி, 3021, ஆர் 8275 திண்டுக்கல், பேகம்பூர் மொகபரா பள்ளிவாசல் வரலாறு சொல்லப்பட்டுள்ளது (புலவர் து.இராசகோபால் திண்டுக்கல் ஊரும் பேரும் திண்டுக்கல், 2019, பக்கம் 276 – 283.)

திப்புவின் ஆட்சியின் கீழ் திண்டுக்கல் இருந்தபோது இங்கு பொறுப்பு வகித்த செய்யது சாகிபு 2ம் அமீருன்னிசா பேகத்தின் நிர்வாக தொழுகைப் பள்ளியும் அமைந்தது. இதனைப் பராமரிக்க 300 ஏக்கர் நிலத்தை திப்புசுல்தான் வழங்கினார். இஸ்லாம் செழித்து வளர்ந்த **திண்டுக்கல்லில் கலீலுர் ரஹ்மான் ரியாஜி** மார்க்கக் கல்வி பயின்றார்கள்.

பள்ளப்பட்டி

திருச்சி மாவட்டத்தில் முதலில் இருந்து தற்போது கரூர் மாவட்டத்திலிருக்கும் ஊர் பள்ளப்பட்டி.

திண்டுக்கல், ஈரோடு பகுதிகளில் இருந்து வந்து பள்ளப்பட்டியில் குடியேறி முஸ்லிம்கள் அதிகம் தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்கள் (K.S.K.Velmall Gazeteers of Tamilnadu Tiruchirappalli District Volume I, Chennai, 1998, Page 287) நூல் 1644 பக்கங்கள்)

மூன்று இறைநேசர்கள்

பாபா, பக்ருதீன் தர்கா

குத்புதீன் தர்கா

சேக் அப்துல்காதிர் வலி தர்கா

மூன்று தர்காக்கள் பள்ளப்பட்டியில் உள்ளது. பள்ளிவாசலில் அமைந்துள்ள மதரஸாவில் குர்ஆன் மற்றும் அரபி மொழி பயிற்றுவிக்கப்படுகிறது. (Report from the Tahsildar, karur, dated 8 April 1994)

மக்தூமிய்யா மதரஸா

கி.பி.1872 ஆம் ஆண்டு இஸ்லாமிய மார்க்கக் கல்வியும், மூன்றாம் வகுப்பு வரை பொதுக்கல்வியும் வழங்கிடும் மக்தூமிய்யா மதரஸா துவங்கப்பட்டது.

மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் இந்த மதரஸாவிலும் சில காலம் மார்க்கக் கல்வி பயின்று மேற்கல்வியைத் தொடர்ந்திட திருநெல்வேலி பேட்டைக்கு வந்தார்கள்.



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

நிக்காஹ் அழைப்பு.

அன்புடையீர்!

எல்லாம் வல்ல அல்லாஹுவின் [illegible]பையால் நாளது ஹிஜ்ரி 1377வரு

ஷவ்வால் பிறை 11க்கு ([illegible]—5—58) வியாழக்கிழமை

காலை 7—30 மணிக்குள்

எனது மைத்துனர் பெரியகுளம் மர்ஹூம் மௌலானா மௌலவி பா. அப்துர் ([illegible]) அவர்களின் செல்வப் புதல்வர்

மௌலவி B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி

(முதர்ரிஸ் R. J. அரபிக் காலேஜ், திருநெல்வேலி பேட்டை)

அவர்கட்கும்

எனது செல்வப் புதல்வி

[illegible] பேகம் [illegible]

மதுரை, பாண்டிய வெள்ளாளர் தெரு 127[illegible], எனது இல்லத்தில் இன்ஷா அ[illegible] நிக்காஹ் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் [illegible] சகிதம் வந்திருந்[illegible] மஜ்லிஸை சிறப்பிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வண்ணமே கோரும், — தங்களன்புள்ள,

A. [illegible], மதுரை.

R. M. இஸ்மாயில் பேக் [illegible], T. T. I. (S. Ry.) மதுரை.

வரவேற்பு:

மாலை 4—30 To 6—30

மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களின் நிக்காஹ் அழைப்பிதழ் பத்திரிகை

ரியாலுல் ஜினான் - பீ உலூமில் அத்யான் அரபிக்கல்லூரி

திருநெல்வேலி பேட்டை இஸ்லாமியப் பெருமக்கள் வாழும் ஊர். கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாஹிப் பிறந்த ஊர். இங்கு ரியாலுல் ஜினான் பீ உலூமில் அத்யான் அழகிய பெயர் சூட்டப்பட்ட அரபிக்கல்லூரி. சுவனத்துப் பூங்கா இது.

1868

கி.பி. 1868ல் ரியாலுல்ஜினான் மதரஸாவை (அரபிக் கலாசாலை) நிறுவினார்கள். தென்தமிழ் நாட்டில் தோன்றிய முதல் மதரஸா இதுதான். முதன்முதலாக இலவச உணவு வழங்கி வழிகாட்டியதும் இந்த மதரஸா தான்!

வ.காதர்முகைதீன் ராவுத்தர்

இந்த மதரஸாவோடு இணைந்திருக்கும் முகம்மது நயினார் பள்ளிவாசல் தலைவராக வ.காதர்முகைதீன் ராவுத்தர் இருந்த காலத்தில் இந்த மதரஸா நிறுவப்பட்டது.

மௌலவி சேக்அப்துல்காதர்

ரியாலுல்ஜினான் அரபிக்கல்லூரியின் முதல் நாஜிர் மௌலவி சேக் அப்துல்காதர்

கா.த.மியாகான்இராவுத்தர்

காயிதே மில்லத் அவர்களின் தந்தையார் கா.த.மியாகான் ராவுத்தர் போன்றவர்கள் இந்த மதரஸாவின் துவக்கத்தில் பயின்றவர்கள் ஆவர்.

மௌலவி முகம்மது மதார்சாஹிப்

சென்னை பெரம்பூர் ஜமாலிய்யாவின் தலைமை ஆசிரியராக இருந்து தீனுக்குச் சேவை செய்த மௌலானா மௌலவி முகம்மதுமதார் சாஹிப் பேட்டை மதரஸாவில் ஆரம்பத்தில் கல்வி பயின்றவர் ஆவார்.

உ.சி.ப செய்யது இப்ராஹீம் ராவுத்தர்

மாற்று மதத்தவர்கள் இஸ்லாம் மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் வரும் விதமாக முகம்மது (ஸல்) விளக்கம் என்னும் பெயருடன் கண்டன நூலை அக்காலத்தில் உ.சி.ப செய்யது இப்ராஹீம் ராவுத்தர் வெளி யிட்டார்கள்.

மு.நத்தடு பாவா ராவுத்தர்

தென்காசி மு.நத்தடு பாவா ராவுத்தர் முயற்சியால் இஷா அத்துல் இஸ்லாம் சங்கம் பேட்டையில் நிறுவப்பட்டது.

மு.ந.முகம்மது சாஹிப்

திருநபிசரித்திரம் – எனும் அற்புத நூலின் ஆசிரியர் மு.ந.முகம்மது சாஹிப் அவர்களின் தந்தையார் மு.நத்தடுபாவாராவுத்தர் ஆவார்.

ஹாஜி சி.கா ஷெய்கு இப்ராஹிம் ராவுத்தர்

பேட்டை மதரஸாவில் கல்வி பயின்றவர்களில் சி.கா. ஷெய்கு இப்ராஹிம் ராவுத்தர் குறிப்பிடத்தக்கவர் ஆவார்.

சி.கா.ஹாஜி கோதர் முகியித்தீன்

பேட்டை மதரஸாவில் முத்தவல்லியாக சி.கா.ஹாஜி கோதர் முகியித்தீன் பணியாற்றினார்கள்.

மௌலவி செய்யது முகமது ஷர்புத்தீன்

பேட்டை மதரஸாவின் தலைமை ஆசிரியராக தென்காசி வடகரையைச் சேர்ந்த மௌலானா மௌலவி செய்யது முகம்மது ஷர்புத்தீன் சாஹிப் தலைமை ஆசிரியராக இருந்தார்கள்.

மௌலவி சே.முகம்மது பாசி சாஹிப்

பேட்டை மதரஸாவில் கல்வி பயின்றவர்களில் குறிப்பிடத்தக்க இன்னொரு மௌலவி சே.முகம்மதுபாசி சாஹிப்

வா.பீ.பீர்முகம்மது ராவுத்தர்

பேட்டை மதரஸாவின் முத்தவல்லியாக வ.பீ.பீர்முகம்மது ராவுத்தர் பணியாற்றினார்கள்.

ஹாஜி பீர்முகியித்தீன் ராவுத்தர்

வா.பீ. பீர்மூகம்மது ராவுத்தரின் புதல்வர் வா.பீ.பீ.பீர்முகியித்தீன் ராவுத்தர் பேட்டை மதரஸாவில் பாடம் பயின்றவர்கள்.

மௌலவி ரியாஜி

பேட்டை மதரஸாவில் பயின்று தேறியவர்களுக்கு மௌலவி ரியாஜி என்ற பட்டம் வழங்கிட முடிவு செய்யப்பட்டது.

அரூஸி - அரூஸிய்யா அரபிக்கல்லூரி கீழக்கரை ராமநாதபுரம் மாவட்டம் துவங்கி பனையூர் நூறுல் ஹிதாயா அரபிக்கல்லூரி வழங்கும் ஸனது உட்பட 83 பட்டங்களைப் பற்றிய விவரங்களை எனது பிரிய **மௌலவி ஆலிம் கவிஞர் தேங்கை ஷரபுத்தீன் மிஸ்பாஹி** எழுதியுள்ளார். அதனை தமிழ்நாடு மாநில ஜமாத்துல் உலமா சபை ஒரு கண்ணோட்டம் நூலில் பக்கம் 63 - 66 வரை காணலாம்.

ஹாஜி.வா.பீ.பீர்முகம்மது ராவுத்தர் முத்தவல்லியாக இருந்த காலத்தில் **மௌலவி ரியாஜி பட்டம்** வழங்க முடிவு செய்யப்பட்டது. (ஆனால் பின்னாள் முறையாக பட்டமளிப்பு விழா நடத்தப்படவில்லை ; பிரதி வருஷமும் முறையாக ஸனதுகள் கொடுக்கப்படவும் இல்லை. (பேட்டை மத்ரஸா ரியாலுல் ஜினான் பீ - உலூமில் அத்யான் ஆண்டு அறிக்கை 1961 பக்கம் 11)

மௌலவி ஹூசேன் முஹம்மது

சித்தையன் கோட்டை மௌலவி ஹூசைன் முஹம்மது அவர்களிடம் கலிலுர் ரஹ்மான் ரியாஜி பேட்டையில் கல்வி பயின்றார்கள்.

1952

1952 இல் முதன்முதலில் ஆலீம் ரியாஜி – என்ற பட்டத்தை மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் பெற்றார்கள் (ஸீரத் மலர் பக்கம் இல்லை) பேட்டை

மொழிபெயர்ப்பு பணியில் மௌலானா ரியாஜி ஹஜ்ரத் (ரஹ்)

முஹம்மது சுலைமான் சாஹிப்

திண்டுக்கல் பெரும் வணிகர் **ஹாஜி முஹம்மது சுலைமான் சாஹிப் தமிழ்நாடு 'தப்லீக்' தலைவராக** *விளங்கியபோது* **மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி** *அவர்களை சகோதரர் போல அரவணைத்தார்கள். தீன் பணி தொடர்ந்தது.*

ஹஸ்ரத் மௌலானா யூசுப் சாஹிப்

ரஹமத்துல்லா மௌலானா

மீரட் மௌலானா

மாலிக் மௌலானா

போன்ற ஞானவான்களின் உருது சொற்பொழிவிற்கு தமிழில் மொழிபெயர்த்து பேசவும் உருது பிரசங்கங்களை தமிழில் மொழி பெயர்த்தும் தப்லீக் சம்பந்தப்பட்ட நூல்களை முதன் முதலில் தமிழில் மொழிபெயர்த்தும் மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் வெளி யிட்டார்கள்.

தப்லீகின் சிறப்பு

தொழுகையின் சிறப்பு

ஸதகாவின் சிறப்பு

போன்ற உருது நூல்கள் கலிலுர் ரஹ்மான் ரியாஜியால் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்தது.

ஹஸ்ரத் ஜக்கரிய்யா

சூபி.முஹம்மது இக்பால், மதீனா முனவ்வராவில் இருந்து எழுதிய பெருமானார் வழி நடந்த பேரன்பு பெட்டகம்

ஷைகுல் ஹதீஸ் ஜகரிய்யா (ரஹ்) எனும் நூலை திண்டுக்கல் மௌலவி எ.முஹம்மது ஸிராஜூத்தீன் (நூரி 1988 இல் வெளியிட்டுள்ளார்கள்.

முதன்முதலில் தமிழில் பளாயிலே அஃமால்

முதன்முதலில் துவக்க காலத்தில் ஜக்கரிய்யா (ரஹ்) அவர்களின் நூல்களை பல்லாயிரக்கணக்கில் தஃவத் தப்லீக் சேவையில் ஈடுபடுபவர்களை உயிர் மூச்சாக கருதப்பட்ட பளாயிலே அஃமால் எனும் அமல்களின் சிறப்பு என்ற நூலை ஆரம்பமாக தமிழிலே முதன்முதலில் மொழிபெயர்த்து வெளியிட்டவர்கள். மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களே ஆவார்கள்.

ரஹ்மத் பதிப்பகத்தின் கடமை

ஜகரிய்யா (ரஹ்) அவர்களின் ஹஜ்ஜின் சிறப்பு 1975 இல் வெளிவந்தது. 384 பக்கங்களுடன் 1993 இல் வெளிவந்துள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பு தி.அ.தாவூத்ஷரீப் ஸஹாபாக்கள் வரலாறு மொழிபெயர்ப்பு திருச்சி குலாம் ரசூல் சாஹிப் 1963 இல் வெளியானது (பக்கங்கள் 423) தொழுகையின் சிறப்பு 1996 இல் வெளிவந்தது (பக்கங்கள் 135)

தி.அ.தாவூத் ஷரீப்

ஹஜ்ஜின் சிறப்பு 1975 இல் வெளிவந்தது (444 பக்கங்கள்) ஸதகாவின் சிறப்பு 1 முதல் 5 பாகங்கள் 1986 இல் வெளிவந்தது. ஆறாம் ஏழாம் பாகங்கள் இரண்டாம் பகுதியாக 1987 இல் வெளிவந்தது. இரண்டும் சேர்ந்து 1074 பக்கங்கள். இவைகளை தமிழில் மொழி பெயர்த்தது தி.அ.தாவூத்ஷரீப் தப்லீன் சிறப்பு மொழிபெயர்ப்பு மௌலவி எ.சதக்கத்துல்லாஹ் பாகவி (1976) 62 பக்கங்கள் மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி மொழிபெயர்த்த நூல்கள் எளியேன் பார்வையில் அகப்படவில்லை. பேட்டை ரஹ்மத் பதிப்பகத்தார் அவைகளை அவசியம் மறுபதிப்பு செய்ய வேண்டும் என்பது அடியேனது அவா.

அன்னையின் மறைவு

சித்தரான பட்டினத்தார் தனது அன்னையார் மறைந்தபோது பட்ட அவலத்தை இலக்கிய உலகம் நன்கு அறியும். மௌலவி கலிலுர் ரஹ்மான் ரியாஜி யின் தாயார் 5.10.1957 இல் இயற்கை எய்தினார்கள்.

அன்னையின் மறைவு வெகுவாக தன்னைப் பாதித்தது அதிலிருந்து மெல்ல மெல்ல தன்னை விடுவித்துக் கொண்டார்கள். கலிலுர் ரஹ்மான் ரியாஜி . மீண்டும் தீன் பணி தொடர ஆரம்பித்தது.

திருவிதாங்கோடு

மலபார் கடற்கரை ஓரம் இஸ்லாம் துவக்க காலத்திலேயே பரவியது குமரி மாவட்டத்தில் ஆளூர், திட்டுவிளை தக்கலை திருவிதாங்கோடு, குளச்சல் தேங்காய்ப்பட்டினம், இடலாக்குடி, கோட்டாறு முஸ்லிம்கள் மிகுந்த அளவில் வாழும் பகுதிகளாகும் (லேனா தமிழ்வாணன், கன்னியாகுமரி மாவட்டம், சென்னை, 1986, பக்கம் 136)

கோடு

கொல்லங்கோடு, சுருளக்கோடு, விளப்பங்கோடு, திருவிடைக்கோடு, திக்கணங்கோடு, மேற்கோடு, பாகோடு, பள்ளிகோடு, பூவங்கோடு, ஆலங்கோடு எடைக்கோடு, திருவிதாங்கோடு என கோடு என முடியும் பல ஊர்கள் குமரி மாவட்டத்தில் உண்டு. (சோமலெ, கன்னியாகுமரி மாவட்டம், சென்னை, 1961, பக்கம் 136)

கல்குளம் வட்டத்தில் திருவிதாங்கோடு அமைந்துள்ளது. பத்மநாபபுரத்திற்கு தென் மேற்கே அமைந்துள்ளது. ஸ்ரீ வாழும் கோடு இர்ச்சக்கனின் பெண் தெய்வமாக இலக்குமி வாழும் இடம் என்பர். வே நாட்டின் தலைநகராகவும் இது இருந்தது. இதன் பழைய பெயரை வைத்தே இவ்வூருக்கு திருவாங்கூர் இப்பெயர் சூட்டப்பட்டது. மன்னர் ரவி வர்மாவின் அரசானை பொறிக்கப்பட்ட தூண்களும் உண்டு.

(எம்.கோபால கிருஷ்ணன், கன்னியாகுமரி மாவட்டம், சென்னை 2006, பக்கம் 1387)

இங்கு இரு பள்ளிவாசல்கள் உண்டு (one can see two mosques) (m.Gopalakrishnan, Madras, 1995, Page 12 19)

முஸ்லிம்கள் அதிகம் வாழும் ஊர் இது.

மாலிக் முஹம்மது

இன்றைய குமரி மாவட்டம் நோக்கி வந்தனர் மாலிக் முஹம்மது குழுவினர். தொழுகைக்கான நேரம் வந்தது. பாங்கு (தொழுகைக்கான அழைப்பொலி) ஒலித்தனர்; தொழுகையை நிறைவேற்றினர்.

கோலேகா

சேரமான் பெருமானின் புதல்வர் கோலேகாவுக்கு இப்பாங்கொலி புதிய சப்தமாக இருந்தது. விசாரித்திட விரைந்தார். அங்கு இறைவழிபாடு நடந்து கொண்டிருக்கிறது.

நீங்கள் யார்? இங்கு வரக் காரணம்? கேட்டார் கோலேகா அரேபியாவிலிருந்து வந்துள்ளோம். இஸ்லாம் மார்க்கத்தைப் பரப்பிடும் முயற்சியில் உள்ளோம் என்றார் மாலிக் முஹம்மது. ஏற்கனவே பெற்றிருந்த அறிமுக கடிதத்தின் நகலைக் காட்டினார். இளவரசர் உபசரித்தார். இறையாலயம் எழுப்பிட அனுமதி தந்தார்.

திருபாங்கு கேட்ட இடம்

இறையகம் எழுப்பப்படுகிறது திருப்பாங்கு கேட்க, மகான் மாலிக் முகம்மது இறைப்பணி தொடங்கிய திருவிடமே திருவிதாங்கோடு ஆகும் தமது தந்தையார் மாலிக் இப்னு தீனார் காசர்கோட்டில் அமைத்த பள்ளிவாசலின் வடிவில் இங்கும் பள்ளிவாசல் எழுந்தது. (என் பிரியத்திற்குரிய அண்ணன் பேராசிரியர் திருமலா எம்.எம்.மீரான்பிள்ளை தென்குமரியில் இஸ்லாம் மெய்ஞ்ஞானி பீர்.முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக்கோவை, பதிப்பாசிரியர் பேராசிரியர் கா.முகம்மது பாரூக், திருவிதாங்கோடு, 1976, பக்கம் 41.)

மலையாளத்தொடர்

'பறஞ்ஞுது பறையன் கால்' திருவாங்குகேட்டது திருவாங்கோடு என்ற மலையாளத் தொடர் இதனை உறுதி செய்கிறது.

புகழ்மிக்க, பாரம்பரியமிக்க தொன்மை வாய்ந்த இஸ்லாமிய நகரான திருவிதாங்கோட்டில் மார்க்கப் பணியாற்றிட மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் வந்தார்கள்.

மத்ரஸத்துல் இஸ்லாமியா

திருவிதாங்கோடு (எஸ்.திருவிதாங்கூர்) மத்ரஸத்துல் இஸ்லாமியா அரபிப் பள்ளியில் தனது தீன் பணியைத் துவக்கினார்கள் கலிலுர் ரஹ்மான் ரியாஜி .

அங்கு பணியாற்றிடும் வேளையில் மார்க்க சம்பந்தமான பல நூல்கள் வெளியிட்டார்கள். இஃதிகாபும் லைத்துல்கத்ரும் எனும் சிறு பிரசுரம் போன்று பல பிரசுரங்கள் அவர்களால் அப்போது வெளியிடப்பட்டது. இதோ ஒரு பிரசுரத்தின் முகப்புப் பக்கம்

வெளியீடு 2

இஃதிகாபும்

லைலத்துல்கத்ரும்

*****

முதர்ரிஸ்

மவ்லவி B.A.கலீலுர்ரஹ்மான் சாகிப் (ரியாஜி)

*****

மத்ரஸத்துல் இஸ்லாமிய்யா

திருவிதாங்கோடு. (S.திருவாங்கூர்)

பேரின்பக்கனிகள் (1958)

தித்திக்கும் திருமறையாம் திருக்குர்ஆனின் திருவசனத்தையும், அகிலம் போற்றும் அண்ணலார் (ஸல்) அவர்களின் அருள்வாக்கினை அடுத்தும் இடம்பெறச் செய்து அற்புதமான முறையில் உருவாக்கப்பட்ட நூல் பேரின்பக்கனிகள். இந்த நூலில் பொன்மொழி கூறும் பெரியார்கள் **'கைருல் குரூனீ – கர்னீ தும்மல்லதீன – யலூன ஹூம் – தும்மல்லதீன யலூனஹூம்** (தலைமுறைகளின் சிறந்தது என் தலைமுறை ; அதற்கடுத்த தலைமுறை யினர்; அதற்கடுத்த தலைமுறையினர் கூறிய காலத்தில் வாழ்ந்த சான்றோர்கள், உலகப்புகழ் வாய்ந்த மேதைகள் ஆகியோரின் பொன்மொழிகள் தொகுக்கப்பட்டுள்ளன. பேரின்பக்கனிகள் நூலினை உருவாக்கிட மௌலானா B.A.கலிலுர் ரஹ்மான் ரியாஜி அண்ணலார் (ஸல்) துவங்கி மொத்தம் 102 சான்றோர்களின் பொன்மொழிகளை அற்புதமாகத் தொகுத்துள்ளார்கள். இதோ அந்தச் சான்றோர்களின் பட்டியல்

மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜியின் அரபி ஞானத்திற்கு இந்த நூல் அத்தாட்சியன்றோ பேரின்பகனிகள் என்ற நூலின் பொருளடக்கம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது

பொருளடக்கம்

1. பணிவு
2. கர்வம்
3. சகிப்புத்தன்மை
4. கோபம்
5. மன்னித்தருளல்
6. குறைகாணுதல்
7. மனிதப்பண்பு
8. பொறாமை
9. புறம்
10. கோள்
11. நாவடக்கம்
12. அன்பு
13. நட்பு
14. உணவு
15. செல்வம்
16. பொருளீட்டல்
17. உபகாரம்
18. ஈகை
19. உலோபம்
20. விருந்துபசாரம்
21. வறுமை
22. திருப்தி
23. யாசகம்
24. கல்வி
25. அறிஞர்
26. நூலியற்றல்
27. பிரசாரம்
28. பதவி
29. நற்குணம்
30. ஒழுக்கம்
31. வெட்கம்
32. பாபம்
33. இச்சை
34. பற்றறுதல்
35. சிரிப்பு
36. அழுகை
37. கருணை
38. ஆத்மா
39. பக்தி
40. முகஸ்துதி
41. தனிமை
42. தியானம்
43. விசனம்
44. பாவமன்னிப்பு
45. முஃமின் விஸ்வாசி
46. உலகம்
47. மறுமை
48. படிப்பினை
49. இறைநேசம்

மிக்க அன்பானவர் அண்ணலார் (ஸல்)

"இவ்வுலகில், எங்களுக்கு நபி பெருமானார் (ஸல்) அவர்களை விட மிக்க அன்பானவர் எவரும் இருக்கவில்லை. அன்னார் எங்களுக்கு மத்தியில் வந்தாலும் நாங்கள் எழுந்து நிற்பதில்லை காரணம், அவர்கள் அதை வெறுக்கக் கூடியவர்களாயிருந்தார்கள் (ஹஸ்ரத் அனஸ் (ரலி)

ஜனாதிபதி

ஜனாதிபதி அலி (ரலி) அவர்கள் மார்க்கட்டில் காய்கறிகள் வாங்கிக்கொண்டு தாமே சுமந்து வீட்டிற்குக் கொண்டு செல்வதைப் பார்த்த ஒருவர், 'கலீபா' அவர்களே என்னிடம் கொடுங்கள்; நான் சுமந்து வருகிறேன் என்றார். இல்லை இதை சுமந்து செல்வதற்கு குடும்பத்தலைவனே அதிகம் கடமைப்பட்டவன் என பதிலளித்தார்கள். பல்லா யிரக்கணக்கான சதுரடிமைல் பரப்பின் ஆட்சியாளரான ஜனாதிபதி அலி (ரலி) (நுஸ்ஹதுன் நாழி ரீன்,)

ஈகை

ஈகை சுகம் தரும் சஞ்சீவி ஹஸ்ரத் அலி (ரலி) யின் கூற்று இது

சுவர்க்கம்

மூன்று சாரார் விசாரணை செய்யப்படாமலேயே சுவர்க்கம் பிரவேசிப்பர். சலவை செய்து காயப்போட்ட புடவைக்கு மாற்றுப் புடவை கிடைக்கப் பெறாதவர். அடுப்பில் இரு சட்டிகள் ஏற்ற வசதியில்லாதவர்; பருகுவதற்கு நீர் கேட்கும் போது எது தேவையென விசாரிக்கப்படுவதற்கு வழி இல்லாதவர்கள் (அபூஹுரைரா (ரலி)

நூலியற்றல் - அறநெறி

எழுத்தாளனும் மடிந்து போவான் எழுதிய நூற்களையும் காலச் சுழல் அழித்து விடலாம். ஆகவே நியாயத் தீர்ப்பு நாளன்று நீ காண்பதற்கு மகிழ்ச்சியூட்டும் அறிநெறிகளையே எழுதி வைப்பாயாக. (தின்னூனில் மிஸ்ரீ (ரஹ்)

உலகம்

இவ்வுலகம் விசுவாசிக்கு சிறைக்கூடம் அவிசுவாசிக்கு சுவர்க்க லோகம் (நபிகள் நாயகம் (ஸல்) இப்படி பேரின்ப கனிகள் நூலில் 1001 பொன்மொழிகள் அத்தனையும் முத்துக்கள் மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜியின் ஆற்றலுக்கு அற்புத சாட்சியாக இந்த நூல் அமைந்துள்ளது.

ஸத்ருல்முதர்ரிஸ் (முதல்வர்)

1958 இல் திருவிதாங்கோடு மதரஸதுல் இஸ்லாமியாவில் ஸத்ருல் முதர்ரிஸில் (முதல்வர்) பணியாற்றிய காலத்தில் இந்த நூல் *201* பக்கங்களில் நாகர்கோவில் அஜூமல் பிரிண்டர்ஸில் அச்சிடப்பட்டு வெளியானது.

ஆர்.முஹம்மதலி ஹாஜியார்

ஆர்.எம்.ஹாஜியார் என்று அழைக்கப்படும் ஆர்.முஹம்மதலி ஹாஜியார் அழைப்பில் அவரது ஊரான திருவிதாங் கோட்டுக்குத் தீன்பணியாற்றச் சென்று சிறப்போடு திருவிதாங்கோட்டில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஞான நூல்கள் வெளியிட்டார்கள்.

ஆர்.எம்.இஸ்மாயில் பேக் சாஹிப்

தமது மாமா மதுரை ஹாஜி ஆர்.எம்.இஸ்மாயில் பேக்சாஹிப் – குல்சும் பீவி தம்பதியரின் அருமை திருமகளார் மெஹ்ருன்னிசாவை *1958* இல் திருமணம் செய்து கொண்டார்கள். மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி.

பாண்டிய வேளாளர் தெரு

மதுரை 127, பாண்டிய வேளாளர் தெருவில் இருந்து ரஹ்மத் பதிப்பகம் சார்பில் அவர்களது நூல்கள் தொடர்ந்து வெளிவந்தது. இந்த முகவரி அவர்களது மாமனாரின் இல்ல முகவரி ஆகும். பேரின்பக்கனிகள் நூலின் இரண்டாம் பதிப்பு திருநெல்வேலி பேட்டையிலிருந்து 222 பக்கங்களில் வெளியானது.

மதுரையிலிருந்தும் பின்னர் நெல்லை பேட்டையிலிருந்து பல நூல்கள் வெளிவந்தன. சான்றுக்கு அந்த முகவரியில் வந்த நூல்களின் முகப்புப் பக்கம் ஒன்று மட்டும் இதோ.

தீமை ஒழித்த

முஸ்லிம்கள்

ஆசிரியர்:

மவ்லவீ B. A. கலீலுர்ரஹ்மான் ரியாஜி

(பேராசிரியர்)

R. J. அரபிக் கல்லூரி,

திருநெல்வேலி பேட்டை.

★

வெளியீடு:

ரஹ்மத் பதிப்பகம்

127, பாண்டிய வேளாளர் தெரு

மதுரை.

0—10—0 0—62

[illegible]

ரஹ்மத் அச்சகம்!

அல்லாஹ் (ஜல்)வின் திருவையால் நிகழும் ஹிஜ்ரி 1384
ரஜப் 28-ம் (3-12-64) வியாழக்கிழமை
மாலை 5 மணி அளவில்

திருநெல்வேலி பேட்டை, சேரன்மாதேவி ரோடு, 1-1-155 இலக்கக் கட்டிடத்தில் அஜந்தா இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், [illegible] தொடங்கி வைக்கும்

"ரஹ்மத் அச்சகம்"

திறப்பு விழாவில் தாங்கள் [illegible] சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
(மவ்லவி) B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி,
ஆசிரியர், ரஹ்மத் (மாத இதழ்)
பேட்டை, திருநெல்வேலி - 4.

முஸ்லிம்களின் தாயிமார்கள்.

ஆசிரியர்:
மவ்லவி B. A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி
ஆசிரியர்; "ரஹ்மத்"

விலை ரூ. 8-00

வெளியீடு;
ரஹ்மத் பதிப்பகம்
M. N. P. சன்னதி தெரு
பேட்டை, திருநெல்வேலி-4.

சித்தையன்கோட்டை ஸஃகீர் ஹஸ்ரத்

மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களின் முக்கிய ஆசிரியர் சித்தையன் கோட்டை ஸஃகீர் ஹஸ்ரத், அவர்கள் அழைப்பிற்கேற்ப, தான் பயின்று பட்டம் பெற்ற திருநெல்வேலி பேட்டை மத்ரஸா **ரியாலுல் ஜினான் – பீ – உலூமில் அத்யானில்** *1960 இல் பணியில் சேர்ந்தார்கள்.*

ரியாலுல் ஜினான் மதரஸாவை துவக்க காலத்தில் இருந்து நடத்தி வந்த பணியாற்றிய தலைமையாசிரியர் பெரியார்கள் உஸ்தாதுகள் பட்டியல் இதோ

திருநெல்வேலி ஹை கிரவுண்ட் எம்.ஓ.சி. வளாகத்தில் திருமணத்தில் மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் நிக்காஹ் சொற்பொழிவாற்றுகிறார்கள்.

மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் தமிழகத்தில் பல்வேறு மஸ்ஜிதுகளில் கிப்லா திசை வரையறுத்து குறித்து தருவார்கள். அந்தக் காட்சி இதோ.

பேட்டை ரியாலுல் ஜினான் அரபிக் கல்லூரியில் ஹிஜ்ரி 1291 முதல் ஹிஜ்ரி 1380 வரை பணியாற்றிய தலைமை ஆசிரியப் பெரியார்கள்

1. மர்ஹூம் மௌலானா மௌலவி
   ஷேக்அப்துல்காதிர் சாஹிப் அவர்கள்
2. மர்ஹூம் மௌலானா மௌலவி மதார் முகம்மது சாஹிப்
3. வடகரை மௌலானா மௌலவி செய்யது முகம்மது ஷர்புத்தீன்
4. சாலியம் மௌலானா மௌலவி கோயா
5. குமர நல்லூர் மௌலவி குஞ்சாவிமுஸலியார்
6. பேட்டை மௌலவி செய்யதுமுஹம்மது
7. தென்காசி மௌலவி அப்துர்ரஹ்மான்
8. கிளியனூர் மௌலவி அப்துல்ஹமீது
9. சித்தையங்கோட்டை மௌலவி ஹுஸைன்முகம்மது சாஹிப்
10. திண்டுக்கல் மௌலவி கான் முஹம்மது சாஹிப்
11. பள்ளப்பட்டி மௌலவி முஹம்மதுகாசீம்
12. பள்ளப்பட்டி மௌலவி முஹம்மதுஷரீபு
13. தென்காசி மௌலவி சுலைமான்
14. கல்லிடைக்குறிச்சி மௌலவி மொன்னா மு ஹ ம் ம து சாஹிப் அவர்கள் இவர்களில் சிலர் நீண்ட காலமாகப் பதவி வகித்திருக்கிறார்கள். சிலர் இடை இடையே விட்டு விட்டுப் பதவி ஏற்று நடத்தி வந்திருக்கிறார்கள்.

1960-ஆம் உஸ்தாதுகள்

1. மௌலானா மௌலவி மொன்னா முகமது சாஹிப் அவர்கள், (கல்லிடைக்குறிச்சி) தலைமை ஆசிரியர்
2. மௌலானா மௌலவி S.R.ஷம்சுல்ஹுதா சாஹிப் அவர்கள் (வடக்கு மாங்குடி, தஞ்சை ஜில்லா)
3. மௌலானா மௌலவி B. A.கலீலுர்ரஹ்மான் சாஹிப் அவர்கள், பெரியகுளம் (மதுரை ஜில்லா)
4. மௌலானா S.அப்துல்கனி சாஹிப் அவர்கள் கம்பம் (மதுரை ஜில்லா)
5. மௌலானா ஷஹாபுத்தீன் சாஹிப் அவர்கள், பீமாபள்ளி (கேரளா)

இம் மத்ரஸாவை நடத்திவந்த பெரியார்கள்

1. ஜனாப் வ. காதர் முகைதீன் ராவுத்தர் மர்ஹூம் அவர்கள்
2. உ. நாகூர் மீறாமைதீன் ராவுத்தர் அவர்கள்
3. வீ.ம.முஹம்மது கனி ராவுத்தர் அவர்கள்
4. மீ.றா.வ.மொன்னா முஹம்மது ராவுத்தர் அவர்கள்
5. மௌலவி வ.கா.வருசை மீறான் இப்ராஹீம் ராவுத்தர் அவர்கள்
6. வ.காதர் இப்ராஹீம் ராவுத்தர் அவர்கள்
7. உ.நா.ஹாஜி பீர் முகியித்தீன் ராவுத்தர் அவர்கள்
8. பி.செ.க.ஹாஜி ஷேகு மீறா ராவுத்தர் அவர்கள்
9. மீ.றா.வ.கா. வருசைமய்யதீன் ராவுத்தர்
10. சி.கா.ஹாஜி கோதர் முகியித்தீன் ராவுத்தர் அவர்கள்
11. வா.பீ.பீரு முஹம்மது ராவுத்தர்
12. ப.த.சி.திவான் மைதீன் ராவுத்தர்
13. வெ.பி.பீ.சின்னபிச்சை மைதீன் ராவுத்தர் அவர்கள்
14. வீ.ம.மு.பீர்மைதீன் ராவுத்தர்
15. மௌலவி சி.கா.ஹாஜி ஷேக் இப்ராஹீம் ராவுத்தர் அவர்கள்
16. த.ஹாஜி முஹம்மது ஷம்சுத்தீன் ராவுத்தர் அவர்கள்
17. மௌலவி வா.பீ.பீ. ஹாஜி பீர்முகியித்தீன் ராவுத்தர் அவர்கள்
18. கா.த.மீ. முகம்மது அப்துல் லதீப் ராவுத்தர் அவர்கள்

கா.மு.முஹம்மது சாலிஹ்



பேட்டையில் – கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஆவர்கள் பணியாற்றி வருகையில் கா.மு.முஹம்மது சாலிஹ் அவர்களின் பேருதவியில் ரஹ்மத் எனும் மாத இதழைத் துவக்கினார்கள். எல்லாம் வல்ல இறைவன் அருளால் ஹஸ்ரத் அவர்களின் மறைவிற்குப் பின்னரும் அவரது மகனார் அந்த இதழை இன்றளவும் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

ரஹ்மத் மாத இதழ் தொடக்கம்

ரஹ்மத் மாத இதழ் 1960ல் தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் நாற்பத்தி இரண்டு பக்கங்கள் கொண்ட இதழாக மாதம் மாதம் வெளிவந்து கொண்டிருந்தது. பின்னர் 32 பக்கங்களாக குறைக்கப்பட்டு தொடர்ந்து மாதமாதம் வெளிவந்து கொண்டிருந்தது.

மௌலவி அப்துல் ரஹீம் பாகவி அவர்கள் பொறுப்பேற்ற

பின்னர் சிலகாலம் கழித்து மீண்டும் 42 பக்கங்களாகவும் ரஹ்மத் மாத இதழ் வெளிவந்தது. பின்னர் தற்சமயம் ஐம்பத்தி நான்கு பக்கங்கள் கொண்ட ரஹ்மத் இதழ் தொடர்ந்து வெளிவந்து இன்றைக்கு அறுபது ஆண்டுகள் கடந்துவிட்டன அல்ஹம்துலில்லாஹ். ஆரம்பகால வருட சந்தா 25 ரூபாயில் இருந்து. படிப்படியாக உயர்ந்து இன்று 250 ரூபாயாக உள்ளது.

மாதாமாதம் ரஹ்மத் இதழில் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள். தலையங்கம் தவறாமல் எழுதுவார்கள். ஒவ்வொரு தலையங்கமும் அநீதியாளர்களுக்கும் ஆளும் ஆட்சியாளர்களுக்கும் எச்சரிக்கையாகவும் சாட்டையடியாகவும் திகழும். அக்கால அரசியல் நிலைகளை அரசு எடுக்கும் முன் முடிவுகளை சட்டங்களை அவை எந்தளவு சமுதாயத்தை பாதிக்கும் என்பதை எடுத்தியம்பி அற்புதமாக தலையங்கம் எழுதுவார்கள்.

மேலும் உள்பக்கம் திருக்குர்ஆன் விரிவுரை பிக்ஹூசட்டம் சம்பந்தமாக விரிவான கட்டுரைகள், தொடர்கள், அந்நேரத்தில் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் ஆற்றிய உரைகள் சொற்பொழிவுகள், மொழிபெயர்ப்புகள், இவையாவையுமே தங்கள் கைப்பட எழுதுவார்கள்.

மௌலானா B.A.கலீலுர்ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் தனது கரத்தால் எழுதி ரஹ்மத் பதிப்பகம் மூலம் வெளியிட்ட நூற்களின் பட்டியல் இதோ

1. ஜகாத்தின் சட்ட திட்டங்கள்
2. இல்லற வாழ்க்கையில் இஸ்லாமிய பெண்
3. இல்லற வாழ்க்கையில் முஸ்லிம்கள்
4. இஸ்லாம் ஓர் அறிமுகம்
5. தப்லீகின் சிறப்பு
6. தொழுகையின் சிறப்பு
7. ரமலானில் சிறப்பு
8. இஸ்லாமிய கொள்கை மணிக்கோவை
9. ஸதகாவின் சிறப்பு
10. ஷஹீதே அஃஸம் இமாம் ஹூஸைன் (ரலி)
11. ரஹ்மத் வெள்ளிவிழா ஆண்டு சீரத் மலர்
12. இஸ்லாம் தரும் ஜோதி
13. பேரின்ப கனிகள்
14. ஹஜ்ரத் பிலால் (ரலி)

15. தியானத்தின் சிறப்பு
16. சன்மார்க்க அழைப்பு
17. இமாம்புகாரி (ரஹ்)
18. உம்முல்குர்ஆன்
19. சுவர்க்கமும் அதன் இன்பங்களும்
20. தொழுகையின் தத்துவ விளக்கம்
21. இஸ்லாமிய ஷரிஅத் 10ம் ஆண்டு மலர்
22. உத்தம ஸஹாபாக்கள்
23. இஸ்லாமும் வர்த்தகமும்
24. தொழுவோர் துணைவன்
25. தீமை ஒழித்த முஸ்லிம்கள்
26. முஸ்லிம்களின் தாய்மார்கள்
27. முஸ்லிம்கள் முன்னேற வழி
28. மாதர் திலகம் பாத்திமா (ரலி)
29. மத்ஹபுகள் அவசியமே

பி.கே.எஸ். ஐ.டி.ஐ திறப்பு விழாவின்போது பன்னூலாசிரியர் அ.க.அ.ஸூபைர் ஸய்யிதி உரையாற்றுகிறார்.



தமிழ் மாநில ஜமா அத்துல் உலமா சபை தலைவர் மௌலானா காஜாமைதீன் அவர்களுடன் தாளாளர் சுல்தான் அலாவுதீன் அவர்கள்

B.A.K.அப்துர் ரஹீம் பாஜில் பாகவி

மௌலவி பிரியத்திற்குரிய B.A.K. அப்துர் ரஹீம் பாஜில் பாகவி அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு இடையில் ரஹ்மத் இதழை நடத்தி வருகிறார்கள். எல்லாம் வல்ல இறைவன் அருளால் அந்த இதழ் தொடர்ந்து வெளிவருமாக;

26.5.1988

இஸ்லாத்திற்காக அரும்பணியாற்றிய மேதை கலீலுர் ரஹ்மான் ரியாஜி 26.5.1988 இல் தனது 55வது வயதில் இவ்வுலக வாழ்வை நிறைவு செய்தார்கள். (இன்னாலில்லாஹி) அவர்களின் 55 ஆண்டுகால வாழ்க்கையில் சில பதிவுகளை இங்கே பதிவிட வேண்டியது அவசியமாகிறது.

அல்ஹாஜ்ஜா மெஹருன்னிசா பேகம் ஸாஹிபா

B.A. கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஸ்ரத் (ரஹ்) அவர்களின் துணைவியார் அல்ஹாஜ்ஜா, மெஹருன்னிசா பேகம் ஸாஹிபா 3.8.2020 இல் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார்கள்.

பன்னூலாசிரியர் அ.க.அ. ஸுபைர் ஸய்யிதி M.A.

எனது பிரியத்திற்குரிய சகோதரர் பன்னூலாசிரியர் கவிஞர் அ.க.அ. ஸுபைர் ஸய்யிதி M.A.அவர்கள் அஷரத்துல் முபஷ்ஷரா (2019) (76 பக்கங்கள்) யஸ் அலூனக நபியிடம் கேள்வி? அல்லாஹ்வின் பதில் 2021 (112 பக்கங்கள்) பராஅத் இரவு இரத்தினத் துணுக்குகள் சொல்லுங்கள் ஸலவாத் தீர்ப்பு மேடை வாழத் துவங்கு போன்ற எண்ணற்ற நூல்களை எழுதியவர் பல நூல்களை எழுதி வெளியிட இயலாது தவிப்பவர், தனது தாயார் மறைந்தபோது அவர் எழுதிய கவிதை மட்டும் அவரது எழுத்தாற்றலுக்குச் சான்றாக இதோ!

அல்ஹாஜ் நாகூர் இ.எம்.ஹனீபா அவர்களுடன் பன்னூலாசிரியர் அ.க.அ.ஸுபைர் ஸய்யிதி அவர்கள்

என் தாயே!
என் தாயே!
எங்கே
சென்றீர்
என் தாயே!

ஏங்குகிறேன்
உன் பிரிவை
எண்ணி நானும்
நாளும்
வாடுகிறேன்
என் தாயே!

அம்மா என்ற
சொல்லுக்கு
மகுடம்
சூட்டியவர்கள்
நீங்கள்
என் தாயே!

சும்மா மற்றும்
சோம்பிக்
கிடந்தாலும்
சுவனத்து
நாயகியே
மனம்
சோராமல்
நீர்தான்
அரவணைத்தீர்!

எம்மை
அன்புடன்
என் தாயே!

வம்பாய்
மற்றும்
வகையாய்
பேசினாலும்
வாது
கொள்ளாமல்
வலிய
வந்து
மன்னிப்பீர்
என் தாயே!

என் தாயே!
என் தாயே!
எங்கே சென்றீர்
என் தாயே!

பாதை
தவறி வந்த
வாதை நீரால்
பாதம் முதல்
கழுத்து வரை
பதம் பார்த்த
பின்னரே
நீரை
வெளியேற்றி

நிம்மதி
பெருமூச்செறியும்
நிலையில்
என் தாயே!
நிலை குலைந்து
தன்னிலை
மறந்த தேனோ
என் தாயே!
தாக்கம்
ஏற்படுத்திய
தங்களின்
தடுமாற்றம்
எங்களை
தாரை
தாரையாய்
கண்ணீர்
வடிக்க
செய்தது
என் தாயே!

மீண்டும்
உடல் கனக்க
உங்களை
பார்த்தபின்
எங்களின்
மனம்
கனத்தது
என் தாயே!

தகப்பன் இல்லா
எங்களை
தரணியில்
தலைநிமிரும்
பண்பாளராய்
உயர்த்திட்ட
பெருமை
உங்களையே
சாரும்
என் தாயே!

என் தாயே
என் தாயே
எங்களை
விட்டு
எங்கே
சென்றீர்
என் தாயே!

முப்பத்தி
மூன்றாண்டு
முடிசூடா ராணியாய்
குடும்பத்திற்கு
உழைத்து
தேனீயாய்
மாறிப்
போயிருந்தீர்கள்
என் தாயே!

பிள்ளைச்
செல்வம்
பத்தும்
பெற்று
பேருவகை
பெருவாழ்வும்
பெற்றும்
வாழ்ந்தே
வந்தீர்
என் தாயே!

அந்த
பிள்ளை
முகம் பார்த்து
பாசக்
கணவரின்
இழப்பைக்கூட
பொறுத்தீர்கள்
என் தாயே!

எங்களுக்கான
இருப்புகளை
பொறுப்பாய்
வகுத்து
தந்தீர்
என் தாயே!

இனி எங்கு
காண்பேன்
என் தாயே
தங்களை
என்று
காண்பேன்
என் தாயே!

தன் பதியின்
உயர்விற்கும்
சேவைக்கும்
துணைநின்றே
மகிழ்ந்திட்டீர்
என் தாயே!
உம்மை
இழந்து
அனலிடை
புழுவாய்
துடிக்கிறேன்
என் தாயே!

குடும்பத்தை
தாக்க வந்த
கிருமிகளை
விஷக்
கிருமிகளை
தனியொரு
ஆளாய்
தாங்கிட்டு
தடுத்திட்டு
தன்மானம்
காத்து
நின்றீர்
என் தாயே!

குடும்ப மானம்
காத்து நிற்கும்
திட உள்ளம்
பெற்றிருந்தீர்
என் தாயே!

முகலாய
வம்சத்து
முத்தானதாலோ
புகழ் ஆய
பெற்றிற்கு
புறப்பட்டு
சென்றீர்
என் தாயே!
பதியின்

பரிசுத்தம்
சதியினை
முறிக்கும்
விதியென
வந்தாலும்
சதியென
கிடக்காமல்
இதயம்
பூப்பெய்வீர்
என் தாயே!

முதுமையில்
வந்த
கெட்டப்
பதுமையின்
பாதிப்பு
எங்களை
வெறுமையில்
விட்டது
என் தாயே!

இதற்கு
மறுமையில்
மாண்பாய்
பலன்களை
பெற்றிடு
என் தாயே!

இமயம்
சரிந்தது
எங்கள்
இதயம்
வெடித்தது
இனி
எதற்கினி
கூடல்
இனிமேல்
தானோ
ஊடல்

என் தாயே!
என் தாயே!
எங்களை
விட்டு
எங்கே
சென்றீர்
என் தாயே!

தா யென்பது
தன்மானமெனில்
தரணியில்
இழந்து
நிற்கின்றோம்
அதை
என் தாயே!

நாங்கள்
கால்
நூற்றாண்டிற்கு
முன்னே
யதீமானாலும்
அரை
நூற்றாண்டிற்கு
பின்னே தான்
யதீமின் வலியை
உணர்ந்தோம்
என் தாயே!

நம்மின்
இதயத்து
ரோஜாவாம்
நபியே
இரசூலே
தங்கள் மனம்
எவ்வளவு
வலித்திருக்கும்
ஆறுவயதிலே
அவ்வலியை
சுமந்ததினால்

இதை எண்ணி
ஆறுதலடைவோம்
என் தாயே
இன்ஷா
அல்லாஹ்
ஆறுதல்
அடைவோம்
என் தாயே!

யா அல்லாஹ்
என் தாயின்
தன்னலமற்ற
சேவைகளை
ஏற்பாயாக!
கலப்பற்ற
பாவமன்னிப்பை
வழங்குவாயாக
அவர்களின்
வாழ்வை
தியாகமாக்கி
கப்ரை ஒளியாக்கி
மறுமை வாழ்வை
சிறப்பாக்கி
ஜன்னத்துல்
பிர்தவ்ஸை
தந்தருள்வாயாக
ஆமீன்..!

ரியாஜி ஹஜ்ரத் அவர்களின் பிள்ளைகள்

மௌலானா அல்ஹாஜ் B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் தன் சொந்த தாய் மாமனரான R.M.இஸ்மாயில் பெய்க் சாஹிப் குல்சும் பீவி அவர்களின் ஐந்தாவது மகளான தீன் நெறியும், மார்க்கப்பற்றும், சமயோஜித திறனும் உத்வேக வீரமும் ஒருங்கே பெற்றும் வீர மங்கையாக திகழ்ந்த ஜனாபா அல்ஹாஜ்ஜா மெஹருன்னிசா பேகம் ஸாஹிபா அவர்களை மணாளியாக மணமுடித்து வாழ்க்கைத் துணையாக்கி கொண்டார்கள்.

மௌலானா B.A.கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அல்ஹாஜ்ஜா மெஹருன்னிசா பேகம் ஸாஹிபா தம்பதியினரின் முப்பதாண்டு இல்வாழ்க்கையில் பத்து குழந்தைகள் பிறந்தன அவர்களை வரிசை கிரமமாக பார்க்கலாம்.

1. மூத்தமகள் **அல்ஹாஜ்ஜா சுமையா காத்தூன்.** இவரின் கணவர் **ஹாஜி S.தாவூது பாட்ஷா** அவர்கள். வனத்துறையில் உயர் அதிகாரியாக பணியாற்றி தற்சமயம் ஓய்வு பெற்றநிலையில் பெரியகுளம் பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். இந்த தம்பதியினருக்கு **1. சையது அஹமது இம்ரான் 2. சையது கலீல் இர்பான்** எனும் இரு ஆண் மக்கள் உள்ளனர்.

2. இரண்டாவது மகன் **அல்ஹாஜ் B.A.K.அப்துார் ரஹீம் பாஜில் பாகவி** அவர்கள். மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் விட்டுச்சென்ற அனைத்து பணிகளையும், ரஹ்மத் மாத இதழின் ஆசிரியராக பொறுப்பேற்று தொய்வின்றி சுமார் முப்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக திறம்பட நடத்தி வருகிறார். இவர் திருநெல்வேலிபேட்டையில் குடியிருந்து வருகிறார். இவருக்கு **ஷாக்கிராபானு** என்ற மனைவியும் **நாஹிதாலுபானா அத்தியதுர்ரஹ்மான்** என்ற இருபெண்மக்களும் **கலீலுர்ரஹ்மான் பாஸித்** என் ஒரு ஆண் மகனும் இருக்கின்றனர்.

3. மூன்றாவது மகள் **நசீமா பேகம்** இவரின் கணவர் **டாக்டர் முஹம்மது ரபி** அவர்கள். மாவட்ட மருத்துவ அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்ற நிலையில் மதுரையில் குடியிருந்து வருகிறார். **டாக்டர் முஹம்மது ரபி** அவர்கள் எனது

துணைவியார் **டாக்டர் திவானி ஜஹானராவோடு** மருத்துவ கல்லூரியில் ஒன்றாக பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தம்பதியினருக்கு **முஹம்மது அஸாருத்தீன், ஜாவித் அப்துல்லாஹ்** என்ற இரு ஆண்மக்கள். இவர்களில் ஜாவித் அப்துல்லாஹ் சிறுவயதிலேயே இறையடி சேர்ந்துவிட்டனர்.

நான்காவது மகன் **அப்துல் ஜமீல் அன்சாரி** மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பழம்பெரும் ரஹ்மத் அச்சகத்தின் அதிபராக செயல்பட்டு வருகிறார். திருநெல்வேலி பேட்டையில் குடியிருந்து வரும் அவருக்கு. பல்கீஸ்பானு என்ற மனைவியும் (சமீபத்தில் காலமாகி விட்டார்) **கலீலுர் ரஹ்மான் ரியாஜ், அப்ரித்** என்ற இரு ஆண் மக்கள் உள்ளனர்.

ஐந்தாவது மகன் **முஹம்மது இஸ்மாயில் முஹாஜிர்.** இவர் இளையான்குடி ஹமிதியா மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இளையான்குடியில் குடியிருந்து வரும் இவருக்கு **ஜுலைஹாபானு** என்ற மனைவியும் **1. ஜின்னீராகாத்தூன் 2. ஸகிய்யாஹசினா** என்ற இரு பெண் மக்களும் உள்ளனர்.

ஆறாவது மகள். **பாய்ஜா பானு**. இவரின் கணவர் **அப்ஸல் பேக்** தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வரும் நிலையில் பெரியகுளம் பகுதியில் குடியிருந்து வருகிறார் இந்த தம்பதியினருக்கு **1. ஸகினா குல்சும்பீவி** என்ற பெண் மகளும், **2. பிலால் அஹமது 3. கலீல் அஹமது சுபுஹானி** என்ற இரு ஆண்மக்களும் உள்ளனர்.

ஏழாவது மகன்

அப்துஸ் ஸலாம் ஸுபைர் மௌலானா கலீலுர்ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களைப் போலவே எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். பல நூற்களை எழுதி பன்னூலாசிரியராகவும். பத்திரிகை நிறுவனமொன்றின் பொறுப்பாசிரியராகவும் பணிபுரிந்து வருகிறார். மதுரையில் குடியிருந்து வரும் இவருக்கு **பரிதா பேகம்** என்ற மனைவியும் **1.பரீரா மெஹர் 2.கலீலுர் ரஹ்மான் மாஹின். 3. நமீரா ரயீஸா** என்ற இரு பெண் மக்களும் ஒரு ஆண் மகனும் உள்ளனர்.

8. முஹம்மது ஹசன்

9. அஹமது ஹூசைன்.

மேற்கண்ட 8, 9 எண்ணில் உள்ள இவ்விரு ஆண்மக்கள் குழந்தைப் பருவத்திலேயே இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

10. பத்தாவது மகன்

முஹம்மது இம்தாதுல்லா மவ்லானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களின் கடைசி பிள்ளை இவர். ஹோமியோபதி மருத்துவராய் உயர்ந்து, திருநெல்வேலி மேலப்பாளையத்தில் – தொடர் மருத்துவ சேவை ஆற்றி வருகிறார். திருநெல்வேலிபேட்டையில் குடியிருந்து வரும். இவருக்கு **ரிஜ்வானா பேகம்** என்ற மனைவி உள்ளார்.

கொள்ளுப்பேரன் பேத்திகள்

1.தனீன் 2.தன்ஸின் 3.தமீமுல் அன்சாரி 4.அமீன் 5.ஹப்ஸா 6. ஹனீன் 7. லுத்துபிய்யா 8. அதிபா ஃபத்தினா 9. மெஹருன்னிசா ஆகியோர்கள் கொள்ளு பேரன் பேத்திகள் ஆவர்.

கம்பீரத் தோற்றம்

தங்க நிற மேனி வெள்ளைவெளேர் என்ற முகம். இறைஜோதி ததும்பிய விழிகள், துருக்கி தொப்பி அதன் மீது கருப்பு குஞ்சரம், வெண்ணிற ஆடை, குடை பிடித்து நடைப யின்று நடந்து வரும் காட்சி வர்ணிக்கும் சொல்லில் அடங்காது. மேடையேறினால் எதிரிகள் தாடை உடையும் அளவுக்கு பேசும் திறன் கருப்பு ஷேர்வானி, கருப்பு வாஷ்கோட் இவைகள் அணிந்து வரும் கம்பீரம் இவர்களின் உருவ அமைப்புக்கு சாட்சியாகும். காண்போரின் கண்ணுக்கு குளிர்தரும் காட்சியாகும்.

வீர உரை

கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களின் கம்பீர உரை என்றென்றும் நினைவில் நீங்காதிருக்கும். அவர்கள் ஷரிஅத் மாநாடுகள் மீலாது மேடைகள், கருத்தரங்கம், கல்லூரியின் பயிலரங்கம் போன்ற மேடைகளில் ஆற்றிய உரைகள் ஏராளம். சான்றுக்கு ஒன்றே ஒன்று மட்டும் இதோ..!

மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களின் இளமை முதல் மறைவு வரை உள்ள தோற்றங்களின் புகைப்படங்கள்



Moulvi Khalilur Rahman
Principal

இமாம்களை ஏன் பின்பற்ற வேண்டும்?

இஸ்லாமிய ஷரீ அத்தின் மூலாதாரர்களான குர் ஆன், ஹதீஸிலிருந்து தாங்களாகவே ஆராய்ந்தெடுத்து சட்டங்கள் இயற்றிக் கொண்டால் என்ன?

இமாம்களை பின்பற்ற வேண்டும்?

தக்லீதின் அவசியம் என்ன? – என சில அன்பர்கள் குழம்பி நிற்கிறார்கள்.

இவர்களின் கூற்று அரசியல் நிர்ணய சபையினரால் இயற்றப்பட்ட சட்டங்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? ஒவ்வொருவரும் தாமாகவே சட்டங்கள் வகுத்துக்கொண்டு பின்பற்றினாலென்ன? எனக் கூறும் குறைமதியாளர்களின் கூற்றுக்கு நிகரானதாகும்.

குர்ஆன், ஹதீஸிலிருந்து சட்டங்களை ஆராய்ந்தெடுப்பது என்பது 'இஜ்திஹாா' தின் அந்தஸ்தை எய்தியவர்களைத் தவிர மற்றவர்களால் சாத்தியமாகக்கூடிய விஷயமன்று. ஒருவருக்கு குர்ஆனின் மேலெழுந்தவாரியான பொருள் தெரிந்தால் மட்டும் சட்டங்களை ஆராய்ந்தெடுக்கும் ஆற்றல் உண்டாகிவிடாது.

குர்ஆனில் சில வசனங்கள், **'நாஸிக்'** ஆகவும் சில **'மன்ஸூக்'** ஆகவும், சில **'முஜ்மல்** ஆகவும், சில **'முஃபஸ்ஸர்'** ஆகவும் சில **'முஹ்கம்'** ஆகவும் சில **'முதஷாபிஹ்'** ஆகவும் உள்ளன. சில வார்த்தைகள், **'ஆம்'** மாகவும், சில **'காஸ்'**ஸாகவும், சில **'முஷ்த்தரகா'**கவும் சில **'முஅவ்வலா'**கவும், இப்படி இன்னும் எத்தனையோ பல பிரிவுகள் உள்ளன. இவற்றைப் புரிந்து கொள்வதற்கு **'உஸூலுல் ஃபிக்ஹு உஸூலுத் தப்ஸீர்'** என்ற கலைகளில் சிறப்பான ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அதில் கையாளப்படும் கலைச் சொற்களைப் புரிந்துகொள்வதற்கே தனித்திறமை வேண்டும்.

இனி நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சொல், செயல், ஆமோதித்தல் அடங்கிய ஹதீஸுகளை எடுத்துக் கொண்டாலோ, அவற்றிலும் **முதாவத்திர், முர்ஸல், முன்கதிஃ, ஸஹீஹ், ளயீஃப், மவ்ளூஃ** என்றவாறு பலதரப்பட்ட ஹதீஸ்கள் உள்ளன. அவற்றை தரம் பிரித்தறியக்கூடிய ஆற்றல்

பெற்றிருக்க வேண்டும். இவற்றை **'உஸூலுல்ஹதீஸ்'** என்ற கலையில் தேர்ந்த மேதைகளாலேயே கண்டுபிடிக்க இயலும்.

ஆக, மஸாயில்கள் எனும் சட்டதிட்டங்களை அலசி ஆராய்ந்து தொகுப்போருக்கு ஏறத்தாழ பதினான்கு கலைகளில் ஈடுபாடு தேவைப்படுகிறது. இது எல்லோராலும் சாத்தியமாகக் கூடிய காரியமா? பொதுச் சட்டங்களை யாவரும் அறிந்து பின்பற்றுவது போலவே குர்ஆனிலுள்ள நுணுக்கமான சட்டதிட்டங்களையும் அறிந்து செயலாற்றுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமை. அவ்வாறு ஒன்றை அமல் செய்வதற்கு அதுபற்றிய விளக்கமான அறிவு தேவைப்படுகிறது. நுணுக்கமான சட்டதிட்டங்களை தெளிவாக அறிவது என்பது ஒரு முஜ்தஹிது உடைய தீர்க்கமான ஆராய்ச்சியை (இஜ்திஹாதை)ச் சார்ந்த விஷயமாகும். 'ஆதலால். குர்ஆன், ஹதீஸின் நுணுக்கமான சட்டப்பிரிவுகளில் அமல் செய்வதற்கு ஒரு முஜ் தஹிதைப் பின்பற்றுவது இயல்பாகவே (வாஜிபு) கடமையாகி விடுகிறது. இது ஃபர்ளான கடமைகளை அறியாதிருக்கும் முஸ்லிம் அந்தக் கடமைகளை போதிக்கும் ஆலிமுடைய வழிகாட்டலை ஏற்பது அவர் மீது இயல்பாகவே வாஜிபாகி விடுவதற்குச் சமமாகும்.

இதே கருத்தை இன்னொரு வகையில் கவனிப்போம்.

அல்லாஹுதஆலா குர்ஆனிலே **'வ தஃப் ஸீல குல்லி ஷையின்' குர் ஆன்,** அனைத்தையும் விவரிக்க கூடியதாகும் என்றும், மற்றொரு வசனத்தில் **'திப்யானல் லிகுல்லி ஷையின், குர் ஆன்,** அனைத்து விஷயங்களுக்கும் விரிவுரையாகும் என்றும் அருளுகிறான். இதிலிருந்து குர் ஆனில் எல்லாவித (மஸாயில்) சட்டப் பிரிவுகளும் உள்ளன என்பது தெளிவாகிறது. ஆனால் அவற்றை எல்லோராலும் அறிந்துகொள்ள முடிவதில்லை. கொள்வினை கொடுப்பினை, சம்பந்தமான பன்னூற்றுக் கணக்கான சட்டங்கள் நம்மவர்களுக்கு ஃபிக்ஹூ கிரந்தங்களைத் தவிர வேறு எதிலும் கிடைப்பதில்லை. ஆனால், அவற்றின் உஸூல்கள் குர் ஆனின் நுணுக்கமான சட்டப் பிரிவுகள் ஃபர்ளு, வாஜிபின் அந்தஸ்த்திலுள்ளவை. ஃபர்ளு, வாஜிபுகளைப் புரிந்து கொள்வதற்கு 'தக்லீத்' தேவைப்படுகிறது. அவ்விதமாயின் தக்லீதும் வாஜிபு என்பதில் என்ன சந்தேகமிருக்க முடியும்?

உதாரணமாக தொழுவது ஃபர்ளு: அந்தத் தொழுகைக்கு '**தஹாரத்**' எனும் சுத்தம் தேவை. ஆதலால் அவர் தண்ணீரைத் தேடி அடைவது அவர்மீது வாஜிபாகி விடுகிறதல்லவா? இப்படித்தான் இமாம்களைப் பின்தொடர்வதும் வாஜிபாகி விடுகிறது. இதனையே இறைவனும் தனது திருமறையில், '**ஃபஸ்தஅலூ அஹ்லத் திக்ரி இன்குன்தும் லா தஃலமூன்**' – நீங்கள் அறியாதவர்களாயிருப்பின் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள் – என்று கட்டளையிடுகிறான். **அஹ்லுத் திக்ர்**' என்போர் இல்முடையோர்களாவர். அவர்கள் நாம் இமாம்கள், முஜ்தஹிதுகள்

"அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் **உலில் அம்ரு**களுக்கும் கீழ்ப்படியுங்கள்" என்று அல்லாஹுதஆலா மற்றொரு வசனத்தில் அருளுகிறான். உலில் அம்ருகளென்போர் முஜ் தஹிதுகளெனும் இமாம்களாவர். ஏனெனில், அம்மேதைகள் அல்லாஹ்வுடையவும், அவன் தூதருடையவும் கருத்துக்களை நம்மவருக்குத் தெளிவுபடுத்தியவர்களாவர் எனவே, அவ்வுத்தமர்களைப் பின்தொடர்வது அல்லாஹ்வுக்கும், அவன் அருமைத் தூதருக்கும் கீழ்படிவதாகவே அமையும்?

'**உலில் அம்ரு**' களென்போர் சன்மார்க்க சட்டஞான மேதைகள் என முஜாஹித். அதா, ஹஸனுல்பஸரீ. அபுல் ஆலியா (ரஹ்) போன்ற விரிவுரையாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர். (நூல் : தஃப்ஸீர் இப்னுகதீர்).

பேரறிஞர் ஷாஹ்வலியுல்லாஹ் முஹத்தீஸ் திஹ்லவீ (ரஹ்) அவர்கள் தக்லீதின் வரலாறு குறித்து பின்வருமாறு எழுதுகிறார்கள்.

"நபிபெருமானார் (ஸல்) அவர்களின் ஜீவிய காலத்தில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளில் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஷரீஅத்தின் சட்ட விளக்கம் கோருவர். அதற்கு நபியவர்கள் சரியான சட்ட விளக்கம் தருவர். பொதுமக்கள் நற்கருமங்கள் செய்யக்கண்டால் அதனைப் பாராட்டுவர். அல்லது மௌனமாயிருந்து விடுவர். தீமை செய்யக் கண்டால் அதனைத் தடுத்து விலக்குவர். இது பொதுச் சபைகளிலும் தனிச்சபைகளிலும் நடைபெறுவதுண்டு.

பிறகு பல தேசங்களின் வெற்றிகள் ஏற்பட்டு தேசம்

விரிவடைந்தபோது ஸஹாபா பெருமக்கள், பல்வேறு நாடுகள் நகரங்களில் பரவிச் சென்று வாழலானார்கள். அங்கே புதுப்புது பிரச்சினைகள் தோன்றலாயின. ஸஹாபா பெருமக்கள் தங்களின் ஆற்றலினாலும் இஜ்திஹாதினாலும் முறையான தீர்ப்புகள் வழங்கலாயினர். அங்கிருந்தே மஸாயில்களில் வேறுபாடுகளும் மார்க்கத் தீர்ப்புகளில் கருத்து மோதல்களும் நிகழலாயின. மக்கள் தங்களின் நம்பிக்கைக்கும் பக்திக்கும் உரிய ஸஹாபிகளின் (ஃபத்வா) மார்க்கத் தீர்ப்புகளின்படி செயல்படலா யினர்.

தாபியீன்கள் காலத்தில் இந்த ஃபத்வாக்கள் பெருகிப் பரவின. அந்தப் பெரியார்கள், ஹதீஸ்களின் வெளிச்சத்தில் **(தர்ஜீஹ் – தத்பீக்)** ஒரு கருத்துக்கு முக்கியத்துவமளித்தல், கருத்து மோதலைத் தவிர்த்தல் ஆகிய பணிகளை ஓரளவு புரியத் தொடங்கினர். சில ஃபத்வாக்கள் ராஜிஹாகவும், சில மர்ஜூஹாகவும் கையாளப்பட்டன. சில ளயீஃப் என தவிர்க்கப்பட்டன. (நூல்: அல் இன்ஸாப் வால்யூம் 4 – பக்கம் 16)"

இந்தத் தெளிவுரையிலிருந்து (தக்லீத்) பின் தொடருதல் என்பது ஸஹாபாக்களின் காலத்திலும் இருந்து வந்தது. தாபியீன்கள் காலத்திலும் இருந்து வந்தது என அறிகின்றோம். ஒரு சட்டப்பிரச்சனையில் (மஸ்அலாவில்) ஆராய்ந்து சரி – தவறு என பிரித்தறியும் தகுதி பாமர மக்களிடையே முன்பும் இருந்ததில்லை. பிற்காலத்திலும் இருந்ததும் இல்லை. இன்று போலவே முன்பும் மக்கள் தக்லீத் செய்து வாழ்ந்தனர். ஆனால் முதலிரண்டு நூற்றாண்டுகளிலும் ஏதேனுமொரு மத்ஹபைப் பின்பற்றுவதை அவசியமென கருதப்படவில்லை. பின்னர், சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப பல்வேறு மேதைகளின் ஃபத்வாக்களின் படி அமல்

நான்காவது நூற்றாண்டின் மத்தியில் இமாம்களைப் பின் தொடர்ந்து செல்லும் 'தக்லீத்' செல்வாக்குப் பெற்றது. அக்காலத்தில் எவரும் தனியொரு முஜ்தஹிதாக – இமாமாக விளங்கவில்லை. மாற்றாராலும் மதிக்கப்படும் இமாம் எவரும் பிறக்கவில்லை. ஆனால் சட்டத்தின் உட்பிரிவுகளில் 'இஜ்திஹாத்' செய்யும் வழக்கம் இருந்தே வந்தது இதனடிப்படையில் இஜ்

திஹாத் தக்லீத் முறைகளை கவனித்து ஃபுகஹாளென்னும் சட்ட மேதைகள் ஏழுவகையாகத் தரம் பிரிக்கப்படுகின்றனர்.

1. மத்ஹபுகளின் ஸ்தாபகர்களான முஜ்தஹிதுகள்:

இவர்கள் தமக்கே உரித்தான இஜ்திஹாதில் அடிப்படை நியதிகளை வகுத்து, அந்த நியதிக்கேற்ப சட்டப்பிரிவுகளை ஆராய்ந்தெடுத்தார்கள். நான்கு இமாம்கள் மற்றும் இந்நால்வரைப் போன்றே தனித்தியங்கிய ஏனைய இமாம்கள் இந்தப் பிரிவில் இடம் பெறுகின்றனர்.

2. மத்ஹபில் தோன்றிய முஜ்தஹிதுகள்

இவர்கள் தமது இமாம்கள் வகுத்துச் சென்ற அடிப்படை நியதிகளுக்கேற்ப சட்டங்கள் தொகுப்போராவர். இவர்கள் சில உட்பிரிவுகளில் தமது இமாம்களுக்கு எதிராகவும் கருத்து அறிவிப்பர். ஆனால் மூல நியதிக்கு முரண்பட மாட்டார்கள். இவர்களுக்கு உட்பிரிவின் முஜ்தஹிதுகள், மூல சட்டத்தின் முகல்லிதுகள் என்றும் பெயர் வழங்கப்படுகிறது. ஹனஃபிய்யாக்களில் இமாம் **அபூயூஸுபும், இமாம் முகம்மது இப்னுஹஸன்** போன்றோரும், **மாலிகிய்யாக்களில் இமாம் முஹம்மது இப்னுல் காஸிம் இமாம் அஷ்ஹப்** போன்றோரும், **ஷாக்பியிய்யாக்களில் இமாம் புவைதீ, ருவை ஈ, அல்முராதீ** போன்றோரும், இந்தப் பிரிவில் இடம் பிரிகின்றனர்.

3. மஸாயில்களில் முஜ்தஹிதுகள்:

சில மஸாயில்கள் குறித்து அந்தந்த மத்ஹபின் இமாம்கள் ஏதும் கருத்துத் தெரிவிக்காமல் இருப்பர், அவர்கள் விட்டுச் சென்ற மஸாயிலில் அவர்கள் வகுத்துச் சென்ற மூல நியதிகளுக்கேற்ப பிரச்சினைகளுக்கு முடிவு காண்போராவர். இவர்கள், அடிப்படை நியதிகளிலும், சட்டப் பிரிவுகளிலும் தனது இமாம்களுக்கு கருத்து வேறுபாடு கொள்ளமாட்டார்கள். ஹனஃபிய்யாக்களில் அல்லாமா தஹாவீ, கஷ்ஷாப் போன்றோரும், மாலிகிய்யாக்களில் இப்னு ருஷ்துமாஜிரீ போன்றோரும், ஷாஃபியிய்யாக்களில் அல்லாமா தஹாவீ, கஷ்ஷாப் போன்றோரும், மாலிகிய்யாக்களில் இப்னு ருஷ்துமாஜிரீ போன்றோரும், ஷாஃபி யிய்யாக்களில் கஸ்ஸாலீ, இஸ்பீராயீனிய்யி போன்றோரும் இந்தப் பிரிவில் உட்படுகின்றனர்.

4. ரிவாயத் எனும் அறிவிப்புக்களின் தராதரங்களை வகுப்பவர்கள்

தங்களின் இமாம்கள் வாயிலாக அறிவிக்கப்பட்ட பல்வேறு ரிவாயத்துகள் அர்ஜஹ் அக்வா, அஸஹ்ஹூ, அவ்லா, கியாஸூக்கு மிகப் பொருந்தி வருவது மக்கள் பின்பற்றுவதற்கு மிகவும் ஏற்றது என்றவாறு முடிவு கூறுவோர் ஆவர்.

5. சட்டங்களை வெளிக்கொணர்வோர்:

மத்ஹபின் ஸ்தாபகர்கள் இக்கருத்தைத் தொனிக்கும்படியானதைக் கூறியிருப்பின் அவ்விரண்டில் எது பின்பற்றத்தக்கது என முடிவு கூறுவோராவர். சட்டத்துறையில் அவர்கள் பெற்றிருக்கும் ஆழ்ந்த புலமையால் இப்பணியைச் செய்கின்றனர். ஆனால் அவர்கள் இஜ்திஹாதில் தலையிடுவதில்லை.

6. பலஹீனமான சொல் எது? உறுதியான சொல் எது?

என்று பகுத்துணரும் ஆற்றல் மிக்கோர்:

இவர்கள் தாம், அஸ்ஹாபுல் முஅல்லஃபாத் எனும் ஃபிக்ஹூ கிரந்த ஆசிரியர்களாவர். தமது நூலில் அங்கீகாரம் பெற்ற சட்டங்களின் பதப்பிரயோகங்களையே பதிவு செய்திருப்பர். மற்றவற்றை தள்ளிவிடுவர்.

7. பொதுவாக தமது இமாம்களைப் பின் தொடர்வோர்:

தங்களின் இமாம்கள், அவர்களின் சீடர்கள் கூறியவற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்வோர் ஆவர்.

இந்தப் பேருண்மைகளையெல்லாம் புரிந்து கொள்ளாத சிலர், இமாம்களின் இமாலயச் சேவைகளைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். **ஹனஃபீ, ஷாஃபியீ, மாலிக்கீ, ஹன்பலீ** *பிரிவுகள் ஏன்? அவர்களை நாம் ஏன் பின்பற்ற வேண்டும்? என்று குழம்பி நிற்கின்றனர். சில சொற்ப அறிவு படைத்த அதிமேதாவிகள் தமக்கும் இஜ்திஹாதுடைய தகுதி இருப்பதாக வாதிடுகின்றனர். இத்தகையோரைப் பார்த்து நாம் பரிதாபப்பட*

வேண்டியது தவிர வேறுவழியில்லை. எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லோருக்கும் நேர் வழிகாட்டி அருள்வாயாக! ஆமீன். இப்படி ஆழ்ந்த கருத்தாழம் மிக்க சொற்பொழிவுகளை ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் நிகழ்த்தி உள்ளார்கள்.

கா.பு.ம.காதர்முகையதீன் இராவுத்தர்

கா.பு.ம.காதர்முகையதீன் இராவுத்தர் உ.சி.ப முகையதீன் ராவுத்தர் 11.4.1921 இல் தமிழ் சித்தவைத்திய சங்கத்தை சிறப்பாக நடத்தியவர்கள் பேட்டையைச் சேர்ந்தவர்கள் செ.செய்கு அப்துல்காதிர் ஆலீம்.

திருநெல்வேலிப்பேட்டை மகாகனம் பொருந்திய ஹஸரத்து மவுலவீ செ.செய்கு அப்துல்காதிர் ஆலீம் சாஹிபு அவர்களால் இயற்றப்பட்டு நாலனா விலையில் வெளியான நூல் அஹ்க்காமுல் இஸ்லாம் (ஹிஜ்ரி 1328 பக்கங்கள் 62)

K.E.செய்யிது முஹம்மது

முதுமொழி ஆராட்டு எனும் நூல் 1954 இல் 42 விலையில் 22 பக்கங்களில் வெளியிட்டவர் திருநெல்வேலி பேட்டை K.E.செய்யிது முஹம்மது.

திருவாசகம்

சைவ சமயா சாரியராகிய திருவாதவூர் மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்தது. இஃது திருப்புண் கூர் சிவலோக நாத பண்டிதவரவர்களால் பரிசோதித்து இவை திருநெல்வேலிப்பேட்டை பரிமளக்கார வீதியிலிருக்கும்

கா.பீர் காத றொலி ராவுத்தரவர்களால்

காஞ்சிபுரம் திருவேங்கட முதலியாரது இயற்றமிழ் விளங்க அச்சுக்கூடத்தில் கி.பி.1868 இல் பதிப்பிக்கப்பட்டது. திருவாசகம்

கா.பீர்காதரொலி ராவுத்தர்

பேட்டை, கா.பீர்காதர் ஒலி ராவுத்தர் சமய நல்லிணக்கமாக திருவாசகத்தை 1868 இல் (பிரபவ வருடம் பங்குனி மாதம்) பதிப்பித்தது வரலாறு.

K.S.K.முஹம்மது ஹூஸைன் BABL ம.வா.பீ.மய்தீன் வாபர் மு.அபுல்ஹஸன் ஷாதலி பாஜில் பாகவி காரியதரிசிகளாக இருந்து முஸ்லிம்கள் முன்னேற்றத்திற்காக பேட்டை மேலத் தெருவில் இருந்து திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் லீக் சார்பில் பிரசுரங்கள் வெளியிட்ட ஊர் பேட்டை (16.2.1939)

ஆ.நா.காஜாமுகைதீன் இராவுத்தர்

ரஹ்மான் மாலை, திருநபிமாலை, பேட்டை நகர் சிறப்பு எனும் நூல் (34 பக்கங்கள்) திருநெல்வேலிப்பேட்டை பரிமளகார மேலத்தெரு ஆ.நாகூர் மீரா முகையதீன் இராவுத்தர் குமாரர் அருள் வளஞ் சிறந்த வீவேக வித்வ சிரோன் மணியாகிய கனம் உ.சி.பக்கீர் முகையதீன் இராவுத்தர் சிஷ்யனுமாகிய ஆ.நா.காஜா முகையதீன் ராவுத்தர் இயற்றி, ஆ.சி.சேது முகம்மது இராவுத்தர் முயற்சியால், மேலச் செவல் புலவர் பாவா முகையதீன் புலவர் பரிசோதித்து, ஹிஜ்ரி 1322 இல் வெளியாயிற்று.

வா.பீ.பீர்முஹியித்தீன்

குலாசததுத் தசவ்வுபு எனும் நூலின் முதற்பாகத்தை மௌலானா மௌலவி முஹம்மது ஷரபுத்தீன் ஆலிம் சாஹிபு பரிசோதித்து பேட்டை வா.பீ.பீர்முஹியித்தினால் இயற்றப்பட்டு 105 பக்கங்களில் வெளிவந்தது.

காதர் முகைய்யித்தீன் புலவர்

திருநெல்வேலிப் பேட்டை ஆதம்உசேன் ராவுத்தர் குமாரர் காதர் முகைய்யித்தீன் புலவர் இயற்றியது நஸிஹத்துல் மூஃமினின் மாலை.

புகழ்மிக்க பேட்டை

பேட்டை செய்குமதார் ராவுத்தர் குமாரர் ஷெய்கு அப்துல்காதர் ஆலிம் சாகிபும், பேட்டை தங்கமீரா ராவுத்தர் குமாரர் பீர் முகய்யதீன் ஆலிம் சாகிபும் பரிசோதித்து தஞ் சாவூர் வழுத்தூர் குலாம் உசேன் சாயிபு புதல்வர் பட்டு காதர்பாட்சா அவர்களும் பார்வையிட்டு மேல்விபரம் பக்கீர் முகம்மது சாகிபுஷா பொருளுதவியால் 147 பக்கங்களில் வந்த நூல் அது. புகழ்மிக்க பேட்டையில் புத்தகங்கள் பல இஸ்லாமிய

நெறிகுறித்து வெளிவந்த பேட்டையில் தீன் பணியாற்றிய ஹலரத் கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களும் எண்ணற்ற நூல்கள் எழுதிக் குவித்தார். வாணிகம் குறித்து அவர்கள் எழுதிய நூல் இஸ்லாமும் வர்த்தகமும்.

இஸ்லாமும் வர்த்தகமும்

இந்தியத் திருநாட்டிற்கு ஆதி காலத்திலேயே வணிகத்திற்காக வந்தவர் அரபிகள்

மா.பாலசுப்பிரமணியம் எம்.ஏ

மேனாட்டு வணிக மன்னர் நூல்கள் சூலை 1938ல் எழுதியுள்ளார். 'வர்த்தக யூகம்' எனும் நூலும் வந்துள்ளது. 1952 இல் வியாபாரம் செய்வது எப்படி? என்னும் நூலை மார்க்க மேதை 'அப்துர்ரஹீம்' வெளிநாட்டு வர்த்தகம் இதர விஷயங்கள் குறிப்பிட்டு படைத்துள்ளார். 'வள்ளுவர் வகுத்த வாணிபம்' என்னும் நல்லிகுப்புசாமி செட்டியார் நூலும் வந்துள்ளது. (2011)

இஸ்லாமும் வர்த்தகமும்

1960இல் கலிலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் 'இஸ்லாமும் வர்த்தகமும்' எனும் நூலைத் தந்துள்ளார்கள்.

உலகில் தமிழகத்தில் வர்த்தக நீதியை விளக்கும் நூல்கள் பல வெளிவந்துள்ளது. மேனாட்டாரின் வர்த்தக முறைகளையே அடிப்படையாகக் கொண்டு அவை எழுதப்பட்டவை.

இஸ்லாத்தின் வர்த்தக தர்மத்தைத் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த நூல் வெளிவந்தது. வர்த்தகம் செய்து பொருள் ஈட்டுவதை ஒரு சிறந்த தவம் என்று இஸ்லாம் குறிப்பிடுகிறது.

வர்த்தகநீதி

இஸ்லாம் கூறும் வர்த்தக நீதி மனித நல்வாழ்வுக்கு மிகவும் ஏற்றது. எவ்வகையிலும் பிறர் பாதிக்கப்படாத ஓர் அழகிய செயல்திட்டம் அது. அந்த வழி பின்பற்றப்பட்டால் பொருளாதாரத் தேக்க நிலை, பஞ்சம் பற்றாக்குறை, அத்தனை துன்பங்களும் அகன்று மக்கள் வாழ்வு மலரும், சமுதாயம் தழைக்கும்

சமூகத் தொண்டர்

இஸ்லாம் கூறும் வர்த்தகர் சிறந்த சமூகத் தொண்டராக பிறர் நலன் பேணுபவராக, மக்கள் தேவையைத் தக்க தருணத்தில் நிறைவேற்றித் தரும் உத்தம ஊழியராக நேர்மையாளராக அமைகின்றார் தனது தொண்டின் மூலம் இறைவனின் பொருத்தம் அடைய விரும்புகின்றார் என்ற உண்மைகளை விளக்கி கலீலுர் ரஹ்மான் ரியாஜி அற்புதமாக நூலைத் தந்துள்ளார்.

மிஷ்காதுல் மஸா பீஹ்

மிர்காத், ஷரஹ் மிஷ்காத், ஜாமி உத்திர்மிதி, அத்தர்கீப் வத்தர் ஹீப், இஹ்யா உலூஹாமித்தீன் நுஸ்ஹதுன் நாழிரீன், தன் பீஹூல் காபி லீன், ஹி தாயா ஜவ்ஹரதுன் நய்யிரா, ஷரஹ் குதூரி, கன் ஜூத்த காயிக், ஆகிய நூல்களிலிருந்து வியாபார சம்பந்தமான விஷயங்களைத் திரட்டி தேனீ போல தேனாகத் தந்துள்ளார் கலீலுர் ரஹ்மான் ரியாஜி.

தொழிலின் சிறப்பு, உழைப்பவன் உத்தமன், தன்கையே தனக்கு உதவி, ஹலாலான (நேர்மையான அனுமதிக்கப்பட்ட) தொழில், வியாபாரத்தின் மகிமை, இஸ்லாமும் வியாபாரச் சீர்திருத்தமும், வியாபாரியின் அந்தஸ்து, காலை வர்த்தகம், விளம்பரம் செய்வீர், கலப்படம், குறை பற்றி அறி வித்தல், பிறர் நலன் பேணுதல், செருப்பு வியாபாரம், அளவு நிறுவையில் பதுக்கல், நகை, ஜவுளி வியாபாரம், சரக்கை திரும்ப பெறுதல், வாக்கைக் காப்பாற்றுதல், கூட்டு வர்த்தகம், முன் பணம் கொடுத்தல் இலாபம் தவிர்க்க வேண்டியது (ஹராமான), வியாபாரங்கள், சட்டங்கள், ஏலச்சீட்டு கடன், வட்டி, வர்த்தகரின் சன்மார்க்க வாழ்வு, வர்த்தகமும் தர்மமும், அருமைநபி (ஸல்) அவர்களின் அருளுரைகள் என 49 தலைப்புகளில் 126 பக்கங்களில் அந்த நூலைத் தந்துள்ளார் மௌலானா கலிலுர் ரஹ்மான் ரியாஜி

செருப்பு வியாபாரம்

மஹான் ஹிதாவு இப்னு அஸ்லம் என்பாரிடம் ஒருவர் நான் செருப்பு வியாபாரம் செய்கிறேன். இதில் நீதியாக நடந்துகொள்ள என்ன வழி? என்றார்.

இருபுறத்தையும் சரிசமமாகச் செய் வலது கால் செருப்பை விட மற்றதை விசேஷப்படுத்தி விடாதே; இடையில் உறுதியான தோலை வை அது ஒட்டுப்போடாமல் ஒரே

தோலாக இருத்தல் வேண்டும். தையல் நெருக்கமாக இருக்க வேண்டும். ஒரு செருப்பை மற்றதின் மீது வைத்து மூடி வியாபாரம் செய்யாதே என்றார்கள்.

செருப்பு வியாபாரம் பற்றி இஸ்லாத்தின் கருத்தைப் புரிந்து கொண்டீர்களா!

(அண்ணலார் (ஸல்) அவர்கள் தங்களது பாதரட்சைக்களின் பழுதை தாங்களே சரி செய்து கொள்வார்கள் என்பது வரலாறு)

இல்லற வாழ்க்கையில் முஸ்லிம்கள்

நாகர்கோவில் தாஸர் பிரஸில் அச்சிட்டு மதுரை ரஹ்மத் பதிப்பகம் ஒரு ரூபாய் விலையில் வெளியிட்டுள்ள நூல்.

இல்லற வாழ்க்கையில் முஸ்லிம்கள் (99 பக்கங்கள்)

உத்தம ஸஹாபாக்கள்

பேட்டை அரபிக்கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றியபோது மவ்லவி BA கலீலுர்ரஹ்மான் ரியாஜி வெளியிட்ட நூல் உத்தம ஸஹாபாக்கள் விலை 1 ரூ 25 பைசா, 112 பக்கங்கள் 1961 இல் வெளிவந்த நூல் இது. புண்ணிய சீலர் பதினேழு பேர்களின் வரலாற்றுச் சுருக்கத்தை பதிமூன்று தலைப்புக்களில் தந்த நூல் இது

மௌலானா அபுல்கலாம் ஆஸாத்

இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரும் இந்த விடுதலைப்போரின் தள நாயகருமான மௌலானா அபுல்கலாம் ஆஸாத் உர்துவில் எழுதிய நூல் ஷஹீதே ஆஃஸம் இமாம் ஹுஸைன் (ரலி) ஹிஜ்ரி 1395 இல் BA கலீலுர்ரஹ்மான் தமிழில் வெளியிட்டது.

கர்பலா

ஹுஸைன் (ரலி) வீர வரலாறு ஒவ்வொரு முஸ்லிம் இளைஞனையும் வீறு கொண்டு எழுந்திடச் செய்யும் ஆற்றல் உள்ளது.

அசத்தியத்திற்கு எதிராக அவர்கள் நடத்திக் காட்டிய நெஞ்சரமிக்கப் போராட்டம் எவரையும் சிந்திக்கத் தூண்டுவது

கொடியேன் யசீதிடம் சிரங் கொடுத்துப்புகழ் பெற்றார்களே தவிர கரங்கொடுத்து இழிவைத் தழுவினார்களில்லை.

ஹூஸைனின் படுகொலை உண்மையில் யஸிதின் மரணமேதான் ஒவ்வொரு கர்பலாவிற்குப் பிறகும் இஸ்லாம் புத்துயிர் பெற்று எழுகிறது என்ற இந்திய சுதந்திரப் போரின் மணி விளக்கு மௌலானா முஹம்மதலி ஜவஹரின் வைரவரிகளை சொல்லிக்கொள்ளலாம்.

அரிய ஆராய்ச்சி வரலாற்றுத் தொடர்பு

உலகில் கர்பலா வரலாற்றைக் கூறும் நூல் எம்மொழி யிலேனும் உண்டா என்று தேடிப்பார்த்ததில் அப்படி ஒரு நூல் இல்லை (15.7.1927). எனவே ஹஸரத் இமாம் ஹூஸைன் (ரலி) அவர்கள் வரலாற்றை முறையாகத் தொடுத்துள்ளேன் நிகழ்ச்சிகளை பொறுக்கி எடுப்பதில் மிகுந்த ஆராய்ச்சியும், கடும் பிரயாசையும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அளவு துருவி ஆராயப்பட்ட இந்த நிகழ்ச்சிகளை வரலாற்றுத் தொகுப்பு வேறு இடத்தில் கிடைப்பது அரிதாகும் என்று மௌலானா அபுல்கலாத் ஆசாத்தே முன்னுரையில் கூறியது நூலை அற்புதமாக தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டவர் கலிலுர் ரஹ்மான் ரியாஜி.

இதனுடன் தப்லீக்கின் சிறப்பு, தொழுகையின் சிறப்பு, ரமலானின் சிறப்பு, ஸதகாவின் சிறப்பு போன்ற பளாயிலெ ஆஃமால் நூலின் மொழி பெயர்ப்புக்களை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து தந்தார்கள்.

முஸ்லிம்களின் தாய்மார்கள்

எட்டு ரூபாய் விலையில் பேட்டை ரஹ்மத் பதிப்பகம் 1967 இல் வெளியிட்ட 110 பக்கங்களைக் கொண்ட நூல் முஸ்லிம்களின் தாய்மார்கள் அண்ணலார் (ஸல்) அவர்களின் வாழ்க்கைத் துணைவியர், இஸ்லாமியரின் தாய்மார்கள் பற்றிய நூல் அது

ஹஸ்ரத் – கதீஜா (ரலி) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி)

ஹஸ்ரத் ஸவ்தா (ரலி) ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி)

ஹஸ்ரத் ஜைனப் பின்தி கசிமா (ரலி)

ஹஸ்ரத் உம்முஸலமா (ரலி)

ஹஸ்ரத் ஜைனப்பின்த் ஜஹ்ஷ் (ரலி)

ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) ஹஸ்ரத் உம்முஹபீபா (ரலி)

ஹஸ்ரத் ஸபிய்யா (ரலி) ஹஸ்ரத் மைமூனா (ரலி)

ஆகிய இஸ்லாமிய அன்னையர் வாழ்க்கைக் குறைப்பும், பலதாரங்களை அண்ணலார் (ஸல்) திருமணம் செய்ததற்கான விளக்கமும் அடங்கிய நூல் அது.

தீமை ஒழித்த முஸ்லிம்கள்

பத்தனா விலையில் (62 பைசா 100 பைசா ஒரு ரூபாய்) 54 பக்கங்களில் வெளியான நூல் மௌலவி BA கலிலுர் ரஹ்மான் ரியாஜியின் தீமை ஒழித்த முஸ்லிம்கள் நன்மைகள் நலிந்தும் தீமைகள் மலர்ந்தும் நல்லதை ஏவி தீமையை தடுத்து நிறுத்து சக்திகள் குன்றியும், உள்ளதை உரைப்பதற்கு உண்மையாளர்கள் குறைந்தும் காணப்படும் இக்காலத்தில் அனைவரும் அவசியம் படிக்க வேண்டிய அற்புத நூல்

மௌலானா அப்துர் ரவூப் ரஹ்மானீ

தீமை ஒழித்த முஸ்லிம்களின் வரலாற்றை மௌலானா அப்துர் ரவூப் ரஹ்மானி, தாருல் உலூமில் கட்டுரையாகத் தந்தார்கள்.

இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

இமாம் கஸ்ஸாலி (ரஹ்) இதுகுறித்து கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இவைகளையும் தனது ஆய்வில் கிடைத்த கருத்துக்களையும் கொண்டு கலிலுர் ரஹ்மான் ரியாஜி தந்த நூல் இது.

கரத்தினால் தவறுகளை சீர்திருத்தல், நாவினால் சீர்திருத்தல், மனதால் வெறுத்தல் என கரத்தால், நாவால், மனதால் தீமையை அகற்றிய நிகழ்ச்சிகளை அற்புதமாகக் தந்துள்ளார்கள் மௌலானா BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி

மத்ஹப் சட்டங்களின் அடிப்படை

14 ரூபாய் விலையில் மவ்லானா மவ்லவி அல்ஹாஜ் BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் கொடுத்த மத்ஹப் சட்டங்களின் அடிப்படை என்னும் நூல் 130 பக்கங்களில் வந்துள்ளது.

B.A. கலீலுர்ரஹ்மான் ரியாஜி

பேட்டை ரியாலுல் ஜினான் அரபிக் கல்லூரியில் சில காலம் முதல்வராக இருந்த திருநெல்வேலி பேட்டை மௌலானா மௌலவி B.A. **கலீலுர்ரஹ்மான் ரியாஜி** அவர்கள், ஸூரத்துல் பாத்திஹாவிற்கு விரிவுரையை தமிழில் 1961 அக்டோபர் 'ரஹ்மத்' இதழில் இருந்து எழுதிவந்தார்கள். அதனை 1979 இல் 'உம்முல்குர்ஆன்' என்ற சிறு நூலாக வெளியிட்டார்கள்.

தொழுகையில் தவறாமல் ஓதப்பெறும் இவ்வத்தியாயத்தின் பொருளையும் கருத்துரைகளையும் உணர்ந்து தொழுதால் அந்தத் தொழுகை எத்துனை ஜீவசக்திமிக்கதாய் அமையும் என்பதனைக் கருத்தில் கொண்டு இதற்கு மிகப்பெரும் குர்ஆன் விரிவுரைகளான தப்சீர்கபீர், தப்சீர் பைலாவீ, ரூஹல்பயான், தப்சீர் இப்னுகதீர், ஆகியவற்றிலிருந்து கருத்துகளைச் சேகரித்து 'ரஹ்மத்' மாத இதழின் ஆரம்ப காலப் பிரதிகளில் இருந்து தொடர்ந்து எழுதி வந்ததை தூத்துக்குடி A.M. **சம்சுத்தீன்** BA. அவர்களின் உதவியைக் கொண்டு நூலாக்கினார்கள்.

சூரத்துந்நூர் உரையை ரஹ்மத் இதழில் 1975 இல் இருந்து தொடர்ந்து எழுதி வந்தார்கள். அற்புதமான அந்த உரை விளக்கம் நூல் வடிவம் பெறவில்லை. விரைவில் நூல் வடிவம் பெற இருப்பதாக அவரது புதல்வர் மௌலவி B.A. K. **அப்தூர் ரஹீம்** அவர்கள் தெரிவித்தார்கள். மௌலவி கலீலுர்ரஹ்மான் ரியாஜி அவர்கள் திருகுர்ஆனின் சிறிய சிறிய அத்தியாயங்களுக்கும் ரஹ்மத் இதழில் அவ்வப்போது உரை எழுதியுள்ளார்கள்.

ரஹ்மத் பத்தாம் ஆண்டு நிறைவு மலர்

பேட்டையில் மௌலானா BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் துவங்கிய 'ரஹ்மத்' மாத இதழின் பத்தாம் ஆண்டு நிறைவு மலர் அற்புதமாக 1970 இல் வெளிவந்தது.

அல்லாமாஸய்யித் சுலைமான் நத்வீ

இறுதி நபி அவர்களின் இணையில்லாத் தூது எனும் அல்லாமா ஸய்யித் சுலைமான் நத்வீயின் கட்டுரையின் தமிழாக்கம் செய்து மௌலானா BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி வெளியிட்டார்கள்.

அல்குர்ஆன்

அல்குர்ஆன் ஓர் அறிமுகம் முன்னுரை, இறைத்தூதர்களும் வேத வெளிப்பாடும், குர்ஆன் மஜீது மாபெரும் முஃஜிஸா, கிரா அத் கலை வரலாறு. இல்லறத் துணைவியர் இஸ்லாமிய உலகுக்கு அளித்த ஹதீதுகள் (நபி(ஸல்) பொன் மொழிகள்), அஜ்மாவுர் ரிஜால் கலை அறிஞர் திலகம் இமாம் அபூதாவூது (ரஹ்), இலக்கிய மேதை இமாம் திர்மிதி (ரஹ்) அஞ்சாநெஞ் சர் இமாம் நஸாயி (ரஹ்), இமாம் இப்னுமாஜா (ரஹ்), ஸிஹாஹ்ஸித்தாவின் விரிவுரைகளும் ஆசிரியர்களும், ஷரி அத் சட்டத்தின் மாண்பு, இஜ்மாஃ என்றால் என்ன?, கியாஸ் பற்றிய விளக்கம், ஷரீ அத் சட்டம் உருவானது எவ்வாறு?, பிக்ஹு" கலை வளர்ந்த வரலாறு, அறிவுச் சுரங்கம் இமாம் அபூஹனிபா (ரஹ்), முஸ்லிம் சட்டமும் திருத்தப்படுமாம், முஸ்லிம் தனியார் சட்டத்திலுள்ள முக்கிய பிரச்சினைகள், இப்படி கட்டுரைகள் பல இஸ்லாமிய ஷரீ அத் மலரில் தந்தவர் மௌலானா BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி

சீரத் மலர்

ரஹ்மத் மாத இதழின் 25ம் ஆண்டு வெள்ளிவிழா மலரை சீரத் மலராக தானே தொகுப்பாசிரியராக இருந்து 493 பக்கங்களில் வெளியிட்டு மகிழ்ந்தவர் மௌலானா BA கலிலுர் ரஹ்மான் ரியாஜி. அதில் உள்ள தலைப்புகளின் சாரம் அதிசயிக்க வைக்கிறது.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் நபிப்பதவி, நபிமார்களின் தனிப்பெரும் அந்தஸ்து, இறை தூதர்கள் மீது ஈமான், அஞ்ஞான இருள் படர்ந்திருந்த அரேபியா, நபி பெருமானார் (ஸல்) அவர்களின்

புனித பரம்பரை, நபி பெருமானார் (ஸல்) அவர்களின் வருகை குறித்த முந்தைய வேதங்கள், ஹலீமா அம்மையாரின் மடியில் மா நபி

புனித இஸ்லாம்

புனித இஸ்லாம் பரவிய புதுமை கேளீர், மன்னர் நபியின் மதீனா பயணம், அப்பாஸிய ஆட்சியில் உளவுத்துறை, கோமான் நபியின் குணப்பண்புகள், கருணைக் கடல் காதி முந் நபி, உலகம் போற்றும் உத்தம நபி

டாக்டர் அத்துல் ஜந்தாய்

அரபியில் டாக்டர் அத்துல் ஜந்தாய் தந்த, முஹம்மத் ரசூலுல்லாஹ் (ஸல்) ஒரு, முன் மாதிரிப் பிரஜையின் அந்தஸ்தில், உருது கட்டுரையை தமிழில், மொழியாக்கம்,

நானிலம் சிறக்கவந்த நாதர் நபீ, இதோ எங்கள் பெருமானார், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், தரணி போற்றும் சொற்பொழிவாளரின் தபூக் போர்முனைப் பேச்சு, மானுடத்துவம் நிறைவுபெற நபிமார்களின் நெறிமுறை தேவை, முஹம்மது நபி(ஸல்) அவர்களின், வரலாறு முழு உலகுக்கும் முன்மாதிரி, வரலாற்று ஒளியில் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம், சம்பூரண வாழ்க்கை, அனைத்துச் சிறப்பினையும் தனித்துப் பெற்ற அண்ணல் நபீ, வள்ளல் நபியின் வாழ்வும் வாக்கும் இறுதி நபி அவர்களின் இணையில்லா தூது, வள்ளல் நபி காட்டிய வாழ்வு நெறி, மௌலானா BA.கலீலுர்ரஹ்மான் ரியாஜி அவர்கள் அண்ணலார் (ஸல்) குறித்து எழுதிய கட்டுரைகள் அற்புதம்; அனைவரும் அவசியம் வாசித்தறிய வேண்டியது

“ஜமாஅத்துல் உலமா சபை”

1959ம் ஆண்டு மௌலானா மௌலவி S.N.ஹுசைன் முஹம்மது (ஸகீர் ஹஜ்ரத்) கானலில்லாஹி அவர்கள், மௌலானா மௌலவி M.O.முஹம்மது கனி ஆலிம், மௌலானா மௌலவி B.A.கலீலுர்ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் ஆகிய மூவரும் கையெழுத்திட்டு உலமா பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள் என ஒரு துண்டுபிரசுரம் வெளியிட்டிருந்தனர். வயது மூப்பு அடிப்படையில் வரிசை கிரமமாக கையொப்பம் இட்ட அப்பிரசுரத்தின் வாசகங்கள் தமியேனால் எழுதப்பட்டு, எனது மேற்பார்வை

யிலேயே அச்சிடப்பட்டிருந்தது. அதில் இஸ்லாமிய சமுதாயத்தின் முதுகெலும்புகளான உலமா பெருமக்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதை வலியுறுத்தி மதுரையில் ஒன்று திரளும்படி அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.

ஸகீர் ஹஜ்ரத் அவர்கள் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு வருகவென்ற அந்த வேண்டுகோளுக்கு உலமா பெருமக்களுக்கிடையேயும் சமுதாய மக்களிடையேயும் பெரும் வரவேற்பு ஏற்பட்டது. நமது இந்த அழைப்பை ஏற்று அன்றைய மிகப்பெரும் **ஆலிமான் அல்லாமாஜியாவுத்தின் அஹ்மது அமானி ஹஜ்ரத்** அவர்களும் வருகை தந்திருந்தார்கள். மூத்த ஆலீம் என்ற அடிப்படையில் அமானி ஹஜ்ரத் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

உலமா பெருமக்களின் இக்கூட்ட அமைப்பிற்கு **சென்னை மாநில ஜமா அத்துல் உலமா**" என பெயரிடப்பட்டது. இச்சபைக்கு கீழ்காணும் பெரியோர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. **நிரந்தர கௌரவத் தலைவர்** அல்ஹாஜ் மௌலானா மௌலவி ஷைகு ஆதம் சாஹிப் முப்தி அல்பாக்கியாதுஸ் ஸாலிஹாத் அரபிக்கல்லூரி வேலூர்.

2. **தலைவர்:** அல்ஹாஜ் மௌலானா மவ்லவி ஜியாவுத்தின் அஹ்மது அமானி ஹஸ்ரத் நாஜிர் அரபிக் கல்லூரி, லால்பேட்டை.

3. **உப தலைவர்:** மௌலானா மௌலவி ஹூஸைன் முஹம்மது ஆலிம் (சித்தயன் கோட்டை). அல்ஹாஜ் மௌலானா மௌலவி P.A.அபூபக்கர் ஆலிம் (உத்தம பாளையம்). அல்ஹாஜ் மௌலானா மௌலவி அபுஸ்ஸுவூது அஹமது அலிம் (விரிஞ்சிபுரம்). அல்ஹாஜ் மௌலானா மௌலவி அபுல் ஹஸன் ஷாதலி (தென்காசி, **காரியதரிசி**: மௌலானா மௌலவி முஹம்மது கனீ ஆலிம் (மதுரை)

உபகாரிய தரிசிகள்: மௌலானா மௌலவி B.A.கலிலுர் ரஹ்மான் ஆலிம் (பெரியகுளம்). மௌலானா மௌலவி அப்துல்ஹமீது ஆலிம் (கோட்டைக்குப்பம்). மௌலானா மௌலவி முஹம்மது ஷரபுத்தீன் ஆலீம் பெரியகுளம்.

மௌலானா மௌலவி முஹம்மது யாஸின் ஆலிம் (நெல்லிக்குப்பம்)

பொக்கிஷ்தார்: ஹாபீஸ் மௌலானா மௌலவி அப்துல்ஹமீது ஆலீம் (பள்ளப்பட்டி) மாநிலம் முழுவதிலிருந்தும் ஏறத்தாழ 52 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் பல செயற்குழு கூட்டங்களும் நடைபெற்று அரிய பல தீர்மானங்கள் நிறைவேற்றி செயலாற்றி வந்தனர்.

மாவட்ட சபைகள்: பின்னர் மாவட்ட ஜமா அத்துல் உலமா சபைகள் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை, தஞ்சை, தென்னார்க்காடு சென்னை செங்கை முகவை ஆகிய மாவட்டங்கள் இதுகாறும் பல அருந்தொண்டுகள் ஆற்றி வந்துள்ளன. ஏனைய மாவட்டங்களும் கிளைச் சபைகள் அமைத்து செயலாற்ற தவறவில்லை. இம்மாவட்ட் ஜமாஅத்துல் உலமா சபைகள். மார்க்கக்கல்வி பிரச்சாரம் பிரசுரம் மற்றும் மார்க்கத் தீர்ப்புகள், சமூக சீர்திருத்தம் முதலிய துறைகளில் வெகு சிறப்பாக செயலாற்றி வருகின்றன. சில மாவட்டங்களில் ஜமாஅத்துல் உலமா சபையின் செயல்பாடுகள் குறைந்துள்ளன எனினும் நாளடைவில் அவை சரிசெய்து கொள்ளப்படும் என நம்புகிறோம்.

(1983 தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபை மலர்)

அறுபத்தி மூன்று ஆண்டுகள் எட்டிய நிலையில் ஆலவிருட்சம் போல் பரவி வளர்ந்துள்ள ஜமாஅத்துல் உலமா சபையின் இளந்தலைமுறை உலமாக்கள், ஜமாஅத்துல் உலமா சபையின் பொறுப்பு தாரிகள் நிர்வாகிகள் அதன் தோற்ற வரலாறை

நன்றியுடனும் நெகிழ்ச்சியுடனும் நினைவில் வைக்க கடமைப்பட்டுள்ளார்கள். ஜமாஅத்துல் உலமா சபையின் தோற்ற வரலாற்றினை அடுத்த தலைமுறையினரிடம் அனுவளவு பிசகாது கொண்டு சேர்ப்பது நம் முன்னோர்களுக்கு நாம் காட்டும் நன்றிக்கடன்.

ஜமாஅத்துல் உலமா சபையின் செயல்முறைகள் மாநாட்டு விபரம் தீர்மானங்கள், வக்ப்போர்டில் பங்களிப்பு, அரபிக் கல்லூரிகளின் பாடதிட்டம், ஒருங்கிணைப்பு, முஸ்லிம் தனியார் சட்டம், வருங்கால செயல்திட்டம் இவை அனைத்தும்

1983 இல் தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமாவில் 5வது மாநில மாநாட்டு மலரில் தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமாவில் தோற்றமும் வளர்ச்சியும் என்ற கட்டுரை தந்துள்ளார்கள் மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி

1.3.1959 - மதுரை

மதுரை டவுன் சுங்கம் பள்ளிவாசல், மதரஸா மன்பவுல் அன்வார் ஹால் 1.3.1959 காலை 10 மணி

மௌலானா ஜியாவுத்தீன் அஹ்மத் அமானி

அல்லாமா மௌலானா ஜியாவுத்தீன் அஹ்மத் அமானி ஹஸ்ரத் தலைமையில் கூட்டம் நடந்தது

எஸ்.வி.எம்.அபுல் ஹஸனாத் ஆலிம்

பெரியகுளம் மௌலானா மௌலவி எஸ்.வி.எம்.அபுல் ஹஸனாத் ஆலிம் சாகிப் கிராஅத் ஓதினார்கள்.

அல்லாமா அமானி

அல்லாமா அமானி ஹஸ்ரத் அவர்கள் உரை தந்தார்கள்

மௌலானா அல்லாமா எஸ்.என்.ஹூஸைன் முகம்மது சகீர் ஹஸ்ரத்

மௌலானா அல்லாமா எஸ்.என்.ஹூஸைன் முஹம்மது சகீர் ஹஸ்ரத் அவர்களும் கருத்துரை தந்தார்கள்.

மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி

இந்தக் கூட்டத்தில் மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஜமா அத்துல் உலமா சபையின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார்கள். (சென்னை மாநகர ஜமா அத்துல் உலமா பேரவை 25.6.1972 முதல் 24.2.1975 வரை ஆற்றிய அறப்பணிகள் நூல் பக்கம் 3)

மௌலவி ஷைகு ஆதம் சாகிப்

வேலூர் அல்பாக்கிய துஸ்ஸாலிஹாத் அரபிக் கல்லூரியின் முதல்வர் முப்தி நாஸிர் அல்ஹாஜ் மௌலானா மௌலவி ஷைகு ஆதம் சாஹிப் நிரந்தர கௌரவத் தலைவராகத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மௌலவி ஜியாவுத்தீன் அகமது அமானி

லால்பேட்டை நாஸிர் அரபிக்கல்லூரி பேராசிரியர் அல்ஹாஜ் மௌலானா மௌலவி ஜியாவுத்தீன் அஹமது அமானி ஆலிம் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஹூஸைன் முகம்மது ஆலிம்

சித்தையன் கோட்டை மௌலானா மௌலவி ஹூஸைன் முஹம்மது சகீர் ஆலிம் துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

P.A.அபூபக்கர்

அல்ஹாஜ் – மௌலானா மௌலவி P.A.*அபூபக்கர் ஆலிம், உத்தமபாளையம் துணைத்தலைவரில் இன்னொருவர் ஆவார்*

அபுஸ் ஸுஊது அஹ்மது ஆலிம்

விரிஞ்சிபுரம் அல்ஹாஜ் மவ்லானா மௌலவி அபுஸ் ஸுஊது அஹ்மது ஆலிம் பாகவி மற்றொரு துணைத் தலைவர்

மௌலவி அபுல்ஹஸன் ஷாதுலி

எனது பிரியத்திற்குரிய வழிகாட்டியுமான எனது ஆன்மீக

ஆசான் மௌலானா மௌலவி எம்.இ.எம்.அபுல் ஹஸன் ஷாதுலி சாஹிப் பாஜில் பாகவி நூரிய்யி தேவ்பந்தி நிறுவனர் ஜமாஅத்துல் உலமா மாத இதழ் (இவர்களின் வாழ்க்கை வரலாற்றினை இறைவன் நாடினால் எளியேன் எழுதிட முடிவெடுத்திருக்கிறேன்)

நான்காவது துணைத் தலைவர் தென்காசியைச் சேர்ந்த இவர்கள் திருநெல்வேலியில் வாழ்ந்தவர்கள்.

மௌலவி முஹம்மதுகனி ஆலிம்

மதுரை மௌலானா மௌலவி முஹம்மது கனி

ஆலிம் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாநில துணைக் காரியதரிசிகள் நால்வர் சென்னை

மாநில ஜமாஅத்துல் உலமா அமைப்பிற்கு

துணைக் காரிய தரிசிகள் நால்வர்

மௌலானா மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி

மௌலானா அப்துல் ஹமீது ஆலீம் கோட்டைக் குப்பம்

மௌலானா முஹம்மது ஷரபுத்தீன் (பெரியகுளம்)

மௌலானா முஹம்மது யாஸீன் (நெல்லிக்குப்பம்)

பொருளாளர்

பள்ளபட்டி மௌலவி அப்துல் ஹமீது ஆலிம் பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாநில முழுவதும் 52 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

உத்தமபாளையம் மௌலவி

எஸ்.எஸ்.முகம்மது அப்துல்காதிர் பாகவி

ஈரோடு மௌலவி நைனார் முகம்மது ஹஸரத்

கோவை மௌலவி சையத் ஹாஷிம் சாகிப்

சேலம் மௌலவி தமீஜுத்தீன் பாகவி

பள்ளபட்டி மௌலவி அப்துல்ஹைபாக்கவி

திருச்சி மௌலவி அப்துஸ்ஸலாம் பாகவி

பெரியகுளம் மௌலவி எஸ்.வி.எம்.அபுல்ஹஸனாத் ஜமாலி

கடையநல்லூர் மௌலவி வி.யூ.ஏ.யூகப் அன்சாரி,

கம்பம் மௌலவி ஏ.சதக்கத்துல்லாஹ் பாகவி

சித்தார்கோட்டை மௌலவி அஹ்மத் இப்ராஹிம் பாக்கவி

கீரனூர் மௌலவி ஜி.எம்.ஸதக்கத்துல்லாஹ் ஸிராஜ் பாகவி

கூத்தாநல்லூர் மௌலவி ஹாபிஸ் இ.எம்.அப்துர் ரஹ்மான்

(எளியோனது பிரியத்திற்குரியவர்கள் அன்வாறுல் குர்ஆன் எனும் திருகுர்ஆன் விரிவுரை தந்தவர்கள் தென்காசியைச் சேர்ந்தவர்கள்)

நீடூர் மௌலவி எஸ்.பி.முகம்மது இப்ராகிம்

லால்பேட்டை மௌலவி அப்துல்லாஹ்

கோட்டைக்குப்பம் மௌலவி அப்துஸ் ஸமத் நத்வி

இவர்கள் செயற்குழுவில் பங்கேற்று பணியாற்றியவர்கள்

மதுரை, திருநெல்வேலி (1961) மாநாடுகளும் நடைபெற்றன.

தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா

சென்னை மாநில ஜமா அத்துல் உலமா சிறிது காலம் சோர்ந்திருந்தது. பின்னர் 1970 இல் புத்துயிர் பெற்றது.

5.4.1970 - 6.4.1970

காயல்பட்டினத்தில் 5.4.1970, 6.4.1970 இல் (தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா சபை என்ற பெயர் மாற்றத்திற்குப் பிறகு) நான்காவது மாநாடு நடைபெற்றது. தலைவர்

மௌலவி அஷ்ஷைகு தைக்கா அஹ்மது

அப்துல் காதிர் ஆலிம் சாகிப் கீழக்கரை

உப தலைவர்கள் மௌலவி முஹம்மது அபூபக்கர்

மௌலவி M.K.சய்யிது இப்ராஹிம் (காயல்பட்டினம்)

மௌலவி ரஹ்மத்துல்லா நீடூர்

மௌலவி அப்துல்லாஹ் லால்பேட்டை

மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி நெல்லை.

கூட்டுச் செயலாளர்கள்

மௌலவி பெரியகுளம் PK.முஹம்மது ஷர்புத்தீன்

மௌலவி GMS சிராஜ்பாகவி சென்னை

மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி பேட்டை.

பொருளாளர் மௌலவி NS.அப்துல் அஜீஸ்பாகவி நீடூர்

9.10.1977

மதுரை சுங்கம் பள்ளிவாசலில் தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.

லால்பேட்டை மௌலவி **K.A.முஹம்மது ஜக்கரியா** கௌரவ தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். **நீடூர் மௌலவி ரஹ்மத்துல்லா** தலைவரானார்.

பொதுச் செயலாளர்

பேட்டை மௌலானா மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

லால்பேட்டை மௌலவி அப்துல் ஜப்பார் பொருளாளரானார்.

மௌலவி ரஹ்மத்துல்லா சாஹிப் மறைந்தார்.

13.12.1981

மதுரை தெற்குவாசல் மஸ்ஜிதல் கூடிய தமிழ்நாடு மாநில ஜமாத்துல் உலமா சபை பொதுக்குழுக் கூட்டம் கௌரவத் தலைவர் **K.A.முஹம்மது ஜக்கரியா** அவர்களையே தலைவராக இருந்து பணியாற்றும்படி கேட்டுக் கொண்டது.

ஐந்தாவது மாநாடு

தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா சபையின் 5வது மாநாடு **12.2.1983, 13.2.1983** சென்னையில் நடைபெற்றது.

மாநாட்டு சிறப்பு மலர் **108** பக்கங்களில் வெளியானது மலர்க் குழுவில் மாநில ஜமாத்துல் உலமா பொதுச்செயலாளர் **மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி** கௌரவ ஆலோசகராக இருந்தார்கள். தலைவர் மௌலவி **K.A.நிஜாமுத்தீன் மன்பஈ** செயலாளர் மௌலவி M.அப்துல் பத்தாஹ் துணைச் செயலாளர் மௌலவி P.A.முஹம்மது யூசுப் ரியாஜி பொருளாளர்; T.M.அபூ உபைதா பாகவி

மதுரையில் அலுவலகம்

11.2.1983 அறிக்கையில் மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா மாநில மாநாட்டு மலரில் எழுதிய கட்டுரையில் மாநில சபைக்கு ஒரு அலுவலகம் அமைய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அவர்கள் எண்ணம் அல்லாஹ்வின் கருணையால் நிறைவேறி தற்போது மாநில ஜமா அத்துல் உலமா சபை தலைமை அலுவலகம் கோ.புதூர் அல்அமீன் நகரில் மதுரை தாருல் உலமா என்ற பெயரில் இயங்குகிறது.

மாநிலத் தலைமையகம்

அஹ்லுஸ் ஸுன்னத்வல் ஜமா அத் தமிழ்நாடு மாநில ஜமாஅத்துல் உலமா சபை மாநிலத் தலைமையகம்.
12.5.2018, 13.5.2018 அன்று மதுரையில் கே.புதூரில் அல் அமீன் நகரில் நடைபெற்றது. ஆறாயிரம் சதுர அடியில் தாரூல் உலமா என்ற பெயரில் ஜமா அத்துல் உலமா சபையின் தலைமையகம் கம்பீரமாக உருவாக்கப்பட்டுள்ளது.

P.A.காஜா முஈனுத்தீன் பாகவி ஹஸ்ரத்

தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா சபையின் தலைவராக மேலப்பாளையம் **மௌலானா மௌலவி ஹாபிழ் அல்ஹாஜ் P.A.காஜா முஈனுத்தீன் பாகவி ஹஸ்ரத்** அவர்கள் தற்போது சிறப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். **டாக்டர் மௌலானா மௌலவி V.S.அன்வர் பாதுஷாஹ்** சபையின் செயலாளராகப் பணியாற்றுகிறார் மலரும் நினைவுகள் என்று உலமா சபை தேங்கை ஷரபுத்தீன் மிஸ்பாஹி தலைமையில் **தேங்கை ஷரபுத்தீன் மிஸ்பாஹி** தலைமையில் வெளியிட்ட நூலில் மௌலானா கலீலுர் ரஹ்மான் ரியாஜி (ரஹ்) வரலாறு 85வது பக்கம் முதல் 88வது பக்கம் வரை உள்ளது.

பொருளாளராக மௌலவி **தென்காசி மீரான் முகையதீன் மிஸ்பாஹி** இருந்து வருகிறார்கள்.

Dr.K.F.ஜலீல் அஹமது

நெல்லை மாவட்ட ஜமா அத்துல் உலமா பேரவைச் செயலாளராக பிரியத்திற்குரிய சகோதரர் மேலப்பாளையம் **டாக்டர் K.F.ஜலீல் அஹமது உஸ்மானி Phd** செயல்பட்டு வருகிறார்கள்.

தப்லீக் பணி

இஸ்லாமிய மார்க்கத்தின்பால் உண்மைகளை எடுத்துரைத்து மக்களை விழிக்கும் பணி தப்லீக் ஆகும். தமிழகத்தில் தப்லீக் பணியிலும் மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் சிறப்புடன் செயல்பட்டார்கள்.

நினைவுமலர்

1988 இல் வெளியான மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களின் நினைவு மலரில் தப்லீக் சேவை குறித்து விரிவான செய்திகள் உள்ளது.

25.5.1998 அன்று புதன் அதிகாலை எழுந்து சுபுஹ் தொழுகையை முடித்துக்கொண்டு ரஹ்மத் பத்திரிகைக்கு தேவையான இரண்டு பக்கம் நிரம்பிய கட்டுரை எழுதி முடித்துக் கொண்டு, நாவிதரை அழைத்து முகச்சவரம் செய்து காலைக்கடன்களை முடித்து சந்திக்க வந்த சிலருடன் உரையாடி குளித்து, நாஸ்டா சாப்பிட்டு வெளுத்த வெள்ளாடைகளை அணிந்து நறுமணம் பூசிக்கொண்டு வீட்டுக்குத் தேவையானதையும் கொடுத்துவிட்டு, வீட்டிலிருந்து வழக்கம்போல் சரியாக *9.30* மணியளவில் ரஹ்மத் காரியாலயத்திற்கு வருகை தந்தார்கள். காரியாலயத்தில் நுழைகின்ற போது மயக்கமாக இருக்கிறது என இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்து விட்டார்கள். ரஹ்மத் பணியாளர்கள் உடனே சோடாவை தெளித்ததும், தன் நிலையை சரி செய்து கொண்டு ஒன்றுமில்லை சிறிது மயக்கம்தான் என்றார்கள். சற்று நேரத்தில் சுயதேவைக்கு செல்ல வேண்டுமென கூறி அருகிலிருந்த பள்ளிக்குச் சென்று வாந்தியும் சேர்ந்து ஏற்பட்டது. உடனே டாக்டரிடம் காண்பித்ததில் மருத்துவமனையில் சேர்க்க வேண்டும்

என்றார். உடன் தனியார் மருத்துவமனையில் சேர்ந்து நான்கு பாட்டில் குளுக்கோஸ் ஏற்றப்பட்டது.

அன்றைய தினம் அவர்களின் உடல்நிலை சிறுகச் சிறுக தேறியது. பார்த்தவர்களும், டாக்டர்களும் நல்ல சுகமாகத்தான் இருக்கிறார்கள் என எங்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் 26.5.1988 வியாழன் அதிகாலை சரியாக 2– மணியளவில் அவர்களின் நாவு **லா இலாஹா இல்லல்லாஹ்** என்ற திக்ரை உரைக்க ஆரம்பித்தது. தனது வலது கரத்தை உயர்த்தி ஆள்காட்டி விரலால் யாரையோ தண்டிப்பது போன்று அசைத்தார்கள். அங்கும் இங்கும் சற்று புரண்டு படுத்து திடீரென எழுந்து சாய்ந்து புன்னகைப் பூத்தவர்களாக கண்களை மேல்நோக்கி உயர்த்தினார்கள்.

திருநெல்வேலி ஜில்லா, பேட்டையிலிருந்து இஸ்லாத்தின் புனித லட்சியங்களுக்காகவே நடைபெற்று வரும் ரஹ்மத் பத்திரிகையின் நிறுவனரும் பன்னூல் ஆசிரியரும், சமூகச் சீர்திருத்தத்திற்காகவே தங்கள் ஆயுள் முழுவதையும் அர்பணித்தவருமான மவ்லானா, மவ்லவி, அல்ஹாஜ் B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் 26.5.1988 வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இவ்வுலகைத் துறந்து அல்லாஹ்வின் சமூகம் சென்றுவிட்டார்கள் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். (இன்னலில்லாஹிவ இன்ன இலைஹி ராஜிவூன்.

பிரார்த்திப்போம்

கிருபையுள்ள ரஹ்மான் மர்ஹூம் அவர்களின் பிழைகளை மன்னித்து அவர்களுக்கு மேலான தரஜாவை கொடுத்தருள் புரிவானாக! ஆமீன்.

மறைந்த ரஹ்மத் ஆசிரியர் அவர்கள் ஆற்றிய அற்புதமான தொண்டுகள் ஏராளம்! அவர்கள் தங்களின் எழுத்தாலும், பேச்சாலும் சமூகச் சேவை செய்து வந்தார்கள். அவர்கள் எதை எழுதியும், பேசியும் வந்தார்களோ அவையே அவர்களின் வாழ்க்கையாக அமைந்திருந்தது. ரஸூலுல்லாஹி

ஸல்லல்லாஹூ அலைஹி வஸலம் அவர்களின் அடிச்சுவட்டை பின்பற்றி வரும் பெரியார்களில் அவர்களுக்கு தனிச்சிறப்பிடமுண்டு. பித்அத்துகள், அனாச்சாரங்கள் முதலிய மார்க்கத்திற்கு முரணான செயல்களை ஒழிப்பதில் தங்கள் வாழ்க்கையையே தியாகம் செய்தார்கள். இதன் காரணமாக பல்வேறு கஷ்டநஷ்டங்களுக்கும் அடக்குமுறைகளுக்கும், துன்புறுத்தலுக்கும் இலக்கான போதிலும் தங்கள் உறுதியிலிருந்து சற்றும் தளராது செயல்பட்டார்கள். மர்ஹூமவர்கள் விட்டுச்சென்ற பணி தொடர்ந்து நடைபெற து ஆ செய்யுமாறு வேண்டுகிறோம்.

26.5.1988

26.5.1988 இல் இவ்வுலக வாழ்வைத் துறந்த மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களின் உடல் பேட்டை முஹம்மது நயினார் பள்ளிவாசல் அடக்க ஸ்தலத்தில் நடைபெற்றது.

சிராஜூல் மில்லத் A.K.அப்துஸ்ஸமது

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் A.K.அப்துஸ் ஸமது அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. மார்க்க மேதைகள் பலரும் மௌலவி BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜியின் சிறப்பையும், உழைப்பையும் அறிவையும், ஆற்றலையும் தியாகத்தையும் பற்றிப் பேசினார்கள்.

இரட்டை குழல் துப்பாக்கி

தமிழ்மாநில ஜமா அத்துல் உலமா சபையும் இந்திய யூனியன் முஸ்லீம் லீகும் இரட்டைக் குழல் துப்பாக்கி போல செயல்பட வேண்டும் என்று மௌலானா மௌலவி ஹஸ்ரத் BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்கள் அடிக்கடி தன்னிடம் கூறுவதை அவர்களின் நினைவேந்தல் கூட்டத்தில் ஞாபகப்படுத்தி இரங்கற் உரை தந்தார். சிராஜூல் மில்லத் A.K.அப்துஸ்ஸமது அப்போது பேட்டை முகம்மது நயினார் பள்ளிவாசல் தெருவில் மௌலவி BA.கலீல் ரஹ்மான் ரியாஜி அவர்கள் வீட்டுக்கு எதிரில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் பங்கேற்ற பார்வையாளன் அடியேன்

தூய பணிகள்

மர்கஸுல் பயான் மாணவர் மன்றம்

பேட்டையில் தான் பயின்ற காலத்திலேயே மர்கஸுல் பயான் என்ற மாணவர் மன்றத்தை ஏற்படுத்தி இளைஞர்களுக்கு வழிகாட்டியவர்.

முதல் ரியாஜி

BA.கலீலுர் ரஹ்மான் ரியாஜி 5.2.1952 இல் முதல்முதலாக பேட்டை ரியாலுல் ஜினான் அரபிக் கல்லூரியில் முதல் ரியாஜி என்ற பட்டத்தையும் பெற்றார்கள்.

நுஸ்ரத்

நுஸ்ரத் என்ற பெண்கள் சிறுவர் சிறுமியருக்கான இதழ் நடத்த முயன்றபோது பெயர் பிரச்சினை காரணமாக அரசாங்கத்தால் மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜி அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. நுஸ்ரத் என்ற பெயரில் ஒரு வருடம் நடத்தினார்கள்.

நுஸ்ரத் என்ற மாத இதழுக்கு அரசு அனுமதி மறுக்கப்பட்டதற்கு காரணமாக அரசாங்க தரப்பில் சொல்லப்பட்ட காரணம் பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பூட்டோவின் மனைவி பெயர் நுஸ்ரத் பூட்டோ அவரின் பெயரால் பத்திரிகை ஆரம்பிக்க அனுமதி மறுக்கிறோம் எனக் கூறி இடை நிறுத்தம் செய்தனர்.

அல்மிம்பர்

பின்னர் அதே பெண்கள் சிறுவர் சிறுமியர் இதழின் பெயரை அல்மிம்பர் என்று மாற்றி அல்மிம்பர் மாத இதழினை சுமார் ஆறு ஆண்டுகள் அரசின் அனுமதியுடன் நடத்தினார்கள் பெண்கள் மத்தியில் இம்மாத இதழ் நல்ல வரவேற்பு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

பி.பி.சி செய்திகள்

தினமும் பி.பி.சி செய்திகளைக் கேட்டு அவைகளை குறிப்பெடுத்துக் கொண்டு, இஸ்லாமிய மார்க்க

விஷயங்களோடு, உலக விஷயங்களையும் இணைத்து வெள்ளிக்கிழமை ஜும் ஆ பிரசங்கம் ஆற்றும் சிறப்பை மௌலவி மௌலவி B.A.கலீலுர் ரஹ்மான் ரியாஜியின் ஆற்றலை மறக்கத்தான் முடியுமா?

1933ல் பிறந்து, 1988 இல் தனது 55 வயதில் மறைந்தாலும் இப்புவியில் அவர் ஆற்றிய எண்ணற்ற பிரசங்கங்கள் காற்றில் கலந்திருக்கிறது. அவர் படைத்த நூல்கள் 48க்கும் மேலான நூல்கள் கட்டுரைகள் நூற்றுக்கணக்கில் ரஹ்மத் மாத இதழில் மாதந்தோறும் அவர்கள் எழுதிய கட்டுரைகள், வாழையடி வாழையென வந்த அவர்களின் வாரிசுகள், இன்றும் அவர்களது நினைவைப் போற்றிக் கொண்டிருக்கிறது.

அல்லாஹ் அவர்களது அரும்பணிக்காக சுவர்க்கத்தைத் தந்தருள்வானாக அவர்கள் குறித்து சிறுபிரசுரம் எழுதி அடியேனுக்கு அவகாசம் தந்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் 20.5.1988 வெள்ளிக்கிழமையன்று திருநெல்வேலி பேட்டை, முஹம்மது நயினார் ஜுமுஆ மஸ்ஜிதில் தமிழ்நாடு மாநில ஜமா அத்துல் உலமா தலைவர் மர்ஹூம் மவ்லானா மவ்லவி அல்ஹாஜ் பி.ஏ.கலீலுர்ரஹ்மான் ரியாஜி அவர்கள் ஆற்றிய

கடைசி குத்பா பேருரை

பேரன்புமிக்க பெரியோர்களே,

சன்மார்க்க சகோதரர்களே! சங்கைக்குரிய ரமலான் மாதம் சீரும் சிறப்புடன் நம்மை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது; நாம் அதனை வணக்க வழிபாடுகளால் சிறப்பித்து வழியனுப்பி வைத்துள்ளோம். புனித ரமலானுக்குப் பின் முஸ்லிம் பெருமக்கள் சன்மார்க்கக் கல்வித்துறைகளில் கவனஞ்செலுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. ஷவ்வால் மாதத்திலிருந்து நமது கல்வியாண்டு தொடங்குகிறதென்றால் மிகையாகாது. மத்ரஸாக்கள் அரபிக் கல்லூரிகள் ரமலான் விடுமுறைக்குப் பின் ஷவ்வாலிலேயே ஆரம்பமாகின்றன.

“மார்க்கக் கல்வியினை கற்பது முஸ்லிம் ஆண், பெண் மீது கட்டாயக் கடமையாகும் என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள். மார்க்கக் கல்வியிருந்தாலே ஒரு முஸ்லிம் இஸ்லாமிய கடமைகளை சரிவரப் பின்பற்றி வாழ முடியும். பரஸ்பரம் புரிந்துகொள்ள வேண்டிய கடமைகளை உணர்ந்து செயல்பட முடியும்.

கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள். மனைவி கணவனுக்கு, சகோதரன், சகோதரனுக்கு சமுதாயத்துக்கு, தேசத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை உணர்ந்து செயல்பட முடியும்.

அன்பர்களே

பெற்றோர்கள், பிள்ளைகளுக்குச் செலுத்த வேண்டிய கடமைகள் குறித்து சற்று சிந்திப்போம்.ஒரு தந்தை தம் பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் மூன்று. 1 பிள்ளை பிறந்துவிட்டால் அதற்கு அழகிய பெயர் சூட்ட வேண்டும். 2.புரிந்துகொள்ளும் பருவம் எய்தி விட்டால் குர்ஆனை கற்றுக்கொடுக்க வேண்டும். 3 வயதுக்கு வந்துவிட்டால் திருமணம் முடிந்து வைக்க வேண்டும் என்று நபிபெருமானார் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

இந்த ஹதீதின் அடிப்படையில் இன்று நம்மில் சிலர் தம் பிள்ளைகளுக்கு எத்தகைய பெயர்களை சூட்டுகிறார்கள் என்பதை கவனிப்போம். குப்பை என்றும் பிச்சை என்றும் தங்கத்தாய், பொன்னுத்தாய் என்றும். சீனி சர்க்கரை, தக்கரை, நாகூர் என்றெல்லாம் பெயர் சூட்டுகிறார்கள். ஆலிம்களிடம் கேட்டு நல்ல பெயராக வைக்க வேண்டும் என்பதில் அக்கறை காட்டுவதில்லை. ஆண்களுக்கு பெண்கள் பெயரையும் பெண்களுக்கு ஆண்கள் பெயரையும் சூட்டி விடுகிறார்கள்.

அரபி அல்லாத பிறமொழி கலப்புடன் பெயர் வைப்பதாலும் பல பிரச்னைகள் உருவாகிவிடுகின்றன. ‘அல்லாஹ் பக்ஷ்’ என்ற பெயருடையவர் அரபு நாட்டுக்குச் சென்றவுடன் என்ன நீ ‘அல்லாஹ்’ என உனக்குப் பெயர்

வைத்திருக்கிறாய் என வியந்து முதலில் உன் பெயரை மாற்றி உங்கள் நாட்டு பத்திரிகைகளில் அறிக்கைகொடு என்று அனுப்பியதையும் அந்த அறிக்கையையும் பார்த்தோம். 'பக்ஷ்' என்பது ஃபார்ஸீவார்த்தை அல்லாஹ் கொடுத்த பிச்சை என்பது அதன் பொருள். அவ்வார்த்தை அரபியில் இல்லாததால் அரபுகள் குழப்பி போயிருக்கிறார்கள்.

எனவே தெளிவாக நபிமார்களின் பெயர்கள் அல்லாஹ்வின் அடிமைத்துவத்தை வெளிப்படுத்தும் அப்துல்லாஹ் அப்துர் ரஹ்மான் போன்ற பெயர்களை ஆண் மக்களுக்கு சூட்ட வேண்டும். பெண் குழந்தைகளுக்கும் வரலாற்றுத் தொடர்புடைய பெயர்களை வைத்தல் சாலச் சிறந்தது. திரைப்பட நடிகைகளின் பெயர்களை வைப்பதிலும் சரியான பொருளே இல்லாத வார்த்தைகளை புதுமை என்ற பெயரால் வைப்பதிலும் சிலர் இன்பங் காணுகிறார்கள். இது முற்றிலும் தவறாகும்.

இரண்டாவது நாம் ஈன்றெடுத்த செல்வங்களுக்கு உரிய காலத்தில் குர்ஆனையும் மார்க்கக் கல்வியினையும் கற்றுக் கொடுக்க வேண்டும். இன்று முஸ்லிம் பெற்றோர்கள் தம் மக்களுக்கு உலகக் கல்வியினை கற்றுக் கொடுப்பதில் காட்டும் அக்கறையில் நூற்றுக்கு ஒரு சதவீதம் கூட மார்க்க அறிவு புகட்டுவதில் குர்ஆனை கற்றுக் கொடுப்பதில் காட்டுகிறார்களில்லை. இந்தப் போக்கு அவர்களின் எதிர்கால இஸ்லாமிய வாழ்வைச் சீர்குலைத்து விடும்.

'உங்களில் சிறந்தோர் தானும் குர்ஆனைக் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவராவார்' என நபி பெருமானார் (ஸல்) அவர்கள் அருளியிருக்கிறார்கள்.

நம் பிள்ளைகளுக்கு ஆரம்ப முதலே இஸ்லாமிய கல்வி, கேள்விகளில் ஆர்வமூட்ட வேண்டும். இதனை முன்னிட்டே 1988 ஏப்ரல் 9. 10 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாபெரும் ஜமாஅத்துல் உலமா மாநாட்டில் இஸ்லாமியக் கல்வியுடன் மார்க்க ஒழுக்கத்துடன் அரசுப் பாடத்திட்டத்தையும் இணைத்து கற்பிக்கும் நர்சரி பள்ளிகள், ஆரம்ப பாடசாலைகள் ஆகியவற்றை அனைத்து

ஊர்களிலும் துவங்க வேணுமாய் தமிழக அனைத்து முஸ்லிம் ஜமாஅத்துக்களையும் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இத்தீர்மானப்படி முஸ்லீம் ஜமாஅத்தினர் நர்சரிப் பள்ளிகள் துவங்குவதற்கு முன்வர வேண்டும். நமது பிள்ளைகளை அங்கு சேர்த்துப் படிக்க வைக்க வேண்டும்.

அடுத்து குர்ஆன் மத்ரஸாக்களை சீராக இயக்கி குர்ஆன் ஓதாத மாணவ மாணவியரே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். வருடாவருடம் எத்தனை மாணவ – மாணவியர் குர்ஆன் ஓதி வெளியேறிவருகின்றனர் என்பதை பெற்றோர்களும் பொறுப்பாளர்களும் கண்காணிக்க வேண்டும். பெயரளவில் குர்ஆன் மத்ரஸாக்கள் இயங்கினால் போதாது. மாநில ஜமாஅத்துல் உலமாசபை, நாடு முழுவதும் குர்ஆன் மத்ரஸாக்களில் ஒரு சீரான பாட திட்டத்தையும் அவற்றையும் கண்காணிப்பதற்குரிய ஏற்பாட்டினையும் செய்திட திட்டம் தீட்டி வருகிறது. இன்ஷா அல்லாஹ் விரைவில் அதனைச் செயல்படுத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

முதியவர்களும் மார்க்கக் கல்வியினை கற்றுக்கொள்வதில் வெட்கப்படலாகாது. நீங்கள் அறியாதவர்களாயிருந்தால் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள் என வல்ல அல்லாஹ் உத்தரவிடுகிறேன். முப்பது வருடக்காலம். மஸ்ஜிதின் முத்தவல்லியாக இருந்த ஒருவருக்கு 'அத்தஹிய்யாத்' கூட ஓதத் தெரியவில்லை என்பதனை தஃலீம் ஹல்காகளின் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. எனவே இவ்விஷயத்தில் முதியவர்களும் ஆர்வங்காட்ட வேண்டும்.

ஷரீஅத்தின் சட்ட விளக்கங்களை தெளிவாகக் கற்றுத் தேறுவதற்கு நமது தமிழகம் முழுவதும் அறுபதுக்கும் மேற்பட்ட அரபுக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் நமது மாணவச் செல்வங்களைச் சேர்த்து மார்க்க மேதைகளாக உருவாக்கிட முன்வர வேண்டும்.

இத்தகைய நல்வாய்ப்பினையெல்லாம் நமது முன்னோர்கள் நமக்காக ஏற்படுத்தித் தந்துள்ளார்கள். அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதில் நாம் பின் தங்கிவிடக் கூடாது.

ஆக, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் தவறிழைத்தால் பெரும் பிரச்னைகள் ஏற்படும். கலீஃபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஒருவர் தன் மகனை அழைத்து வந்து கலீபா அவர்களே என் மகன் என்னை அடித்துத் துன்புறுத்துகிறான். இவனுக்கு நல்லுபதேசம் செய்யுங்கள் என்றார் தம்பி. பெற்றோரைத் துன்புறுத்துகிற விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சு. அவர்களுக்கு நீ செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன என்றவாறு கலீபா உபதேசித்தார்கள். உடனே அந்த மகன் அமீருல் மூஃமினீன் அவர்களே. எல்லாக் கடமைகளும் மகன் மீது மட்டும்தானா? தந்தை மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமை இல்லையா? என்று கேட்டார். 'ஏன் இல்லை? என்று கேட்டார். 'ஏன் இல்லை? ஒரு தந்தை தன் மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் உள்ளன அவனைப் பெற்றெடுப்பதற்காக கீழ்த்தரமான பெண்ணைத் தேர்ந்தெடுக்காதிருக்க வேண்டும். தாய் மோசமானவளாக இருந்தால், மகனின் வாழ்க்கையில் குறைவு உண்டாகும்.

இரண்டாவது அவனுக்கு நல்ல பெயர் சூட்ட வேண்டும். மூன்றாவதாக அவனுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கலீஃபா அவர்கள் கூறினார்கள். உடனே அந்த மகன் சொன்னார் என்னைப் பெற்றெடுப்பதற்காக நானூறு தீர்ஹங்களுக்கு விலைக்கு வாங்கிய சிந்தி அடிமைப் பெண்ணை என் தந்தை தேர்ந்தெடுத்தார். எனக்கு நல்ல பெயரும் வைக்கவில்லை. ஜுஃலு (மலவண்டு) என பெயர் வைத்துள்ளார். குர்ஆனிலிருந்து ஒரு வசனத்தைக் கூட எனக்குக் கற்றுக் கொடுக்கவில்லை என்று மகன் புகார் கூறினார். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் சினமுற்றவர்களாக தந்தையை நோக்கி

‘நீதான் உனது மகனைத் துன்புறுத்தியிருக்கிறாய், எழுந்து வெளியே செல்! என்று எச்சரித்து அனுப்பினார்களாம்.

மாடு என எண்ணி

இவ்வாறு ஸ்மர்கந்த் தேச ஆலிமிடம் ஒரு புகார் வந்தபோது மகனை விசாரித்ததில் தனக்கு குர்ஆனையோ ஒழுக்கத்தையோ தன் தந்தை கற்றுக்கொடுக்காமல் தன்னை விவசாயத்தில் ஈடுபடுத்தியிருப்பதாக மகன் கூறியதும் சரிதான் உம்மையும் ஒரு மாடு எனக்கருதி உன் மகன் உன்னை அடித்திருக்கிறான். அது உன் குற்றமே என எச்சரித்ததாகவும் **ஃபகீஹ் அபுல்லைஸ் சமர் கந்தீ (ரஹ்)** கூறுகிறார்கள்.

எனவே, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் தவறிழைக்கிறபோது எதிர்காலமே இருண்டுவிடுகிறது. அடியும் உதையுமே பரிசாகக் கிடைக்கிறது. இது விஷயத்தில் மிகுந்த முன் எச்சரிக்கையுடன் பெற்றோர்கள் செயல்பட வேண்டும்.

நமது மக்கள் சீர்கெடுவதற்கு சூழ்நிலையே காரணமாக அமைகின்றது. பெற்றோர்கள் தீய பழக்கவழக்கமுள்ளவர்களா யிருந்தால் பிள்ளைகளும் கெட்டுச் சீரழிகின்றனர், பெற்றோர்கள் திரைப்படங்கள் பார்ப்பதில் ஆர்வங்காட்டினால் மக்கள் அதில் மூழ்கித் திளைப்பது குறித்து சொல்லவா வேண்டும்? போதாதற்கு வீட்டு வீடு டி.வி.வீடியோக்கள் வைத்து நாளொன்றுக்கு நான்கைந்து படங்கள் பார்ப்பதற்கு வசதி செய்து கொடுக்கிறார்கள். இதனைக் கண்ணுறும் பிள்ளைகள் எப்படி உருப்படுவார்கள் **வீட்டுத் தலைவன் ‘தபலா’ தட்டிக்கொண்டு வீற்றிருந்தால், பிள்ளைகள் நடனமாடுவது குறித்து பிறரைப் பழிக்காதே** என்று ஓர் அரபுக் கவிஞர் பாடுகிறார்.

வாழ்ந்து காட்டுங்கள்

எனவே, பிள்ளைகளுக்கு முன் பெற்றோர்கள் சிறப்பாக இஸ்லாமிய நெறிமுறைப்படி வாழ்ந்து காட்ட வேண்டும். கடைசியாக தம் மக்களுக்கு நல்ல இடமாகப் பார்த்து திருமணம் செய்விக்க வேண்டும். நல்ல இடம் என்றதும்

வரதட்சணை வாங்கி, பெரிய இடமாகப் பார்த்து என்று பொருள் கொண்டு விடாதீர்கள்.

சன்மார்க்க ஒழுக்கமுள்ளவர்களாகப் பார்த்து என்பதே இந்த ஹதீதின கருத்து.

எல்லாம் வல்ல ரஹ்மான், நமது பிள்ளைகளுக்கு செலுத்த வேண்டிய கடமைகளை நிறைவாகச் செய்யும் பெற்றோர்களாக நம்மை ஆக்கி அருள்வானாக!

ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

நன்றி என்பது யாது?

ரஹ்மத் இதழில் ஜூன் 1988 ஷவ்வால் 1408 அன்று வெளிவந்தது

(இதுவே, ஆசிரியர் அவர்களின் கையால் 25.5.1988 அன்று புதன்கிழமை காலை சுபுஹு தொழுகைக்குப்பின் எழுதப்பட்ட கடைசி வாசகங்கள்).

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஜீவிய காலத்தில், ஒவ்வொரு தருணத்திலும், ஒவ்வொரு பணியின் போதும் அவர்கள் ஓதிவந்த ஏராளமான ‘து ஆக்கள்’ (பிரார்த்தனைகள்) ஏடுகளில் இடம் பெற்றுள்ளன. உணவு உட்கொள்ளும்போது புத்தாடை அணியும்போது, உறங்கச் செல்லும் போது, விழித்தெழும் போது, பழம் சாப்பிடும்போது, மஸ்ஜிதிற்குள் நுழையும் போது, குளியலறையிலிருந்து வெளியேறும்போது இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் தனித்தனி துஆக்கள் ஓதி வந்துள்ளார்கள்.

இவை அனைத்தின் நோக்கம், அல்லாஹு த ஆலாவால் வழங்கப்பட்டிருக்கிற சௌபாக்கியங்களுக்கு – நிஃமத்துகளுக்கு – அவனை நாவினால் புகழ்ந்துரைத்து நன்றி செலுத்துவதாகும். ஆனால், நாவினால் செலுத்தும் இந்த நன்றி உள்ளத்தின் பிரதிபலிப்பாகவும், மனோநிலையின் விளக்கமாகவும் அமைதல் வேண்டும்.

அல்லாஹுத ஆலா, நம்மவருக்கு வழங்கியிருக்கிற உடல் சம்பந்தமான பாக்கியங்களுக்கு நாம் பின்வருமாறு நன்றி

செலுத்த வேண்டும். நமது கை, கால்களை இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் ஈடுபடுத்தல் வேண்டும் அவற்றால், உடல் சம்பந்தமான பாக்கியங்களில் ஏதேனுமொன்றை இழந்திருக்கிறவர்களுக்கு சேவை செய்தல் வேண்டும். சான்றாக, ஊனமுற்றோர்; இயலாதோர்; நோய்வாய்ப்பட்டிருப்போர், ஏதெனுமொரு உடல் சக்தியை இழந்திருப்போர், உறுப்புக்களை இழந்தோர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

பொருள் சம்பந்தப்பட்ட (நிஃமத்) பாக்கியங்களுக்கு நன்றி செலுத்தும் முறையாவது, பொருள் பாக்கியம் இழந்திருப்போருக்கு அதிலிருந்து பங்கு கொடுக்க வேண்டும், பசித்தவருக்கு உணவளிக்க வேண்டும். தாகித்திருப்போருக்கு குடிநீர் கொடுக்க வேண்டும். ஆடையற்றோருக்கு ஆடைகள் வழங்க வேண்டும். சரக்கு இல்லாதவர்களுக்கு சரக்குகள் அளிக்க வேண்டும். இதுவே மெய்யான நன்றியாகும். *(அல்லாமா ஸய்யித் சுலைமான் நத்வீ (ரஹ்)*

(ஆதாரம்: 1988 ஜூன் ரஹ்மத் மாத இதழ்)



மௌலானா பி.ஏ.கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் உரையாற்றுகிறார்கள். அருகில் மௌலானா பி.எஸ்.கே. முகமது இப்ராஹிம் அவர்கள் மற்றும் மு.ந.அப்துர்ரஹ்மான் சாகிப் ஆகியோர் உள்ளனர்.

மௌலானாவின் புகழ் பெற்ற மாணவர்களில் சிலர்

மௌலானா **பத்ஹுல்லாஹ் மிஸ்பாஹி ஹஜ்ரத்**

மௌலானா **T.J.M.ஸலாஹுத்தீன் ரியாஜி ஹஜ்ரத் (அண்மையில் மறைந்தார்கள்)**

மௌலானா **முப்தி அஷ்ரப்அலி ஆலீம்** குர்ஆனின் குரல்

மௌலானா **முஹ்யித்தீன் மதனி** மதுரை

மௌலானா **மீர் முஹம்மது காதிரி டவுன் காஜி**, மதுரை

மௌலானா **முஹம்மது ஹனிபா ரியாஜி**, சிவகங்கை

மௌலானா **என்.எஸ்.என்.அப்துல் காதர் பாகவி** (உத்தமபாளையம்)

மௌலானா **அ.இ.அப்துர் ரஹ்மான் மிஸ்பாஹி** லால்பேட்டை.

மௌலானா **ஜமாலுத்தீன் ஹஜ்ரத்** சிங்கப்பூர்

மௌலானா **செய்யது இப்ராஹீம் இமாம்கஸ்ஸாலி** பேட்டை

போன்ற மாணவர்கள் தமிழகம் தழுவிய அளவில் நிறைந்து செயலாற்றி பலர் மறைந்து விட்டனர். சிலர் உயிரோடு இன்றும் சேவையாற்றிக் கொண்டு வருகின்றனர்.

இறையச்சம் மிக்க இறைநேசர் ரியாஜி ஹஜ்ரத் (ரஹ்)

மௌலானா B.A.**கலீலுர்ரஹ்மான்** ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் இபாதத் மற்றும் மார்க்க விஷயங்களில் காட்டிய நேர்மை அக்கறை அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தும் குறிப்பாக அவர்கள் வாழ்வில் நடந்த பல சம்பவங்கள். அதற்கு உதாரணங்களாகி போயின. பிதுரார்ஜித்மாகவே அவர்கள் ஆலீம் என்பதாலும் ஆலீம். குடும்பத்தினர் என்பதாலும் கடமையான விஷயங்களில் கவனஞ்

செலுத்தி வெகு அக்கறையோடும் பொறுப்புணர்வோடும் நிறைவேற்றுவதில் அவர்களுக்கு நிகர் அவர்களே தான்.

நெஞ்சத்தில் இறையச்சத்தை நிரப்பி நேரிய பாட்டையில் நடப்பதால் தவறினைக் கண்டு கொதித்தெழக் கூடியவர்களாக இருந்தார்கள். சன் மார்க்கத்திற்கெதிராக துர்பிரச்சாரம் மேற்கொள்பவர்களுக்கெதிராக அவர்களின் முகம் சிவக்கும் அளவிற்கு ஆவேச பேச்சுக்களும் படிப்போர் இதயம் படபடக்கும் அளவிற்கு அவர்களின் எழுத்துகளும் இன்றும் ஆவணங்களாக பரிணமிக்கின்றன. தவறினை உடனடியாக தட்டிக் கேட்பவர்களாக இருந்தார்கள். தயை தாட்சன்யம் இல்லாமல் சமரசம் ஏதும் செய்து கொள்ளாமல் செயல்படுவார்கள். தொழுகையில் ஒரு இமாம் தொடர்ந்து பிசகினால் அதனை உடனடியாக எடுத்துச் சொல்லி திருத்துவார்கள். இமாம்கள் ஓதும் குர்ஆன் வசனங்களில் அர்த்த புஷ்டியை ரியாஜி ஹஜ்ரத் அவர்கள். தொழுகையில் உணர்ந்தால் தனது மேனி சிலிர்த்தால் தொழுகை முடிந்தவுடன் உடனடியாக எழுந்து நின்று அந்த வசனத்தின் விளக்கத்தையும் அவை ஏற்படுத்திய தாக்கத்தையும் உடனடியாக வெளிப்படுத்தி அற்புதமாக பயான் செய்வார்கள். இது அவர்களின் இறையச்சத்தின் வெளிப்பாடு.

ரியாஜி ஹஜ்ரத் (ரஹ்) அவர்களின் கோலம் உருவ அமைப்பு காண்போரை திரும்பிப் பார்க்க வைக்கும். தங்க நிற மேனி வெள்ளை வெளோர் என்ற முகத்தில் இறைஜோதி ததும்பி வழியும் அல்லாஹ்வின் நூர் நூரானியத்தான முகத்தை வெளிகாட்டும். சிவப்பு துருக்கி தொப்பி அணிந்து அதன் மீதுள்ள கறுப்பு குஞ்சம் அசைந்தாட வெண்ணிற ஆடை அணிந்து குடை பிடித்து நடை போட்டு கம்பீரமாக வரும் காட்சி காண்போரை கவரும்.

ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் மேடை ஏறினால் கறுப்பு ஷேர்வானி அல்லது கறுப்பு வாஷ்கோட் அணிந்து கம்பீரமாக உரையாற்றும் காட்சி கண்ணசைக்காமல் காண வைக்கும் – அவர்கள் கூறும் கருத்துச் செறிவு கல்பில் இறங்கும் – மேலும்,

மீலாது மேடைகளிலும், பராஅத் மிஃராஜ் லைலத்துல் கதிர் இது போன்ற பரக்கத் பொருந்திய இரவுகளில் இராக்காலங்களில் மணிக்கணக்காக சளைக்காமல் மார்க்க விளக்கம் கொடுக்கும் மாமேதைதான் அல்லாமா கலீலுர்ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்கள் ஆவார்கள் இவையெல்லாம். இறையச்சத்தின் வெளிப்பாடுகள்.

மேலும் தனிப்பட்ட வாழ்க்கை முறையிலும் அப்பழுக்கற்றவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்கள் வாழ்ந்த பகுதி மக்கள் ஊரார் சாட்சியாக இருக்கின்றனர். மு ஆமலாத் மு ஆசிராத் எனும் கொடுக்கல் வாங்கல் முறையிலும் நேர்மையை கடைபிடித்தார்கள் குடும்ப வாழ்க்கை முறை பிள்ளைகளின் வளர்ப்புமுறை இவை அனைத்தும் ரியாஜி ஹஜ்ரத் அவர்களின் இறையச்சத்தை எடுத்துக்காட்டக் கூடியதாக அமைந்திருக்கிறது.

மௌலானா பி.ஏ.கலிலுர் ரஹ்மான் ரியாஜி ஹஜ்ரத் அவர்களும் இப்ராஹிம் சுலைமான் சேட் அவர்களும் படத்தில் உள்ளனர்.

மார்க்க மேதைகள் மறைவதில்லை நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் உணர்வில்..!

குறிப்புகள்

குறிப்புகள்

தங்க நிறமேனி, வெள்ளைவெளேர் என்ற முகம், இறைஜோதி ததும்பிய விழிகள், துருக்கி தொப்பி, அதன்மீது கருப்பு குஞ்சரம், வெண்ணிற ஆடை, குடைபிடித்து நடை பயின்று நடந்து வரும் காட்சி, வர்ணிக்கும் சொல்லில் அடங்காது. மேடையேறினால் எதிரிகள் தாடை உடையும் அளவுக்கு பேசும்திறன். கருப்பு ஷேர்வாணி, கருப்பு வாஷ்கோட் இவைகள் அணிந்து வரும் கம்பீரம் இவர்களின் உருவ அமைப்புக்கு சாட்சியாகும் காண்போரின் கண்ணுக்கு குளிர்தரும் காட்சியாகும்.

இத்தகைய பெருமகனாரின் வாழ்க்கை வரலாற்றை தோண்டியெடுத்து தொடுத்திட்ட பெருமை வரலாற்று ஆய்வாளர் செ.திவான் அவர்களுக்கே உரித்தானது. அற்புதமாக அழகாக தேவையான விஷயங்களை இரத்தினச் சுருக்கமாக தொகுத்துள்ளார் செ.திவான் அவர்கள்.

மூத்த இதழியாளர்
மௌலானா M.J.அன்வரி
துணை ஆசிரியர்
குர்ஆனின் குரல் மாத இதழ், மதுரை

ISBN No.
978-93-92351-20-4

9 789392 351204

விலை
ரூ.75/-